பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

ஏப்ரல் 2025



## உலகின் சரிபாதி பெண்
## அவள் புகழால்
## புது உலகு படைப்போம்

நேர்காணல் பக்கம் 36


100
இலக்கிய ஆளுமைகளின்
நூல்கள் வெளியீடு
முற்றிலும் இலவசம்
தமிழ்நெஞ்சம்
உதயம் 19
MUTUR JMI PVT LTD
jmi
MUTUR
SINCE 2016
2025 ஜூன் மாதத்தில் மாபெரும் வெளியீடு
வெளியீடுகளின் வகை
சிறுகதை
கவிதை
நாவல்
காவியம்
கட்டுரை
ஆய்வு
மொழிபெயர்ப்பு
சிறுவர் பாடல்
நிபந்தனைகளும் விதிமுறைகளும்
இலங்கையராக இருத்தல். அல்லது இலங்கையர் வெளிநாட்டில் தொழில் நிமித்தம் வசிப்பவராக இருத்தல்.
நூலின் வடிவமைப்பு, அட்டை வடிவமைப்பு மற்றும் ISBN இலக்கம் என்பன நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும்.
நூலின் உள்ளடக்கம் 88~124 பக்கங்களுக்கு உட்பட்ட வகையில் அமையப் பெறுவதோடு குறித்த நூலில் இடம்பெறும் உரைகள் (வாழ்த்துரை, அணிந்துரை, முன்னுரை) யாவும் நூலாசிரியரின் விருப்பத்திற்கு உரியது.
வெளியிடவுள்ள நூலின் தட்டச்சு செய்த ஆவணம் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தரப்படும் Google Form ஊடாக அனுப்புதல். (கையெழுத்து பிரதியாயின் அவற்றை தட்டச்சு செய்யும் செலவு நூலாசிரியருக்குரியது)
இவ்வாண்டு ஜூன் 29 ஆம் திகதி நூல் வெளியீடு இடம்பெறும். குறித்த வெளியீட்டு நிகழ்வில் தேர்வு செய்யப்படும் தரமான 100 நூல்கள் வெளியீடு செய்யப்படுவதோடு நூலாசிரியர்களும் கௌரவிக்கப்படுவார்கள்.
தாங்களுக்கு தேவையான நூல்களின் பிரதிகளை நூலாசிரியர், வாசகர்கள் பணம் கொடுத்து குறித்த நிகழ்வில் இடம்பெறும் நூல் காட்சியில் பெற்றுக்கொள்ள முடியும். 100க்கு மேற்பட்ட பிரதியாயின் முற்கூட்டியே அறியத்தரவும்.
குறித்த நூல்கள் நூலாசிரியரின் அனுமதியின்றி பதிப்பு செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ நிறுவனத்தினால் உரிமம் கோரப்படமாட்டாது என்பதோடு அந்நூற்களுக்கான பதிப்புரிமை ஆசிரியருக்கே உரித்தாகும்.
நூல் பதிப்பு மற்றும் வெளியீட்டுக்கான செலவுகள் மற்றும் கொடுப்பனவுகள் எதுவும் நூலாசிரியர்களிடம் இருந்து அறவிடப்படமாட்டாது. மேலும் எந்தவித மறைமுக கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
எதிர்வரும் மார்ச் 20 ஆம் திகதி வரை எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக உங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.
info@muturjmi.com
Mutur 04, Trincomalee
www.muturjmi.com
0262238593 / 0771020030
Mutur JMI
0717891887

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
உதயம் 1972 – ஏப்ரல் 2025

640



நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

நேச நெஞ்சங்களுக்கு இனிய வணக்கம்!

உலகில் பெரியவர், பலசாலி, பணக்காரன், ஏழை என்பதெல்லாம் நமது வெளிப்பார்வைக்கு மட்டுமே என்பது நிதர்சனமான உண்மை.

நாம் வாழும் காலத்தில் நம்மால் இயன்ற நல்ல காரியங்களை செய்து மனம் நிறைவடைய வேண்டும்.

அதைவிடுத்து தான் பெரியவன், பலசாலி என நினைத்து மார்தட்டிக்கொண்டு இறையச்சமின்றி வாழுதல் முறைக்கேடு.

நாம்எங்கிருந்துவந்தோம்,எங்கேப்போகப்போகிறோம் எங்கிற தன்னிலையறியாது வாழ்க்கையைத் தொலைத்து வாழ முற்பட்டுவிட்ட மனித நேயர்கள் இனிமேலாவது நல்லதை நினைத்து, தம்மால் இயன்ற நல்லதை செய்து மனம் நிறைவார்களென்று எதிர் பார்ப்போமாக...

சென்றமாதம் ரமழான் இஸ்லாமிய அன்பர்களுக்கு புனிதமான இறையச்சம் கொண்ட மாதமாக உண்ணா நோன்பிருந்து தர்மங்கள் செய்து கொண்டாடப்பட்டு ஈத் பெருநாளையும் கொண்டாடி மகிழ்கிறார்கள். அவர் களுக்கு தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு, அதில் எழுதி மகிழ்வெய்தும் எழுத்தாளர், கவிஞர்கள் சார்பாக நமது தோழமைகள் அனைவருக்கும் வாழ்த்துகளைச் சொல்லி மகிழ்வடைகிறோம்.

நல்லதைச்செய்து நட்புடன், நலமுடன் வாழ மனதில் உறுதிக் கொள்வோம்.

நன்றி!



என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# இலக்கு

.

எப்படி வாழ்ந்து வந்தார்
 இகத்தினில் மேதை எல்லாம்
எப்படி கடந்து வந்தார்
 இருக்கிற செல்லந் தர்கள்
எப்படி உயர்ந்து வந்தார்
 என்றடி நீயும் வைத்தல்
ஒப்பிலா வாழ்வாய் ஆகும்
 உயரிவினில்  தடையும் நீளும்

.

ஒவ்வொரு மனித ருக்கும்
 உளங்களோ வேறு வேறாம்
ஒவ்வொரு உள்ளத் திற்கும்
 உணர்வுகள் வேறு  வேறாம்
ஒவ்வொரு உணர்வுக் கும்தான்
 உடன்படும் இலக்கும் வேறாம்
இவ்வகை கருத்து ணர்ந்தே
 இலக்கினை அடைதல்நன்றாம்

.

உன்மனம் சொல்வ தென்ன
 உளம்படும் இலக்கும் என்ன
என்பதை ஆய்ந்து நன்றாய்
 எடுத்தடி வைத்தால் மட்டும்
நன்மைகள் கூடி உந்தன்
 நடப்புகள் மாறி மின்னும்
பொன்னென உச்சம் பெற்றுப்
 போழ்தெலாம் வெற்றி காண்பாய்

.

**ஏடி வரதராசன்**

## ஹைக்கூ / சென்ரியுக்கள்

குடித்தவர்கள் யாரோ
ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளன
தேநீர்க் குவளைகள்

♦♦♦

காலையில் தேநீர்
உற்சாகத்தைத் தந்து விடும்
நடைப் பயிற்சி

♦♦♦

தேநீரின் மணம்
தெருவெங்கும் பரவுகிறது
தேநீர்க்கடைப் பாட்டு

♦♦♦

அந்தி வெயில்
மாலையில் மெல்ல மறையும்
தூரத்தில் பறவை

♦♦♦



மாலையில் கடல்
நிறம் மாறி தெரிகிறது
அந்நியச் சூரியன்

♦♦♦

பெய்யும் மழையை
எப்போதும் தடுத்துக் கொள்ளும்
குப்பையில் காளான்

♦♦♦

மழை நின்றதும்
குடைப் பிடித்துக் கொள்கிறதே
ஊர்க் காளான்

♦♦♦

மரத்தின் விழுதுகள்
ஒன்றாக இணைந்து கொள்ளும்
பஞ்சாயத்துக் கூட்டம்

**சோ. ஸ்ரீதரன்**, இலங்கை

# படிப்பும் – படிப்பினையும்

**இதயமலர்**
மேற்கு தாம்பரம்.

படிப்பு என்பது என்ன? படிப்பினை என்பது என்ன? படித்ததால் பலனா? படிப்பினையால் பயனா? அனுபவம் அறிவாகி விடுமா? நல்லதோர் கேள்வி நான் உணர்கிறேன். தொடக்கக் கல்வி தொட்டு ஒரு குறிப்பிட்ட காலம் வரை தொடர்வது கல்வி. இக்கல்வியால் முடிவில் உன் பெயருக்குப் பின்னாலோ அல்லது முன்னாலோ ஒரு பட்டம் உனக்குச் சொந்தமாகிறது. அது உனது அடையாளமுமாய் ஆகிறது. படிப்பினை என்பது நாம் வாழும் காலம் வரை நமக்கு போதனை யாகிறது. நாளும் துணை வருகிறது. நல்லதையும் அல்லதையும் சொல்கிறது. கல்லூரிக்கல்வியில் படிப்பு என்பது படிப்பு மற்றும் செய்முறை என இரண்டினைக் கொண்டிருந்தாலும் இதை படிப்பினையோடு நோக்கும் போது கல்லூரிப் படிப்பு தோன்றுகிறது. செயல்முறையாகிறது. அனுபவத்தில் மொத்தமும் படிப்பாகவே காணும் படிப்பினையே

செயல்முறையான படிப்பினைக்கு காலநேரம் இல்லை. ஒவ்வொரு தடையும், ஒவ்வொரு தோல்வியும் கூட நமக்குப் படிப்பினையாகிறது. முட்டி மோதி மனக்காயங்களோடுதான் படிப்பினை அறியப்படுகிறது. படிப் பினையை அந்தக் காலங்களில் புத்தி கொள்முதல் என்று எழுதி வைப்பார் களாம்.

நட்டத்தைக் கூட நயமாக நான் பெற்ற படிப்பினை என்றெழுதும் பாங்கு நம்முடையது. எந்தவொரு படிப்பும் உடனடியாக பதில் தந்து விடாது. படிப்பினை உடனே களம் வந்து விடுகிறது. படிப்பும், படிப்பி னையும் சேரும் நேரத்தில் எந்தக் குறையும் இருக்காது. படித்தவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது கல்வியின் மேன்மையைக் கூறத்தான்.

எல்லா வகைப் படிப்பும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி விடுவதில்லை. மனனம் மதிப்பெண்களைத் தரலாம், புத்திக் கூர்மையைத் தந்து விடாது. ஒருவன் தபால் மூலம் தொழிற்கல்வி கற்று தேர்ச்சி பெறுகிறான். இந்த பழுதுக்கு இந்த வகையில் சரி செய்யலாம் என்றறிந்தவனுக்கு பழுதான பொருளின் பெயர்தான் தெரியுமே தவிர அது எப்படியிருக்கும் என அறியாததால் தன் பொருளை பழுது நீக்க மற்றவனிடம் கொண்டு போகின்றான்.

யாரிடம் கொண்டு போனானோ அவன் அதற்கான படிப்பை கற்கவில்லை என்றாலும் அது சம்பந்தமாக நிறைய

(பட்ட அறிவு என்ற அனுபவம்.) கொண்டு இருந்ததால் பழுது சரியானது. இங்கே படிப்பு என்ன வந்தது?

அனுபவம் என்பது மிகவும் அவசியம் கூட. நாடி பிடித்து உன் நோயைச் சொல்பவர் பலர் அனுபவக் கல்வியால்தான் சிறந்து விளங்கினார்கள். 'ஓலைச் சுவடியை படித்து ஒருவன் முன்னேற அவனைத் தொடர்ந்தவர்கள் அனுபவ அறிவைப் பெற்றவர்களாகின்றனர்'. இவர்கள் கோட்டும், சூட்டும் போட்டுக் கொண்டு இருக்க வில்லை.

வெளித் தோற்றத்திற்கும் அனுபவத் திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதை உணர வேண்டும் படிப்பினை என்பது உயர்வானது. எந்த தொழிற்கல்வியும் பயின்று தஞ்சை கோபுரமோ, கல்லணையோ கட்டப் படவில்லை. நூறு சதவிகிதம் அனுபவ அறிவே. இன்றைய நவீனத்தில் காண முடியாத எத்தனையோ கட்டிடங்கள், சிற்பங்கள் படிப்பினை தந்தவைகள்தான். படிப்பு இங்கே போட்டி போட முடிய வில்லை. போட்டியும் இல்லை. படிப்பினை என்பது அனுபவம். 'படித்தது மறந்தாலும் கலப்பிடமில்லாத அனுபவ அறிவு காலத்தை விஞ்சியும், மிஞ்சியும் நிற்கிறது'.

அனுபவம் உனக்கு வேண்டுமானால் மூத்தோர்கள் உன்னுடன் இருக்க வேண்டும். காலத்தின் கரைசல்களாய் பெரியவர்கள் வாழ்கிறார்கள். பெரிய வர்கள் துணையிருந்தால் உனக்கு

## போர்வைக்குள் மறைந்த வைரம்

எச்சில் உமிழ்ந்து
எதிர்த்துப் பேசிடும்...
உச்ச நேரத்தின்
உறுதியான பொறுமையது...

எச்சமயத்திலும் ஆங்கே
நிச்சயமாய்க் கொண்டிடும்...
மாவீரமே அல்லாமல்
மற்றொன்று ஏது...

கச்சிதமாய்க் காத்து
சச்சரவு பெயர்த்து...
ஒற்றுமையை வார்க்கும் பேறு
என்றும் போகாது கூறு..

ஆழும் அறியாமல்
காலை விடுதலும்...
அர்த்தம் புரியாமல்
பழித்து நகைப்பதும்...

கற்பூர வாசனைக்குக்
கழுதை ஒப்ப...
கருத்தாய் வேறெந்த
உவமை ஒக்கும்..

மாட்சிமை மனதிலடக்கி
அடக்கமாய் வாழ்பவர்...
சூட்சுமம் உலகத்துப்
பார்வை தனிலே...

போர்வைக்குள் மறைந்த
வைரம்தானே...

**பஸ்லா பர்ஸான்**
காத்தான்குடி, இலங்கை

என்றும் எதிலும் பயமில்லை என்பதை உணர வேண்டும். நீ தனியாக இருந்தால் உனக்கிருக்கும் படபடப்பில் உருப்படியான சிந்தனை உனக்குள் வராது. அங்கே பெரியவர்கள் இருந்தால் அதை விட மாமருந்து வேறில்லை.

நாட்டு மருத்துவமோ, பாட்டி வைத்தியமோ படிப்பினையால் வந்த அறிவுதான் என்றாலும் பயனளிக்கும்; என்றும் பயமில்லை. வெற்றுக் கூச்சலை விட விளையும் மௌனம் அர்த்தமுள்ளது தான். யாரையும் இவனுக்கு என்ன தெரியும் என்று இகழ்ந்து விடக் கூடாது.

ஒவ்வொருவனுக்குள்ளும் ஒவ்வொரு வகை திறமை உண்டு. உணர வேண்டும். படிப்பு மட்டுமே அறிவு என்று இருந்தால் வாழ்க்கை நகராது. வாழ்க்கை ஓட்டத்தில் படித்து, தெரிந்து கொள்ள முடியாத எண்ணற்ற நிகழ்வுகள் பல உண்டு. பாம்பு பிடிக்கவும், மீன் பிடிக்கவும், காளை அடக்கவும், கழனியில் வேலை செய்யவும், கட்டிடம் கட்டவும், சிலை முதலானவை செய்யவும் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். படிப்புக்குத் தொடர்பில்லாத பல விடயங்கள் நமக்குத் தேவையாக இருக்கின்றன. வழிமுறை வாழ்வில் அனுபவம் என்பது அருமையான தோழன். அனுபவம் யாரையும் என்றும் கை விடுவதில்லை. வாழ்க்கையில் தோற்றுப் போகாது இருக்க துணையாக இருப்பதும் அனுபவம்தான். இதற்கு எந்த பாகுபாடும் இல்லை. சாதி, மத, இன, மொழி பேதமுமில்லை. அனுபவம் கொண்டவர்களின் படிப்பினை படிப்போடு சேர்ந்தால் பயன் அதிகமுண்டு. ஒருவேளை நீ படிக்கவே இல்லையென்றாலும் உனக்கிருக்கும் அனுபவத்தால் உன்னால் வாழ முடியும். முன்னாலோ பின்னாலோ சில எழுத்துக்களைப் போட்டுக்கொண்டால் மட்டும் நீ வெற்றி பெற முடியாது என்பதை உணர வேண்டும். எல்லா வித படிப்பும் படிப்பினை தந்த பாடங்கள் தான். எதைப் படிக்க வேண்டும்? எப்படிப் படிக்க வேண்டும்? எங்கு படிக்க வேண்டும் என்று சொல்வது படிப்பினைதான். படிப்பு தோற்றாலும் படிப்பினை தோற்பதில்லை.

படிப்பில் உள்ள வார்த்தையும் (பாடங்கள்) படிப்பினையில் உள்ள வார்த்தையும் வேண்டுமானால் மாறி இருக்கலாம். சொல்லும் தீர்வு என்று ஒன்றுதான். படிப்பினை படிப்பை விஞ்சிக் கூட பயணப்படும். உறுதியாகச் சொல்ல வேண்டுமானால், அனுபவத்தில் சிறந்த படிப்பினை கொண்ட பெற்றோரோ, அவர் வயதுள்ள மற்றவரோ உன்னோடு இருந்தால் நீ என்றும் வெற்றி பெறுவாய். அவர்களின் நிழலில் நீயிருந்தால் நிச்சயம் உனக்கு தோல்வி வராது. எடுத்தெறியும் குணமின்றி எல்லோரையும் அரவணைத்துப் போகின்ற மனமிருந்தால் எதிர்கால பயமின்றி பயணிக்கலாம். படிப்பும் படிப்பினையும் துணையாக வேண்டும். இளமையும் முதுமையும் கலந்தே இருக்க வேண்டும். வீரமும் விவேகமும் போல.

பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ்
பார்வையில்



# மெட்டுப்போடு

## இன்னிசைப் பாடல் தொகுப்பு

இது கவிஞர் பாலமுனை பாறூக்கின் இரண்டாவது இசைப் பாடல் நூல்.

இசைப்பாடல் என்ற ஒரு இலக்கிய வகை இருந்தாலும் அதில் நாம் அவ்வளவு கவனம் எடுப்பதில்லை.

அதிகமான சந்தர்ப்பங்களில் பக்திப் பாடல்கள்தான் அந்த இடத்தை நிரப்பி வருகின்றன. அதன் கட்டுப்பாடுகள் கடினமானவை. மெல்லிசைமரபு வளர்க்கப் பட்டிருந்தால் இசைப்பாடல்களின் பிறப்பும் அதிகரித்திருக்கும்.

தமிழ் சினிமா இசையில் மட்டும் மூழ்கியதால் இலங்கையில் தமிழ் முஸ்லிம் களிடையே இதன் வாய்ப்புக்கள் அருகி விட்டன, அல்லது அழிந்து விட்டன. ஈழத்துப் பாடல்களின் மரணத்தோடு இருந்த மெல்லிய வாய்ப்பும் இல்லா தொழிந்தது.

முஸ்லிம்களுக்கென்றிருந்த வானொலி முஸ்லிம் சேவை இஸ்லாமிய கீதத்திற்கு கதவடைப்புச் செய்ததோடு அங்கும் வாசல்கள் மூடப்பட்டன.

முஸ்லிம் சேவையின் நிலைய ஒலிப் பதிவுப் பாடல்களால் உள்ளூர் இசைப் பாடலாசிரியர்கள், கவிஞர்கள் பயன




டைந்த ஒரு காலம் இருந்தது.

ஈழத்துப் பாடல்கள் இலங்கை மெல்லிசை மரபில் மட்டுமன்றி இசை வரிகளின் தரத்திலும் இலக்கிய உலகைத் திரும்பிப்பார்க்க வைத்தது.

இசைத்தரமும் இலக்கியத்தரமும் நேர் கோட்டில் பயணித்த பல ஆக்கங்களை ஈழத்துப் பாடல்கள் தந்தன. இலங்கைத் தமிழ் மெல்லிசை மரபை தனித்துவமான பாதையில் முன்னெடுத்ததில் அதன் சாதனை பெரியது, வரலாற்று பூர்வமானது. ஆனால் அது அழிய விதிக்கப் பட்டிருந்தது.

சிங்கள இசையின் வெற்றியின் பெரும் பகுதி மெல்லிசை மற்றும் அரை சாஸ்திரிய மெல்லிசையை வளர்த்ததும் பாதுகாத்ததும் தான். உலக அளவில் பேசுவதற்கு அவர்கள் தமது மெல்லிசை மரபை இன்றும்

தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சிங்களத் தொலைக்காட்சி நிலையங்களும் வானொலி நிலையங்களும் எல்லா ஒத்துழைப்புக்களையும் நிதமும் வழங்கிய வண்ணம் உள்ளன.

தங்களுக்கான இசை, இசைப்பாடல் என்பதில் அடங்கா வெறியுடன் அவர்கள் இயங்கி வருகின்றனர். மெல்லிசைப் பாடல்களின் இலக்கியத்தரம் பற்றி சிறந்த உரையாடல்கள் அவர்களிடையே உண்டு.

பாலமுனை பாறூக்கும் அவருக்கு உற்ற துணையாக விளங்கும் கோவிலூர் செல்வராஜனும் படாதபாடுபட்டு வருவதை இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க வேண்டும். அதற்கான கலாசார சூழல் அற்ற பின்னணியில் தமது முயற்சிகளை எதிர்பார்ப்பற்ற நிலையில் நிகழ்த்தி வருகின்றனர்.

பாடலாசிரியர் என்பது தனி அடையாளம்.

கவிஞர் ஒருவர் பாடலாசிரியராக அவதாரம் எடுப்பது இன்னொரு பரிமாணம். சினிமாப் பாடல்கள் ஊடாக கவிஞர் மு. மேத்தா நம் ரசனைக்குள் நுழைவது வெறும் வரிகளால் மட்டுமல்ல.

பாலமுனை பாறூக் இலங்கைப் பரப்பில், முக்கியமானவர். இது கவிஞர் ஒருவரின் இன்னொரு அவதாரம்.

இசையமைக்க ஏற்றதான இலகு மரபுக் கவிதைகளாகச் சில இசைப் பாடல்கள், புதுக்கவிதைப் பாணியில் அமைந்த சில இசைப் பாடல்கள் என மெட்டுப்போடு பாடல்கள் தொகுதி அமைந்துள்ளது.

இசைப்பாடல்(இலக்கியமாக) மட்டுமன்றி இவற்றுக்கு இசை அமைத்துப் பாடல்களாகவும்இவை வெளிவந்துள்ளன. கோவிலூர் செல்வராஜன் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார். கனிணி இசை வழங்கப் பட்டதாக அறிகிறேன். சமூக வலைத்தளங்கள் ஊடாக இவை ரசிகர்களைச் சென்றடைந்துள்ளன. பாடல்களை எழுதி அல்லது பதிப்பித்து விட்டு பாறூக் அமைதி காணவில்லை.

பொதுவாகப் பாடல் எழுதப்பட்டு இசை வடிவமும் வழங்கப்பட்டு ரசிகர்களைச் சென்றடைந்த பின்னரே பாடல் தொகுதிகள் வெளியிடப் பட்டுள்ளன.

இசைப்பாடல் என்பதை அதன் இறுதி வடிவம் வரை- ரசிகர்களின் காதுகளுக்கு விருந்தாகும் வரை - முழுமைப்படுத்தும் ஒரு கலைப் பணியை பாறூக் சாத்தியமாக்கி வருகிறார்.

மெல்லிசை அருகிச் சென்று கொண்டிருக்கும் சூழலில் அவரும் அவரது நண்பர்களும் ஒரு தொடர் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இசைப்பாடல்களுக்கு உயிரூட்டுவதில்வரிகளுக்கு முக்கிய பங்கு உள்ளது. இசை சரியாக எடுபடாவிட்டால் வரிகள் செல்வாக்கிழக்கிழக்க நேரும். ஒரே மாதிரியான, திகட்டும் வகையிலான ஒரு படித்தான சுழற்சிக்குள் இசை சிக்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

தற்கால சினிமா இசை, பாடல் வரிகளில் சாதகமான பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இஸ்லாமிய கீத இசை மரபிலும் அதை ஒத்த வளர்ச்சி நிலை மாற்றங்கள் தமிழ் நாட்டில் நிகழ்ந்துள்ளன.

இசை முரசு நாகூர் ஹனிபாவின் 'தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு 'பாடல் வரிகளும் இசையும் இலங்கையில் கவிஞர் எம். எச் . எம்.ஷம்ஸின் சமாதானப்

புறா பாடல் வரிகளும் இசையும் எனப் பல உதாரணங்கள் மனதில் வந்து போகின்றன.

நாகூர் ஹனீபாவின் பெரும் இசை நாதத்தைக் கைபிடித்து அழைத்துச் சென்று, உலகத்திற்கு ஒப்படைத்ததில் கவிஞர் ஆபிதீனின் வரிகளுக்குள்ள பெறுமானத்தை எப்படி நாம் மறப்பது.

இசைப் பாடல் ஆக்கம், கவிஞர்களால் செழுமை பெற்றுள்ள வரலாற்றைத்தான் இங்கு நினைவுபடுத்துகிறேன்.

அந்த வகையில் கவிஞர் பால முனை பாறூக்கின் பணி முக்கியமானது.

இந்தப் பாடல்கள் இசைப்பாடல்களாகவும் சாகித்யமாகவும் இலக்கிய உலகை அலங்கரிக்க வேண்டும் என்பதுதான் கவிஞரின் ஆசை.

பாடல்களை எழுதிவிட்டு அவர் அமைதி காணவில்லை. தனது சக்திக்குட் பட்ட வகையில் அவற்றைப் இசை கலந்த பாடல்களாக்கி சமூக வலைத்தளங்களில் வலம் வரச்செய்தார்.

பல பாடல்களை கோவிலூர் செல்வராஜன் பாடியுள்ளார். அவற்றுள் சில பாடல்களைக் கேட்டிருக்கிறேன்.

இவற்றை மீள ஒளிபரப்புச் செய்ய வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிய வில்லை. உள்நாட்டு மெல்லிசை, நமது இசை என்ற கருத்துக்கள் இலங்கையில் தமிழ் பேசுவோர் வட்டத்தில் மிகக் குறைவாகவே பேசப்படுகின்றன.

அனைத்திற்கும் தமிழ் சினிமா இசை போதுமானதாக உள்ளது. இந்தப் பாடல் களுக்கான இசை நிறைவானது என்று கூறமாட்டேன். ஆனால், கேட்டு ரசிக்கக் கூடிய சில பாடல்களையாவது தெரிவு செய்ய முடியும்.

அது வன்றி, கோவிலூர் செல்வராஜன் என்ற புகழ் பெற்ற பாடகர் - பாலமுனை பாறூக் என்ற புகழ் பெற்ற கவிஞரின் பாடல் வரிகள் - என்பதற்கு ஒரு இயல் பான பெறுமானம் உண்டு.

சில வருடங்களுக்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்தா அழகியல் பிரிவு விமர்சையாக நடத்திய பன்னாட்டு இசை- நடன விழாவில் கலந்து கொண்டிருந்தேன்.

அப்போது வண்ணாத்திக் கண்ட திறந்த வெளியில் நடந்த இறுதி நாள் இசை நிகழ்ச்சியையும் பார்க்கக் கிடைத்தது.

பல்கலைக்கழக மாணவ மாணவியரின் ஏற்பாடும் பங்கேற்பும் ஒன்று கலந்த நிகழ்ச்சி அது. வெளியில் இருந்து வந்த சில கலைஞர்களும் இதில் கலந்துகொண்டனர்.

நான் பார்த்த உள்ளூர் தமிழ் மெல்லிசை நிகழ்ச்சிகளில் மறக்க முடியாத நிகழ்ச்சி அது. அங்கு பாடப்பட்ட எல்லாப் பாடல்களுமே புகழ் பெற்ற ஈழத்து மெல்லிசைப் பாடல்கள்.

சிறிதும் சினிமாப் பாடல்கள் கலக்காத இசை நிகழ்ச்சி அது. இலங்கைத் தமிழ் மெல்லிசைப் பாடல்கள் அங்கு இசைக்கப் பட்டன. தமிழ் - முஸ்லிம் மாணவர்களின் கூட்டு முயற்சியாகவும் அதைக் குறிப்பி டலாம்.

இன்று வழக்கொழிந்து போயுள்ள எல்லா நல்ல பாடல்களும் அங்கு இசைக்கப்பட்டன. பெரிய பாராட்டு இசைக் குழுவிற்கு உரித்தாக வேண்டும் .

சிறந்த மெல்லிசை வாணர்கள் கிழக்கிலங்கையில் உள்ளனர். விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்திலும் இசையாற்றல் மிக்க ஒரு சமூகம் உள்ளது.

பாலமுனையாரின் பாடல்கள் கிழக்கின் இளம் இசைக்கலைஞர்களின் கவனத்துக்குள் வரவேண்டும்.

இது கவனத்தில் கொள்ளப்பட்டால் இங்கிருந்து சிறந்த தொடக்கத்தை உருவாக்க முடியும்.

ஈழத்துப் பாடல்கள் இலங்கையின் பெயர் பெற்ற இசைக் கலைஞர்களின் விட்டுக் கொடுப்பிற்கிடமில்லாத சாதனையாகும். எனினும் அது இன்று மங்கி மறைந்து போன கனவு.

பாலமுனையாரின் பாடல்களை மட்டும் மனதில் வைத்து நான் இதைப் பேசவில்லை. ஒரு புதிய முன்னெடுப்பின் தேவையை இது நமக்கு உணர்த்துகிறது.

விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனம் பரிசோதனையாக அவரது சில பாடல்களுக்கு இசையமைக்க முன்வர வேண்டும்.

இளம் தமிழ் - முஸ்லிம் இசைக் கலைஞர்களும் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

முதல் தொகுதியைப் போலவே இரண்டாவது தொகுதியிலும் வித்தியாச மான பல தலைப்புக்களில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. கிழக்கு மண்ணையும் மக்களின் நல்லுறவையும் பேசும் பாடல் களுடன்தான் தொகுதி ஆரம்பமாகிறது.

வழமையான சந்தங்களைக் கடந்து புதுக்கவிதை வடிவிலும் உரையாடல் வடிவிலும் அமைந்துள்ள கவிதைகளில் புதிய மலர்ச்சியும், சொல்லும் பாணியில் வேறுபாடுகளும் தெரிகிறது.

இதில் உள்ள சில காதல் பாடல்களின் கவிதை அழகிற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்க வேண்டும்.

‘கண்ணீரில் வரி நிரப்பி
காற்றினிலே அனுப்பி வைத்தேன்.....
காற்று வந்து பேசியதா ?‘

ஒடுக்கப்பட்ட மக்கள் துயர் பேசாது
அவர் பாடல்கள் ஓய்வதில்லை.
மலையக மக்களின் துயர் கூறும்
’ மலைக்குயிலே ’பாடலின் சில வரிகள்,

‘பனி மலையில் நீயேறிப்
பாடுபடும் துயர் வாழ்வை
எடுத்தியம்பி விழிப்பு வரக் கூவு - இந்த
மலைக்காட்டில் விடிவு வரக் கூவு.‘

ரமழான் மாதம் எப்போதும் மனதுக் கினியதுதான். அதைப் பாடா திருப்பாரா கவிஞர் :

’பிறை தேடி’ என்ற பாடலில்

‘மறைவேத ஒளி தந்த நிறைமாதமே
மணம் வீசி எமை ஈர்க்கும் நறு வாசமே
இருள் நீக்கி ஒளி நல்கும் சுடர் தீபமே
அருள்மாரி பொழிகின்ற மழை மேகமே‘

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை இதை இசைப்பாடலாக வடிவமைக் கலாமே. எல்லா இடங்களிலும் கதவுகள் தாழிடப்பட்டுள்ளன.

எனினும் பாலமுனையாரின் பாடல்கள் ஓய்வு பெறுவதில்லை. புதிய பாடல் களுக்காகக் காத்திருப்போம்.

# ச மா ளி ப் பு க ள்

அசாதாரணங்களைக் கடந்து செல்வதற்கான
அழகிய ஆயுதமே சமாளிப்பு
வாழ்க்கைப் பக்கங்களில்
முகவரி இல்லாமல், முகமன் கூறும்
பிரச்சினைகளுக்கெல்லாம் சமாளிப்புகளே
ஒத்தடம் தருகின்றன

நிசப்தங்களுக்குள் உறங்கிக் கொண்டு
ஊனமாய் ஒதுங்கிக் கொள்ள
நிழல் தேடும் நாட்களுக்கு
சுடும் வெய்யிலில்
குளிர்ந்த நீராய் விடை சொல்கின்றது
சலனமற்ற சமாளிப்புகள்

சொல்லடிகளும் நிராகரிப்புகளும்
கூடவே தலையுடைத்து
துவம்சம் செய்யும் நாட்களில் எல்லாம்
கண்கள் குனிந்து, தலை நரம்புகளோடு
போராட்டம் செய்யும்
தருணங்களில் எழுந்திரு என
உற்சாகம் தருவதும் சமாளிப்புகள் தான்

கண்கள் சொட்டும்
நீர்த்துளிகளின் அளவை அவ்வப்போது
கூட்டிக் குறைத்து
அளந்து இயக்கிக் கொண்டிருக்கும்
ஆத்மார்த்தமான பணியைச் செய்து
கொள்வதும் இனிய சமாளிப்புகளே...

நினைவோடு உறவாடி
வாழ்வோடு கலந்து
எதையும் கடந்து செல்ல வழிகாட்டும்
நிறைவான சமாளிப்புகளின்
பிரதிபலனே இறுதியில் எம் மரணச் சடங்கில்
சங்கமிக்கும் அன்புள்ளங்களைச்
சம்பாதித்து தருகின்றது...

சேஹ் மொஹம்மது பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி.

# திறந்த மனது

நேசம் கொண்ட உனதன்பினால் விழிகள் திறந்து உனக்காய்க் காத்திருக்க...

வேடந்தாங்கல் பறவையாய் நீயும்
கண்டம் தாண்டிப் போனாயே...

வேதனைகளைச் சுமந்து சோதனைக் காரியாய் நானும் வெறுமையோடு வெந்து நிற்கிறேன் ...

கொட்டித் தீர்க்கும் வார்த்தைகள் கூட மௌனத்தின் தோற்றமாய் மௌனித்துப் போகிறது ...

கள்ளமில்லா உள்ளமதில் ஞாபகங்கள் வெள்ளமாய்ப் பாய்ந்தோடிச் செல்கிறது ...

ஏதோ ஒரு ஏமாற்றம்
ஏக்கத்தை கட்டவிழ்த்து
மனதெல்லாம் நிறைந்திருக்கிறது...

அலைபேசி கூட தொலைத்தொடர்பு களை துண்டித்துப் போனது...

இன்பங்களைத் தந்து
இன்புற்றிட வந்திடு
ஏக்கங்களை தொலைத்து
இன்னல்களை இதமாய்த் தந்திடு...

ஷல்மா ஷாஜஹான்
வாழைச்சேனை.

# உளி பேசும் மொழி

நெல்லை க. சோமசுந்தரி
கவிஞர். எழுத்தாளர் தொல்லியல் ஆர்வலர்
சென்னை, தமிழ்நாடு



25

நம் நாட்டில் உள்ள பழங்கால புராதன ஆலயங்கள் பல வகைகளில் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. அவ்வகையில், ஒவ்வொரு ஆலயத்திற்கும் செவி வழியாகப் பழங்காலந் தொட்டுக் கடத்தப்பட்ட, புராணக் கதைகள் நிறைந்து காணப் பெற்றிருப்பினும், அவற்றில் ஒரு சில கதைகள் அவ்வாலயங்களின் மேன்மையினை முதன்மையாக வெளிப்படுத்துகிறது. அதன் வழியே, திருக் காளத்தியப்பரின் அருள் பெற்று, முக்தியடைந்த நான்கு மற்றும் ஐந்தறிவு ஜீவராசிகளான சிலந்தி, யானை மற்றும் பாம்பு ஆகியவை இத்திருக்கோயிலில் முதன்மைப்படுத்தப்படுவதிலிருந்தே ஆறறிவு கொண்ட மனித ஜீவராசிகள் மட்டுமின்றி அனைத்து ஜீவராசிகளும் இறைவனின் அருளைப் பெற முடியும் என்பதனை இத்திருக்கோயிலின் புராணக் கதைகள் மூலம் உணர முடிகிறது.

இவ்வாலயத்தின் மூலவரான திருக் காளத்தியப்பரின் அடிப்பாகத்தில் சிலந்தி வடிவத்தையும், நடுவில் நீண்டு கூரியன போன்றுள்ள யானையின் இரு தந்தங்களையும், மேற்புறத் தின் உச்சியில் ஐந்து தலை பாம்பு படம் எடுத்துள்ள வடிவத்தையும் கொண்டு, சுயம்பு வாக இறைவன் இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். இதன் வழியே சிலந்தி, யானை மற்றும் பாம்பினை முதன்மைப் படுத்துவதற்கானக் காரணத்தை நாம் அப்புராணக் கதையின் மூலம் அறியலாம். சிலந்தியானது, திருக்காளத்தியப்பரை, தன் வாய் நூல் வலையினாலேயே தாம் வழிப்பட்ட இறைவனுக்கு, முதலில் கோபுரம், மண்டபம், மதில் முதலியவற்றை வலை பின்னி அமைத்து வழிபடுகிறது. இறைவன் அச்சிலந்தியின் பக்தியினை சோதிக்கத் தம்முன் எரியும் விளக்கின் சுடரைப் பரவச் செய்தார். அதனால், சிலந்தியினால் அமைக்கப்பட்ட நூல் கோபுரம், மண்டபமானது தீப்பிடித்து எரிந்துவிட்டது. அதனைக் கண்ட சிலந்தி மிகுந்த வருத்தத்துடன் அந்த தீபச்சுடரில் விழுந்து தன் உயிரை மாய்த்துக்கொள்ள முனைந்தது. அதனைத் தடுத்து நிறுத்தி இறைவன் தன்னுள் ஆட்கொண்டார்.

இதே வகையில் 'காளன்' எனும் பாம்பு தன்னிடமிருந்த அரிய மாணிக்கத்தை, இறைவனது திருமுடியில் அலங்கரித்து வழிப்பட்டு வந்தது. அதே நேரத்தில், 'அத்தி' என்னும் கணத் தலைவன், யானையாகத் தோன்றி, தன் துதிக்கையினால் 'பொன் முகலியாற்று' நீரை முகர்ந்து வந்து இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்து மாணிக்கத்தைத் தள்ளிவிட்டு, வில்வ தளிரைச் சூட்டியது. மறுபடியும் பூஜிக்க வந்த பாம்பு திருமஞ்சனம் மற்றும் வில்வத்தளிர்யாவும் தூய்மையில்லை என்று நினைத்து அக்காரியத்தினை செய்தவரைக் காண அங்கேயே காத்தி

முகலி (சொர்ணமுகி) ஆறு



ருந்தது. மறுபடியும் பூஜிக்க வந்த யானையைக் கண்டு பாம்பு சீறி எழுந்து யானையின் துதிக்கையின் துளையினுள் புகுந்து, மத்தகத்தை குடைந்து தன் நச்சுப் பல்லால் தீண்டியது. அதனால், யானை மிகப் பலமாக பிளிர்ந்து கீழே விழுந்து உயிர் நீத்தது. யானையின் உடலினுள் இருந்த பாம்பும் இறந்தது. அப்பொழுது, இறைவன் இறைவியோடு தோன்றி அவ்விருவருக்கும் சாம விமோசனம் அளித்து தன்னுள் ஆட்கொண்டார். அதனாலேயே இத்தலத்திற்கு 'சீ காளத்தி' எனும் பெயர் பெற்றது. அதனாலேயே இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் சீகாளத்தியப்பர் என்று அழைக்கப்படுகிறார். இதில் 'சீ' என்பது சிலந்தியினையும், 'காளன்' என்பது பாம்பையும் 'அத்தி'என்பது யானையையும் குறிக்கிறது. இவ்வளவு சிறப்புப் பெற்ற, இம்மூன்றின் உருவங்களாகவும், சிலைகளாகவும், இவ்வாலயத்தில் தத்ரூபமாக வடிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சிற்பமும் முப்பரிமாண வடிவில் உண்மையான உருவங்களை ஒத்திருப்பது மட்டுமின்றி, அவைகளின் அங்கங்கள் ஒவ்வொன்றும் மிக நுண்ணிய பாகங்களும் அதன் தன்மை மாறாமல் மிகவும் நேர்த்தியாக உயிரோட்டமாகச் செதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சிலந்தியின் கால்கள் அதன் முழு உருவம் சரிபாதியாக இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதன் பகுதியானது, உண்மையான சிலந்தியினை நம் கண் முன்னே காட்சிப்படுத்துகிறது. மேலும், அதன் முன் பகுதியில் மிகநுட்பமான கொடுக்கானது கண்ணால் காணும் வகையில், சிற்பியின் கலையானது முழுத் திறனும் வெளிப்படும் விதத்தில் இச்சிலையானது வடிக்கப்பட்டுள்ளது. மேலும், கொடி மரத்தின் அடிப்பகுதியிலும், இம்மூன்று உயிர்களும் பொறிக்கப்பட்டுள்ளது.



ஐந்தறிவு ஜீவன்கள் மட்டுமின்றி ஆறாவது அறிவான பகுத்தறிவு கொண்ட மானிடர்ஒருவர்ஆறு நாட்களில்இறைவன் மீது கொண்ட அளப்பரிய பக்தியின் மூலம் முக்தி அடைந்து இத்திருத்தலத்தில் திருக்காளத்தியப்பருடன் எழுந்தருளியுள்ளார். மேலும் மிகக் குறுகிய நாட்களில் இறைவனாலேயே தடுத்தாட்கொண்டு, முக்தியைப் பெற்ற நாயன்மார்களுள் முதன்மையானவருக்கு, இத்தலத்தில் தனியாக ஒரு கோவில் எழுப்பப்பட்டிருப்பதைக் காணும் போது அவருடைய பக்தியின் சிறப்பு நமக்குப் புலனாகிறது. அதுமட்டுமின்றி, திருக் காளத்தியப்பரின் கருவறை ஒட்டிய சுற்றுப் பிரகாரத்தில், இறைவனுக்கு அருகில் கையில் வில்லுடன் மிகக் கம்பீரமாக நின்ற நிலையில் காட்சி தருகிறார். இவர் வழியில், சிவனின் அடியார்கள் எவரும் இறைவனின் மீது இவ்வாறு பூஜை செய்திருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட பூஜையினை, இறைவனும் மனமுவந்து ஏற்று, முக்தி யளித்தார் என்பதனை அறியும்போது, மிகவும் அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருக்கும். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒருவரைப் பற்றியும் அதனோடு ஒட்டிய சிற்பங்கள் பற்றியும் முழுமையாக அறிவதற்கு ஆவலாக உள்ளதா? வாருங்கள் உளியின் மொழியோடு தொடர்ந்து பயணம் செய்யலாம்.

(உளியின் மொழி தொடரும்)

# நாடென்ன செய்தது நமக்கு....?

.

அமின் : -

.

என்னே கவிஞரே
ஏடி வரதராசா
நின்றன் நலத்தின்
நிலையென்ன? - உன்றன்
நலமறிய இற்றை
நடப்பறிய மேலும்
இலமறிய ஆவல்
எனக்கு.

.

வரதன் : -

.

நான்நலம்தான் ஐயா
நலமறிய ஆவலுற்றேன்
காண்கின்ற எல்லாம்
கவியாக்கி - வான்புகழ்ப்
பொன்றா தமிழைப்
புனைத்துப் புனைந்துநிதம்
இன்றும் எழுதுகிறேன்
யான்.

.

அமின் : -

.

தேனாய் எழுது
திகட்டாமல் நீயெழுதி
வானாய்த் தமிழை
வளர்த்துவிடு - ஆனாலும்
பாட்டிற்கு மட்டும்
பருவத்தை வீணடித்தால்
நாட்டிற்கு உளதா
நலம்....?

.

வரதன் : -

.

நாட்டிற்கு எதற்கு
நலனைப் புரியவேண்டும்
பாட்டிற்கு நான்புரிந்துப்
பாடுகிறேன் - ஏட்டிற்பண் உள்வைத்துக்
காசாக்கி
ஓங்கி பணம்சேர்க்க
உள்ளம் மகிழும்
உணர்.

.

அமின் : -

.

ஏட்டில் எழுதும்
இயல்பும் தருமமும்இந்
நாட்டில் நடந்தால்
நலம்தானே - பாட்டில்
உயரும்உன் வாழ்வாய்
உலகும் உயர
அயராது உழைத்தல்
அழகு.

.

வரதன் : -

.

நாட்டிற்கே தேனும்செய்
நாட்டிற்கே தேனும்செய்
நாட்டிற்கே தேனுமென
நாளெல்லாம் - வாட்டியெனை
செய்யநீர்ச் சொல்வதெலாம்
சீச்சீ வெறுக்கின்றேன்
அய்யய்யோ வேண்டாம்
அது.

./.

# தமிழ்நெஞ்சம் அமின் - ஏடி வரதராசன்

.

அமின் : -

.

நாட்டுக்குள் ஏதும்
நலமே நடக்காமல்
வீட்டுக்குள் நன்மை
விளைந்திடுமா? - ஏட்டைப்
படிக்கின்றாய் இன்னும்
படைக்கின்றாய் ஆனால்
துடிப்பில்லை உன்னிடம்
த்தூ .

.

வரதன் : -

.

படியளக்கா தார்க்கும்
படியளந்தால் அஃதைத்
துடிப்பென்றா சொல்வீர்?
துயரை? - படிப்புடன்
என்திறமை யால்நான்
இனிநாட்டிற் காக
ஒன்றுமே செய்யேன்
உணர்.

.

அமின் : -

.

யார்கொடுத்தார் உன்படிப்பை
யார்கொடுத்தார் உன்உயர்வை
யார்கொடுத்தார் வாழ்விலுனக்(கு)
எல்லாமும்? - ஊர்முழுக்கத்
திட்டத்தால் மட்டுமே
தேர்கிறது இல்லையெனில்
நட்டாற்றில் நிற்குமிதை
நம்பு.

.

வரதன் : -

.

அம்புலியைக் காட்டி
அழவைக்கும் பிள்ளையைப்போல்
நம்பவைக்க ஏதும்
நவிலாதீர் - உம்முடைய
நோக்கம்தான் என்னே
நுவலல்தான் என்னஅதைச்
சீக்கிரம் சொன்னால்
சிறப்பு.

.

அமின் : -

.

ஏன்தம்பீ... கோபத்தை
என்மேல் உமிழ்கின்றாய் ?
நான்சொன்ன எல்லாமே
நன்மைதான் - ஊன்வளர்க்க
மக்களுக்குத் தேவையான
மற்றவை எல்லாமே
எக்கணமும் நாடளிக்கும்
இங்கு.

.

வரதன் : -

.

உங்கள்மேல் கோபமெலாம்
ஒன்றுமில்லை நாளெல்லாம்
எங்கள் நிலையை
எவரறிவார் - இங்கெனக்குச்
செல்வங்கள் இன்னும்
செழித்தால்தன் சுற்றியுள்ள
இல்லார்க்கு அளிக்கலாம்
ஈந்து .

./.

# தமிழ்நெஞ்சம் அமின் - ஏழ் வரதராசன்

.

அமின் : -

.

தப்பாய்ப் புரிந்துகொண்டு
தாழாதஎன்பேச்சை
எப்போதும் போற்றா(து)
இகழ்ந்துகொண்டு - இப்போது
நாட்டுக்கு சேவையென
நான்சொன்ன வார்த்தைகளைப்
போட்டியாக எண்ணுகிறாய்ப்
போ.

.

வரதன் : -

.

செப்புங்கள் உண்மையைச்
சேவையென்றால் என்னவென்று
இப்போது சொல்லுங்கள்
என்னிடம் - முப்போதும்
உங்கள் அறிவுரைகள்
உள்ளத்தை வாட்டாக்கால்
எங்கணமும் செய்கிறேன்
யான்.

.

வரதன் : -

.

போட்டியெலாம் உங்களுடன்
போடவில்லை என்வறுமை
ஆட்டிப் படைக்கிறது
அனைத்தையும் - நாட்டிற்(கு)
எதைவைத்து சேவையை
யான்செய்வேன் ஐயா
வதைகின்றேன் இம்மண்ணில்
வந்து.

.

அமின் : -

.

தம்பீ இதைக்கேள்
தவறாக எண்ணாதே
உம்மைப் பழித்தலாஎன்
உள்நோக்கம் - நம்பிநீ
எந்தன் அறிவுரையை
ஏற்று நடந்துவிட்டால்
உந்தன் நிலையுயரும்
ஓர்.

.

அமின் : --

.

சேவையென்றால் என்னவென்று
சிந்தித்தாய்? உந்தனது
தேவைகளை இங்கே
திணிப்பதுவா? - யாவையும்
நன்கு புரிந்துகொண்டு
நான்சொல்லும் உத்திகளை
இன்றுமுதல் செய்தால்
இனிப்பு.

.

வரதன் : -

.

நட்டமன்றி என்றனுக்கு
நல்லவழி சொல்லிவிட்டால்
இட்டபடி சேவையை
ஏற்பேன்நான் - சட்டென்று
யோசனையைச் சொல்லுங்கள்
ஓர்ந்துநல் சேவையினை
ஆசையுடன் செய்வேன்
அறிந்து.

./.

# சம்பாஷணை வெண்பா

.

அமின் : -

.

உன்னூர் அரசுவழி
உள்ளடங்கும் பள்ளிகளில்
சின்னஞ் சிறுவரைச்
சேர்த்துவிடு - உன்னூர்
மருத்துவத்தை நாடிப்பின்
மற்றதையும் போற்ற
அருமையான சேவை
அது.

.

வரதன் : -

.

தேவைக்கு மேலாய்த்
தினம்நட்டம் ஆவதொன்றே
சேவையென நான்என்ணிச்
சீறிவிட்டேன் - சேவையென்றால்
என்னென்றுஅறிந்தேன்நான்
இப்போது நாளைமுதல்
என்றன் பணியே
இது.

## ராஜூ ஆரோக்கியசாமி கவிதைகள்

அண்ட தோட்டத்தில்
ஆச்சர்ய சோதனைகள்
எடையற்ற சுனிதாவின் கனவுகளில்
மனிதகுல மீட்சிகள்

எட்டு நாட்கள்
ஒன்பது மாதங்களாய்
சிறு தவறுகள்தான்
பேரிழப்பை வென்று

வளிமண்டலத்திலிருந்து
ஒரு சுடர்விடும் கோடு
அவநம்பிக்கையை வென்ற
நம்பிக்கையின் பீடு

பூமியை முத்தமிடுமுன்
பரபரப்பின் யுத்தங்கள்
கூட்டுப் பிரார்த்தனையால்
கூடிய வெற்றி

காத்திருந்த கடல்
கூடவே டால்பின்களும்
குளிரால் போர்த்தி
மெல்லிய அரவணைப்பு

மெல்லிய வெளிச்சத்தில்
பூத்த பாராசூட்டுகள்
உலகெங்கும் பரவிய
நம்பிக்கையின் மணம்

வெளிச்சத்திலிருந்து இருள்
மீண்டும் இருளிலிருந்து வெளிச்சம்
பஞ்சாய் வெளிவந்த இதயத்திலிருந்து
பரிசுத்த பெருமூச்சு

உரிந்த தலைக்கவசத்திலிருந்து
உறுதியான புன்னகையுடன் முகம்
ஆயிரமாயிரம் சுனிதாக்களுக்கு
ஆர்வமூட்டும் அகம்

சோர்வான பயணம்
வெளிச்சொல்லா வலிகள்
நன்றியின் கண்ணீரில்
நாளைய வெளிச்சம்



- ராஜூ ஆரோக்கியசாமி

# சிறகுகள் சிறைபடுவதில்லை

எழுத்தாக்கம்:
குயில்.மு.இரசியா பேகம், தஞ்சை



பாட்டியின் கதை தொடர்கிறது..

## 4.என் அம்மா

இது 1939 ஆமாண்டு விதைக்கப்பட்டு வளர்ந்த அமரக் காதல்....

நமது கதை தஞ்சாவூர் மாவட்டத்தில் ராஜேந்திரம் என்ற அழகான கிராமத்தில் நடந்தது.

அப்போது அவளுக்கு நான்கு வயது பாண்டி ஆடிக் கொண்டு இருந்தாள். சிமிக்கி இடிக்க, பட்டு பாவாடையை தூக்கிய வண்ணம் நொண்டியடித்து கட்டங்களைத் தாண்டியவளை மாமி இழுத்துக் கொண்டு போய் மனையில் அமர்த்தி தலைமுடியை அவிழ்த்து, எல்லோரும் வந்து ஆசி கூறி நலங்கு வைக்க, திருதிருவென முழித்தாள் கயல்...

நடப்பது என்னவென புரியாத குழந்தையவள் பாவம்!

நீராட்டி நகைகளிட்டு பூமுடிக்க அவளுக்கு பெருமைத் தாங்கவில்லை.

ராக்கோடி, நெத்தி சுட்டி, ஒட்டியாணம் என்று நீண்ட பட்டியல்... புத்தாடைகள் பூண்டு அழைத்து வரப்பட்டாள்.

கயல் மனதின் எண்ணவோட்டம் இப்படி இருந்தது...

அன்னப்பறவையாய் அலங்கரிக்கப்பட்டப் பழையக் கார் அதில் அமர்த்தப்பட்டாள். அருகில் எதிர்த்த வீட்டு

சிடுமூஞ்சி சந்திரன் அத்தான்...

அவருடன் பெரியத்தான் இருவரும் கூட பட்டுவேட்டி மாலையுடன். இந்த சந்திரனும் மாலையுடன்....

என்னத்தான் நடக்கிறது?

எதிர்த்த வீடு அவளின் அத்தை வீடு. அங்கு பெரியத்தான் ஜானு என்ற ஜனார்த்தன், நடுவத்தான் ஆனந் இருவருக்கும் திருமணம் என்று தெரியும். ஆனால் நான் ஏன்?

இதுக் கூட நன்றாகத்தான் இருக்கிறது... சன்னமாய் நகரும் பயணம்...

இந்த சந்திரன் குரங்கு இடம் கொடுக்காமல் அழிசாட்டியம் பண்ணுகிறது.

ஒரு வழியாக ஊர்வலம் முடிய வீட்டிற்குள் நுழைந்தோம். அம்மாவிடம் ஓட எத்தனித்த என்னை அமுக்கி அழுத்தி பிடித்த என்னப்பா! அதோ அலங்கரிக்கப் பட்ட மணவறைகள்!

ஆம் அங்கு ஒன்றல்ல மூன்று...
ஆகா இது திருமணம்!
இரண்டுத் திருமணம்..

(மூன்றாவது பால்ய விவாகம்! அவளுக்கும் சந்திரனுக்கும். ஆடு போல் அறியாமல் மாட்டினாள் (என் அம்மா) நமது கயல்.

ஓட நினைத்தாள் முடியவில்லை. திருமணம் முடிந்தது தொங்க! தொங்க! தங்கத் தாலி கழுத்தில்....

ஏழு வயது சந்திரன் தனது கைகளில் உள்ள பளிங்கு கல்லில் மும்முரத்துடன்....

ஓடினாள் கயல் அந்த வாசல் நிலைப் படி தடுக்க தடுமாறி விழுந்து தலையில் அடிப்பட இரத்தம் பெருக மயக்கமானாள்.

அப்புறம் என்னா ஆச்சு பாட்டி?

என்ற என் கேள்விக்கு பாட்டியின் அழுகைதான் பதிலாக இருந்தது...



## 5. நான்

நான் வீட்டில் இருக்கிறேன்...

எல்லா அறைகளிலும் தேடி விட்டேன்... அம்மாவைக் காணவில்லை.

யாரும் எனது கேள்விக்கு பதில் தரவில்லை.

அன்று இரவும் அதே கனவு...

வானம் என்னை அழைக்கிறது...

கரிய வானத்தில் விண்மீன்கள் அள்ளி வீசப் பட்டுள்ளது..

நான் மெதுவாக ஈர்க்கப்பட்டு தானாக மேலே மேலே போகிறேன்.

வானத்தில் ஒட்டிக் கொள்வது போன்று பயமாக இருக்கிறது...

என்னையறியாது படுக்கையை நனைத்து விடுகிறேன்..

இதற்கான உளவியல் காரணம் என்ன வென்று பின்னால் தெரிந்துக் கொண்டேன்

அது...

பெற்றோரின் விவாகரத்து, பதட்ட மான மற்றும் சிக்கலான குடும்பச் சூழல், பள்ளி மாற்றம், ஒரு புதிய சகோதரனின் பிறப்பு, நேசிப்பவரின் மரணம், பின்தங்கிய சூழலில் வாழ்வது போன்ற குழந்தைகளுக்கான மன அழுத்த சூழ்நிலைகளை தொடர்ந்து சந்திப்பது மற்றவைகள். குழந்தையின் ஆளுமை இந்த வகை சிக்கலை வளர்ப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது என்பதையும் கண்டறிந்துள்ளது, எடுத்துக்காட்டாக, அதிக சார்புடையவர்கள், பயப்படுபவர் கள், செயலற்றவர்கள், கூச்ச சுபாவமுள்ள வர்கள் மற்றும் மிகவும் கட்டுப்படுத்தும் அல்லது அதிக பாதுகாப்பற்ற பெற்றோர் களைக் கொண்ட குழந்தைகள்.

எனக்கான காரணம் எனது அம்மா என்னைத் தவிக்கவிட்டதாகத்தான் இருக்க முடியும்.

உங்களுக்கு படுக்கை நனைக்கும் சிறுவர்கள் இருந்தால்...



குயில்.மு.இரசியா பேகம்

1.இரவில் அதிகம் நீர் குடிக்க விடாதீர்கள். பகலில் நிறைய நீரருந்தச் செய்யுங்கள்.

2.படுக்குமுன் சிறுநீர் கழிக்கும் பழக்கம் கொண்டுவாருங்கள்

3.அன்பும் அரவணைப்பும் தந்து பயத்தைப் போக்குங்கள்.

4.காபி, டீ, யிலும் காபின் இதற்கு ஒருக் காரணம்

5.நடு இரவில் அலாரம் வைத்து எழுந்து குழந்தையை சிறுநீர் கழிக்க செய்யுங்கள்.

6.ஒரு போதும் தண்டனையோ அவமானப் படுத்துதலோ வேண்டாம்.

குழந்தைகளுக்கு உதவுங்கள் சரியாகி விடுவார்கள்.

தொடரும்...

உலகின் முதல் உலகப் போர் 1914 முதல் 1918 வரை ஐரோப்பிய நடுகளிடையே நடந்தது.

உலகின் முதல் பெரிய போர் என்றும் குறிப்பிடப் படுகிறது. இரண்டாம் உலகப் போர் 1939 முதல் 1945 வரை நடந்தது. ஐரோப்பிய நாடுகள் போலந்து நாடு மீது போர் தொடுத்ததே இரண்டாம் உலகப் போருக்குக் காரணமாகும். இடையிலும் சில போர்கள் நடந்துள்ளன.

முதல்இரண்டுபோர்களும்ஆதிக்கத்தை நிலை நிறுத்த நடந்த போராகும். மூன்றாம் உலகப் போர் மூள்வதற்கு பல காரணங்கள் உண்டு. தண்ணீர் ஒரு முக்கியக் காரணம். கவிஞர் வைரமுத்து விவசாயம் என்கிறார். 'விவசாயிகள் என்னும் சபிக்கப் பட்ட தெய்வங்களுக்கு' தொகுப்பைச் சமர்ப்பித்ததன் மூலம் விவசாயிகள் மீதான கவிஞரின் அக்கறையைக் காண முடிகிறது. 'இப்போதும் ஒரு போர்




# மூன்றாம் உலகப் போர் – வைரமுத்து

## ஒரு பார்வை - பொன்.குமார்

தொடங்கி நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது தன் வடிவத்தை மாற்றிக் கொண்டு. இது முகத்துக்கு முகம் பார்த்து மோதாத போர். ஆயுதங்களை ஒளித்துக் கொண்டு நிகழ்த்தும் போர். மண்ணுக்கும் விண் ணுக்குமான போர். மனிதனுக்கும் இயற் கைக்குமான போர். இது மனித குலம் சந்தித்திராத மோசமான முகமூடிப் போர். புவிவெப்பமாதல், உலகமயமாதல் என்ற இரண்டு சக்திகளும் வேளாண்மைக்கு எதிராகக் தொடுத்திருக்கும் விஞ்ஞானப் போர். இந்தப் போரில் இயற்கையை எதிர்த்து மனிதன் வென்றாலும் மனிதனை எதிர்த்து இயற்கை வென்றாலும் தோற்கப் போவதென்னவோ மனிதன்தான்' என போரின் தன்மையைக் குறித்து அறியச் செய்துள்ளார். கை குலுக்கிக் கொண்டே நடக்கும் இந்த போரை தடுத்து நிறுத்தினால் மானுடம் மிஞ்சலாம் என்று ஆலோசனையும் வழங்கியுள்ளார். விவசாயத்தை மீட்டெடுத்தலும் விவ சாயியை மீட்டெடுத்தலும் இந்தியாவின் முக்கிய பணிகள் என்கிறார்.

விவசாயம் ஏன் அழிகிறது, எப்படி அழிகிறது, விவசாயம் அழிந்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை முதன் மைப் படுத்தி அதற்காக ஒரு கதையை உருவாக்கி உணர்வுடன் தந்துள் ளார். கதைக்காக அமைக்கப்பட்ட

களமும் கதையில் சித்தரிக்கப் பட்ட பாத்திரங்களும் சிறப்பாக உள்ளன. கதை நிகழும் அட்டணம் பட்டி கிராமத்தை வரைப்படமாக காட்டியும் குறிப்பிட்டுள்ளார்.

அட்டணம்பட்டி கிராமத்தில் வசிக்கும் மனிதர் கருத்தமாயி. அவருக்கு இரண்டு மகன்கள். மூத்தவன் முத்து மணி. இளையவன் சின்ன பாண்டி. மூத்தவன் விவசாய நிலங்களை விற்க முனைகிறான். இளையவன் விவசாய நிலங்களைக் காக்க விளைகிறான். இருவருக்கும இடையே நடக்கும் போராட்டமே கதையாக செல்கிறது.

நாவலின் முதல் அத்தியாயம் மெக்ஸிகோவில் தொடங்குகிறது. அதே அத்தியாயத்திலேயே ஜப்பானைக் காட்டுகிறது. அத்தியாயத்தின் முடிவில் அட்டணம்பட்டியைக் கூறுகிறது. மூன்றிலும் எமிலி, இஷிமுரா, சின்ன பாண்டி என்னும் மூன்று பாத்திரங்கள் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது. மூவரும் நாவலாசிரியரின் எண்ணங்களைச் செயல் படுத்தும் கருவிகளாக நாவலில் வலம் வருகின்றனர். முதல் அத்தியாயத்திலேயே மூவரையும் அறிமுகப் படுத்தி ஓர் எதிர் பார்ப்பை ஏற்படுத்தி ஒரு புள்ளியில் இணைத்து இலக்கு நோக்கிக் கொண்டு சென்றுள்ளார். நாவலாசிரியரின் மனசாட்சி யாகவே மூன்று பாத்திரங்களையும் படைத்துள்ளார். கவிஞர் வைரமுத்துவும் ஓர் அத்தியாயத்தில் ஒரு கதாபாத்திரமாக வருகிறார். எழுதுவது அவர் வாழ்வு என்கிறார். 'திரட்டு மக்களை. செயல் படு. விளை நிலங்களை விற்க விடாதே. விவசாய்த்தை இயற்கைப் படுத்து, காடு மலைகளைக் காவல் கொள். கன்று மரங்களை நாடெங்கும் நடு.' என்று வைரமுத்து மூவருக்கும் அறிவுரைப்பதாக அனைவருக்கும் அறிவுரைத்துள்ளார். தொகுப்பின் சாராம்சமும் இதுவாகவே இருக்கிறது.

விவசாயத்திற்கு பல எதிரிகள் இருந் தாலும் இரசாயண உரம் முதல் எதிரி என்கிறார். இரசாயண உரம் உருவான கதையை விவரித்துள்ளார். சாணமும், எருவும் சாம்பலும் தழையும் குழைத்து குழைத்துக் கொட்டி செய்யப்பட்ட விவசாயம் சோதனைக் குழாய்களின் கைகளுக்குப் போய்விட்டது. மலடாகிப் போனது, விசமாகிப் போனது மண் என்று வருந்தியுள்ளார்.

எமிலிக்கும் சின்ன பாண்டிக்கும் இடையே ஒரு நாகரிகமான காதலை வைத்துள்ளார். காதல் இறுதியில் கை கூடாமலே முடிந்து விடுகிறது. காதலை கிராமத்திற்காக தியாகம் செய்வதாகவும் படைத்துள்ளார். காதலை விட கிராமமே முக்கியம் என்கிறார்.

அப்பா. அம்மா, மகள், மருமகள், உற்றார், உறவினர் என்று கதையை அமைத்துள்ளார். கதா பாத்திரங்களுக்குள் ளான உரையாடல்களையும் சிறப்பாக எழுதி கதைக்கு உயிரூட்டப்பட்டுள்ளது. கதா பாத்திரங்களுக்குள்ளான உறவின் வலிமையையும் அவர்களின்உணர்வுகளின் வலியையும் உணர்த்தப் பட்டுள்ளது.

கருத்தமாயியும் அவர் மனைவியும் பேசிக்கொள்ளாமலே வாழ்க்கை நடத்து வதாக சித்தரித்திருப்பது அருமை. மூத்த மகன் முத்து மணியால் கருத்தமாயி கொலையுண்ட போது அவர் மனைவி கதறி அழுவது கண்ணீரைத் துளிர்க்கச் செய்கிறது. பாத்திரத்தின் அழுத்தத்தைக் காட்டுகிறது. ஆயினும் விவசாயத்தை மையப் படுத்திய கதையைக் கொண்டு சென்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

ஒரு கவிஞராக எழுதும் போதும்

ஒரு பாடலாசியராக புனையும் போதும் ஒரு நாவலாசியராக படைக்கும் போதும் வைரமுத்துவின் நடையில் ஒரு வித்தியாசம் இருக்கும். அவரின் தனித்துவம் வெளிப்படும். மூன்றாம் உலகப் போர் என்னும் இந்நாவலில் வைரமுத்து இரு மொழியைக் கையாண்டுள்ளார். அட்டணம் பட்டிக்குள் கிராமத்து மொழியையும் அடுத்த பட்டணத்துக்குள் உரை நடை மொழியையும் காண முடிகிறது. வாசிக்கும் போது வேறுபாட்டை அறிய முடிய முடிகிறது. எல்லாவற்றையும் தாண்டி இரு மொழிகளுக்குள்ளும் ஒரு கவித்துவத்தைத் தொகுப்பெங்கும் உணரவும் முடிகிறது. ‘இளந் தென்னைக்கு மாட்டெருவு ஆகாது, புழுவு வந்தாலும் வந்துரும். ஆட்டு எருவு தாய்ப் பால் மாதிரி. ஒரு சிக்கும் வராது’ என்பது எடுத்துக் காட்டுக்குரியது. கிராம மணம் வீசுகிறது.

வைரமுத்துவின் கதைகளில் கதை மட்டும் இருக்காது. கதையை நகரத்திச் செல்பவர் இடையே பல புள்ளி விவரங்களை, செய்திகளைச் சொல்லிச் செல்வது அவரின் சிறப்பு. ‘காற்று மண்டலத்துக்கு மொத்தம் மூன்றடுக்கு. பூமிக்கு மேலே பன்னிரண்டு கிலோ மீட்டர் உயரம் வரை உள்ளது முதல் அடுக்கு. இதில்தான் இருக்கிறது பூமிக்கான காற்றின் தொன்னூறு விழுக்காடு. முதல் அடுக்கின் முடிவில் தொடங்கி ஐம்பது கிலோ மீட்டர் உயரம் வரை இரண்டாம் அடுக்கு. அதில் ஓரளவுதான் இருக்கும் உயிர்க்காற்று. அறுபதுக்கு மேலே இருப்பது மூன்றாம் அடுக்கு. அது காற்றற்ற அடுக்கு. ஆயிரம் கிலோ மீட்டர் உயரத்திற்கு மேலிருப்பது வெட்ட வெளி. ஒளியும் ஒலியுமற்ற பாழ் வெளி.



பொன்.குமார்

விண் கலங்களும் செயற்கைக் கோள்களும் விடப்படுவது அங்கேதான். இந்த நான்கடுக்குகளிலும் பூமிக்கு முக்கியமானது பத்து முதல் நாற்பது கிலோ மீட்டர் உயரம். வரை அமைந்திருப்பதும் ஓசோன் கூரைதான்‘. இது போன்ற செய்திகள் விரவிக் கிடக்கின்றன. ஆசிரியரின் முயற்சி அதிசயிக்கச் செய்கிறது. தகவல்கள், செய்திகள் என்றாலும் உண்மை என்பதை மறுப்பதற்கில்லை. கதைக்குத் தேவயானதாகவும் இருக்கிறது. பயிர்களைப் பற்றி பேசும் போது பயிர்களைப் பற்றிய செய்திகள், மரங்களைப் பற்றி பேசும் போது மரங்களைப் பற்றிய விவரங்கள், நதிகள் பற்றி பேசும்போது நதிகள் குறித்த தகவல்கள் என அனைத்து விசயங்களையும் அறிந்து அறியச் செய்துள்ளார். பொது அறிவு பெட்டகமாக, தகவல் களஞ்சியமாகவும் தொகுப்பு உள்ளது..

விவசாயம் அழியக்கூடாது. தொடர வேண்டும், விவசாய நிலங்களை விளை நிலங்களாக மாற்றப்படுவது, ஆக்கப் படுவது மட்டுமல்ல விவசாயம் செய்ய வாரிசுகளும் முன்வர வேண்டும்.

கதையின் நாயகன் சின்ன பாண்டி மூலம் விசயாயம் தொடர இளைஞர்கள் முன்வர வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். ‘அப்பன் கடைசியா வெட்டுன மம்பட்டி. குனிஞ்சு எடுத்தான். மம்பட்டி புடிய ஒண்ணு சேத்தான். சட்டையைக் கழத்தி வச்சான் வேட்டிய மடிச்சுக் கட்டுனான். அப்பன் விட்ட இடத்துல இருந்து வாய்க்காச் செதுக்க ஆரம்பிச்சான்‘ இது நல்ல ஆரம்பம். தொடர வேண்டும்.

ஒரு படைப்பாளிக்கு சமூக அக்கறை மிகவும் முக்கியம். சமூகத்தின் மீது

மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த மனித குலத்தின் மீதான அக்கறையை மூன்றாம் உலகப் போர் என்னும் தொகுப்பு மூலம் வெளிப்படுத்தியுள்ளார். கிராமம் என்பது நாட்டின் முதுகெலும்பு என்பர். முதுகெலும்பு என்பதற்கு அடையாளமே விவசாயம்தான். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதல் தேவையே உணவு. உணவை உற்பத்திச் செய்வதே விவசாயம். விவசாயத்திற்கு வில்லங்கம் ஏற்படும் போது விவகாரம் ஏற்படுகிறது. மூன்றாம் உலகப் போர் மூள்வதற்குக் காரணமாகி விடுகிறது. வைர முத்து இத் தொகுப்பு மூலம் மூன்றாம் உலகப் போர் மூள்வதைத் தடுக்க வேண்டும் என்னும் முனைப்புடளே இந் நாவலை எழுதியுள்ளார். கதை பாதி விவசாயம் பாதி என்று தொகுப்பு அமைந்துள்ளது.

விவசாயத்தையும் தாண்டி சுற்றுச் சூழலைப் பேசியுள்ளார். மது ஒழிப்பு வேண்டும் என்கிறார்.

'நான் இந்தியாவை நேசிக்கிறேன். காரணம் இந்த உலகத்தின் ஒவ்வோர் அணுவையும் நேசிக்கிறேன். உலகம் உயிர்களைச் சார்ந்திருக்கிறது. உயிர்கள் விவசாயம் சார்ந்திருக்கிறது. இந்தியா விவசாயத்தை சார்ந்திருக்கிறது.' என்று வைரமுத்து எழுதி விவசாயம் காக்க வேண்டும் என்றும் விவசாயத்தை வாழ வைப்போம் என்றும் வேண்டியுள்ளார். வைரமுத்து வழியில் விவசாயம் வளர்க்க ஒவ்வொருவரும் உறுதி எடுத்தாலே 'மூன்றாம் உலகப் போர்' ஏற்படாது.

வெளியீடு
சூர்யா லிட்டரேச்சர் (பி) லிட்,
சென்னை

# சகலமும் நீதான்

அந்தியில் நிலவும் எந்தன்
அருகிலே நீயும் உண்ணும்
பந்தியில் உணவும் இன்னோர்ப்
பதார்த்தமாய் நீயும் விற்கும்
சந்தையில் பூவும் கொத்தாய்ச்
சகலமும் நீயும் என்னை
வந்துகண் தூக்கம் போக்கி
வளர்கின்றீர் ஆசை நூறு

.

உள்ளதோர் இதயம் மட்டும்
உடலுயிர் உன்னில் மொத்தம்
அள்ளவே முடியா வண்ணம்
ஆசையைக் குவித்து வைத்துக்
கள்ளிலே குளிக்கின் றேனே
கடலற நீந்தி னேனே
எள்ளினைச் சிலையாய் ஆக்கி
எழில்மாடம் அமைக்கின் றேனே

.

முடிவுகள் என்று வாரும்
முத்தவாய் என்று தாரும்
விடிவுகள் இல்லா வாழ்வில்
வெளிச்சமும் என்று சேரும்
நொடிகளை எண்ணு கின்றேன்
நோவையே உண்ணு கின்றேன்
கழிந்துயிர்ப் போகும் முன்புக்
காதலே அருகில் வாவா

.

தமிழ்நெஞ்சம் அமின்



# என்ன சொல்ல.. இனியவளே..



உன் காதுகளை அடைத்துக் கொண்டு
எத்தனை நேரம்தான் கேளாததுபோல் நடிப்பாய்?
உன் வாயைப் பொத்திக் கொண்டு
எத்தனை நேரம்தான் பேசாமல் இருப்பாய்?
உன் கண்களை மூடிக்கொண்டு
எத்தனை நேரம்தான் பார்க்காமல் தவிப்பாய்?

காதுகளைக் கொடுத்தவனை;
கேட்டுச் சுவைக்க வைத்தவனை; பழிப்பது நன்றா?
முகத்திலே வாயை வைத்தவனை;
பேசி மகிழச் செய்தவனை; வெறுப்பது நன்றா?
கண்களைப் படைத்தவனை;
கண்டுக் களித்திட அளித்தவனை; மறப்பது  நன்றோ?

காந்தி தாத்தாவின் புதிய
பொம்மைகள் இன்று காலத்திற்கேற்ப
மாறியுள்ளதை கவனித்தாயா?

முதலாம் பொம்மை...
காதுகளை அடைத்துக் கொண்டு கண்களால் கண்டும்,
வாயினால் பேசிக் கொண்டும் இருக்கிறது.
இரண்டாம் பொம்மை....
வாயைப் பொத்திக் கொண்டு... கண்களால்
பேசிக் கொண்டும்  காதுகளால் கேட்டுக்
கொண்டும் இருக்கிறது.
மூன்றாம் பொம்மையோ...
கண்களை மூடிக்கொண்டு வாயால்
பேசிக்கொண்டும், காதுகளால்
கேட்டுக் கொண்டும் இருக்கிறது.

இனியவளே.. இதை  என்ன சொல்ல!

**- கருமலைப் பழம் நீ**

# சுவனத்து மங்கையே

## முப்லிஹா பிர்தௌஸ்



கவி கிறுக்கத் தெரிந்த என் பேனா முனை கூட உமை பற்றி எழுதுகையில் மையை சிந்துவதற்கு பதிலாய் கண்ணீரை சிந்துதம்மா!

உன்னோடு பழகிய நெடும் நாட்களை நினைக்கையில் வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள் சிக்கி கண்ணீரால் கதை சொல்கிறதம்மா!

பணிவான தோற்றக்காரியவள்! பக்குவமான தேற்றக்காரி! பாசத்தின் ஏற்றக்காரி யவள்; படைப்பாளனின் நாட்டத்தில் எமைப் தவிக்க விட்டுச் சென்று விட்டதை எண்ணுகையில் மட்டும் கல்பு கனக்குதம்மா!

காத்தமண் ஈன்றெடுத்த கண்ணியமான மங்கையவள்! பல நாள் பழக்கமுமில்லை.. ஆனாலும் பார்த்தவுடனே என்னோடு ஒட்டிக் கொண்டவள்...

இரண்டாம் தமிழ் மாநாட்டில் முதன்முதலாய் அறிமுகமாகி; மூன்றாம் மாநாட்டில் எனை தேடித் தேடி அன்பு கொண்டாடியவள்; நான்காம் மாநாட்டில் இனி நான் வரப்போவதில்லை என்பது போல் அவள் கப்ரை அலங்கரிக்கவென்று என்னிடம் நிலையான பரிசாய் குர்ஆனை பரிசளித்துச் சென்றவள்...

வயது தாண்டிய நேசத்தை என்னில் வார்த்தைகளால் கொட்டித் தீர்த்தவள்... இறுதி இராவில் கூட என்னோடு நெடும் நேரம் பேசிக் கொண்டாயே! தன் பிணி நீக்க பிரார்த்திக்க சொல்லி விட்டு ஸுஜூது நனைத்த விழிகள் துடைக்கும் முன்பே தன் பணி முடிந்து ஜன்னாவை நோக்கி இவ்வளவு அவசரமாய் புறப்பட்டு நிரந்தரமாய் கண்ணீரில் எமை நனைய வைத்து விட்டாயே!

எதைக் கேட்டாலும் முடியாதென்று சொல்லாத நீ - இறுதியாய் கேட்ட கவிதையொன்றை மட்டும் குறித்த திகதிக்குள் தரவே முடியாதென்று அத்துனை உறுதியாய் உன் மரணத் தேதி அறிந்தது போல் சொல்லி விட்டுச் சென்றாயே!

அதிலும் உனக்கு அமானிதத்தை வைத்து விட்டு மரணித்துப் போய் விடக் கூடாதென்பதில் எத்துனை கவனம்...

உன் மரணச் செய்தியை நீயே சொல்வது போல் எழுதிச் சென்ற உன் இறுதிக் கவிதையை தினம்தோறும் வாசிக்கின்றேன்.. உள்ளம் தாங்கவில்லையம்மா.. உன் மரணம் உனை நெருங்கியதை எப்படி அறிந்தாய் நீ?

எப்போதும் தன் ஆடையில் ஈமானை பிரதிபலிப்பவள் நீ.. முப்லிஹா என்றாலே புன்னகை வதனத்தால் கண் முன் நிற்பவள் நீ.. கபன் ஆடையிலும் புன்சிரிப்போடு தூங்கியிருப்பதை நினைக்கும் போது உள்ளம் நிறைகின்றதம்மா..

உனைப் போல் பாக்கியவாதியாக மரணிக்க என் மனமும் தினம் ஏங்குது! நரகத்து வாசல் மூடப்பட்ட புனிதமிகு ரமழானில்; பல ஸஹாபிகள் ஸஹீதாகி; புனித இஸ்லாம் தூய்மையாக்கப்பட்ட பத்ருடைய நன்னாளில்; உன் ரூஹூம் ஐசீயூவில் மென்மையாய் பறிக்கப்பட்டிருக்கின்றதேயம்மா! யாருக்கு கிடைக்கும் இப்பெரும் பாக்கியம்?

இம்மையிலும் பிர்தௌஸின் அன்பு மனைவியாய் வாழ்ந்து காட்டியவள் நீ! நீ செய்து விட்டுச் சென்ற நலவுகள் யாவும் உன் கப்ரை சுவனத்துப் பூஞ்சோலையாக்கி; மறுமையிலும் நீ ஜன்னத்துல் பிர்தௌஸின் சொந்தக்காரியாகி விட இறைவனை தினம் துதிக்கின்றேன் என் சீதேவியே!

பாத்திமா ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி



## குலோப் ஜாமுன் செய்வது எப்படி

### தேவையான பொருட்கள்

*1 பாக்கெட் குலாப் ஜாமூன் மிக்ஸ்*
*250 கிராம் சர்க்கரை*
*100 மில்லி பால்*
*3 ஏலக்காய்*
*2 தேக்கரண்டி நெய்*
*4 தம்ளர் தண்ணீர்*
*எண்ணெய்*

### செய்முறை

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அதை கொதிக்க விடவும். பின்பு அதில் சர்கரை சேர்த்து நன்றாக கொதிக்க விட்டு சர்க்கரை பாகு போல செய்து வைக்கவும்....

பின்பு ஒரு பௌலில் குலாப் ஜாமூன் மிக்சு சேர்த்து நன்றாக கலக்கி அதில் காய்ச்சிய பால் சிறிது சிறிதாக சேர்த்து மெதுவாக பிசரவும்....

பின்பு அழுத்தி சிறு உருண்டையாக கையில் நெய் விட்டு விரிசல் விடாமல் உருட்டி எடுக்கவும்...

பின்பு எண்ணெயில் பொரித்து எடுத்து சர்க்கரை பாகில் ஊற வைத்து சிறிது நேரம் கழித்து சாப்பிடவும்....

திண்டுக்கல்சமையல்

**மைதிலி சம்பத்**
*செகந்திராபாத்-15,*



# குங்குமச் சிமிழ்

வெறித்த பார்வையுடன் உட்கார்ந் திருந்த மீனாட்சியிடம் சுந்தரேசன் 'தெய்வத்தின் குரல்' புத்தகத்தை எடுத்துக் கொடுத்து, 'ரொம்ப ஒசத்தியா இருக்கு இந்த புஸ்தகம். நீயும் படியேன்' என்று எடுத்துக் கொடுத்துவிட்டு, தானும் 'அருணாசல மகிமை' புத்தகத்தைக் கையில் எடுத்தபடி சாய்வு நாற்காலியில் சாய்ந்தவர், அப்படியே சற்று கண்ணயர்ந்துவிட்டார். 15 நிமிடங்கள் கழித்து கண் விழித்தவர், மீனாட்சியும் தூங்கியிருப்பாள் என்று ஊஞ்சலைப் பார்த்தார். அவளைக் காணோம்.

'இவளை என்ன செய்வது?' என்று தனக்குள்ளே சொல்லியபடி உள் அறைக்குப் போனார். அவளுடைய பித்தான பெற்ற மனம் அங்குதான் கூப்பிட்டிருக்கும் என்ற அவர் நினைப்பு சரியாகவே இருந்தது. அந்த அறையில் இரட்டைக் கதவு தேக்கு மர பீரோவைத் திறந்து கொண்டு தனக்குத்தானே ஏதோ பேசியபடி அதற்குள் புதைந்து போயிருந்தாள் மீனாட்சி.

வாசற்கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. தட்டியது எதிர் வீட்டு பார்வதி.. மீனாட்சிக்கு ரொம்பவே சிநேகம். இவர் அவசரமாக அவளிடம், 'மீனாட்சியை உங்களோடு கூட்டிக் கொண்டுபோய் கொஞ்சம் தாயம், பல்லாங்குழி என்று ஏதாவது விளையாடிப் பொழுதை போக்க வையுங்களேன். அவளைப் பார்த்தா கண்றாவியா இருக்கு ' என்றார்.

பார்வதியே உள்ளே போய் மீனாட்சியை வற்புறுத்திக் கூட்டிக் கொண்டு போனாள். அவளைப் பித்து என்றாரே, இவர் என்ன பண்ணினார்? தான் போய் அந்த பீரோவைத்திறந்துவைத்துக்கொண்டு நின்றார். ஆண்பிள்ளையான இவருக்கே துக்கம் தொண்டையை அடைத்தது. ஒரு அருங்காட்சியகமே அங்கிருந்தது. பீரோவில் மேல் தட்டு முழுவதும் அழகான பட்டுப் பாவாடை, தாவணி, ரவிக்கை என்று வண்ண வண்ணமாக வைக்கப்பட்டிருந்தன. அதற்குக் கீழ்தட்டில் நாலு வளையல் ஸ்டான்ட்கள் நிறைய கண்ணாடி, முத்து, தங்கக் கலர் என்று வளையல்கள். பீரோவின் கதவுகளில் உள்ள கொக்கிகளில் தினுசு தினுசான ஜடைக் குஞ்சலங்கள். டப்பாக்களில் வெவ்வேறு மாடல்களில் கொலுசுகள்.

பீரோவின் அடித் தட்டைப் பார்க்கை யில்தான் வயிற்றெரிச்சலாக இருந்தது. நான்கு, ஐந்து பெரிய அழகுத்தட்டுகளில்

குங்குமச் சிமிழ்கள், அவற்றில்தான் எத்தனை வகை!. சுந்தரேசன் உத்தியோக நிமித்தம் இந்தியா முழுவதும் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர். எந்த ஊருக்குப் போனாலும் தன் மகளுக்குப் பிடிக்குமே என்று அந்த ஊரின் விசேஷமான குங்குமச் சிமிழ்களை வாங்கி வந்து கொடுப்பார். அப்படி அவள் சேர்த்து வைத்திருந்ததில் ஆக்ராவின் பளிங்கு குங்குமச் சிமிழ், ஹைதராபாதின் பொடிக் கண்ணாடி ஒட்டிய வண்ணச்சிமிழ், மைசூரின் சந்தனச் சிமிழ், தஞ்சாவூரின் பெரிய கண்ணாடி ஒட்டிய ஜரிகைச் சிமிழ், கேரளாவின் தந்தச் சிமிழ் என்று எல்லாவூர்ச் சிமிழ்களும், வண்ண வண்ணக் குங்குமங்கள் தாங்கி வீற்றிருந்தன.

மீனாட்சி கண்ணில் படாமல் இவரும் ஒருமுறை அந்தப் பீரோவைத் திறந்து வைத்துக் கொண்டு குமுறுவதுதான் தினமும் அந்த வீட்டில் நடக்கிறது.

அடுத்தது அவர் கம்ப்யூட்டர் முன் உட்கார்ந்து கடைசியாக அவர்கள் பெண் கற்பகவல்லி அனுப்பியிருந்த மெயிலைத் திரும்பவும் படித்தார். அதுதான் ஒரு மாதமாகப் படித்து, படித்து மனப்பாடமாகிவிட்டதே !

‘ எனதருமை அப்பா அம்மாவிற்கு,

அன்பு மகள் கற்பகவல்லி கோடானு கோடி நமஸ்காரங்கள். நீங்கள் இருவரும் நலமா ?

இந்தக் கடிதம் பார்த்து உங்களுக்கு என்மேல் ரொம்பவும் கோபம் வரும். அதிர்ச்சியாக இருக்கும். ஆனாலும் உங்களுக்கு என் மீது இருக்கும் அதீத அன்பால் என்னை மன்னித்துவிடுவீர்கள் என்பது என் நம்பிக்கை. எனக்கு இங்கு வந்ததும் அறிமுகமான ராபர்ட்டைப் பற்றி இதற்கு முன்னேகூட எழுதியிருக்கிறேன். நான் இங்கு வந்ததும் வீட்டு நினைவாகவே இருந்து,, நான் திண்டாடும்போது என்னைப் பார்த்துக் கொண்டு, நான் இங்கு சற்று நிலைப்பட உதவியவர் அவர். மிகவும் நல்லவர்.

நாங்கள் இருவரும் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்துவிட்டோம். என்னை மன்னித்துவிடுங்கள். கொஞ்ச நாட்கள் கழித்து நாங்கள் இருவருமாக அங்கு வந்துவிடுவோம். என் வீடு, நான் பிறந்து வளர்ந்த மைலாப்பூர், என் அப்பா அம்மா, முக்கியமாக என் பீரோவில் வைத்திருக்கும் பொக்கிஷங்களையெல்லாம் நிரந்தரமாக விட்டுவிடுவேனா?

மீண்டும் மன்னிப்பைக் கோரும்,

உங்கள் அன்பு மகள்,
கற்பகவல்லி.

இந்தக் கடிதத்தைப் படித்ததும் அவருக்குத் தோன்றியது இதுதான்.. கொஞ்சம் அதிகமாகவே நம்ம ஊர், நம் மண், நம் வழக்கங்கள் என்று வலியுறுத்தியதால்தான் பிரிந்திருக்க நேர்ந்ததும், இப்படித் தடம் பிறழ்ந்துவிட்டாளோ? நம் இலக்கியத்தில்- அதுவும் பக்தி இலக்கியத்தில் அவளுக்கு அபரிமிதமான ஈடுபாடு உண்டு. எல்லாம் இவர் உண்டாக்கியதுதான். இவர் தாத்தா கி. வா. ஜாவிடம் பாடம் கேட்டவர். எனவே இவர் வேறே பெரிய வேலை பார்த்தாலும் மனதினுள் தமிழ் ஆர்வம் சற்றும் குறையவில்லை. கற்பகவல்லியும் தமிழ் வித்வான் படிப்பு படிக்கிறேன் என்றுதான் சொன்னாள். அவசியம் என்றால் மட்டும் டீச்சர் வேலைக்குப் போவேன் என்றாள். அழகாக அதையே செய்யச் சொல்லி இருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்காது.. போனதைப் பற்றி

இப்போது நினைத்து என்ன பயன்? ஆனால் தான் மனம் தேறிவிடுவோம். மீனாட்சிதான் ரொம்பவே வேதனைப் படுகிறாள். இது அவள் உடல் நிலையைப் பாதித்து விடுமோ என்று பயமாக இருந்தது.

சின்ன வயதிலிருந்து மைலாப்பூரில் வளர்ந்தவள் கற்பகவல்லி. தானே கற்பகாம் பாளைப் போலத் தான் அலங்கரித்துக் கொள்வாள்.. அவள் அழகிற்கும், உயரத் திற்கும், கலருக்கும் அது மிகவும் பொருத்த மாக இருக்கும். அவளுடன் படித்த எல்லாரும் கொஞ்சம் கொஞ்சமாக ஸல்வார் கமீஸ் என்று மாறியபோதுகூட அவள் பாவாடை தாவணிதான். நிறையப் பெண்கள் தலை முடியை பாப் செய்துகொண்டு, இன்னும் புதுப் புது அலங்காரமெல்லாம் பண்ணிக் கொண்டு காலேஜுக்குப் போய்வந்தாலும், இவள் மட்டும் பின்னலும், தலை நிறைய பூவுமாகத்தான் காலேஜுக்குப் போவாள். படிக்க எத்தனை இருந்தாலும் ஒருநாள்கூட வீட்டில் பூஜையை விடமாட்டாள். கற்பகாம்பாளைத் தரிசிக்காமல் இருக்க மாட்டாள். இவர்கள் முன்னோர்கள் சொந்த ஊரில் கோவில் கட்டியவர்கள். சுந்தரேசனின் தந்தை அறங்காவலராக இருந்தவர். இவளுக்கு அத்தனை பக்தி இருந்ததில் அதிசயமென்ன?‘ உனக்கு அல்ட்ராமாடர்னாகத்தான் வரப்போறான் ஒருத்தன்‘ என்று அவளை எல்லோரும் கேலி செய்வார்கள். ‘நாளைக்குக் கல்யாண மாகி வெளிநாடு போக நேர்ந்தால் அங்கும்போய் இப்படித்தான் அலங்காரம் பண்ணிக் கொள்வாயா?‘ என்று உறவுக் காரர்கள் அவளைச் சீண்டுவார்கள்.‘ நான் மைலாப்பூரைத் தாண்டி வாழ்க்கைப் படவே மாட்டேன்‘ என்பாள் கற்பக வல்லி. அவளை அப்படித்தான் எல்லோ ரும் கூப்பிடுவார்கள். அவளுக்கும் அது தான் பிடிக்கும். ‘அம்பாள் பெயரை வைத்திருக்கும்போது ஏன் அதைச்

# ஹைக்கூ கவிதைகள்

●ஒற்றைக் கயிற்றில்
ஒன்றானது கரங்கள்
ஊர் சுற்றுகிறது தேர்

●பெரு வனம்
குயிலுக்கு போதுமானது
சிறு கிளை

●விளைந்த வயல்
சோளக்காட்டு பொம்மை வயிற்றில்
குருவி கூடு

●கோயில் திருவிழா
இரவிலும் விழித்திருக்கிறார்
பாய் வியாபாரி

●வட்டமிடுகிறது கழுகு
பூனையின் நிழலில்
எலி வளை வாசல்

●இடி ஓசை
கதவுக்கு பின் பதுங்குகிறது
காவல் நாய்

●விளக்கு ஏற்றிய குச்சியில்
பற்றி எரிகிறது
சிகரெட்

●பூந்தோட்டக்காரர்
காதலியிடம் நீட்டுகிறார்
ஒற்றை ரோஜா

**ஐ.தர்மசிங்**, நாகர்கோவில்

சுருக்குகிறீர்கள்?' என்பாள்.

விதி என்றுதான் சொல்லவேண்டும். அவள் பல்கலைக்கழகத்திலேயே முதல் மாணவியாகத் தேறியதும், அமெரிக்காவில் உபகாரச் சம்பளத்துடன் அவளைக் கூப்பிட்டதும், மீனாட்சியும், சுந்தரேச னுமேகூட அவளை கட்டாயப்படுத்தி அனுப்பியதும். எல்லோருக்கும் இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்குமா என்பதுதான் எல்லோருடைய எண்ணமும். குமைந்து, குமைந்து தூக்குக் கயிற்றில் தொங்கும் கைதியின் மனநிலையில் இருவரும் ஒரு மாதத்தைக் கடத்தினார்கள். அன்று காலை வாசல் அழைப்பு மணி அடிக்க, போய் கதவைத்திறந்த மீனாட்சி 'இங்கே வாங்களேன்' என்று பெரிதாகக்குரல் கொடுத்தாள். பதறிப் போய் அங்கே பார்த்தால் இவர்களின் செல்வ மகள் அங்கே நின்றிருந்தாள். இவர்கள் அதிர்ச்சி யில் உறைந்து நிற்க, அவள ஓடிவந்து இருவரையும் கட்டிக் கொண்டாள்.

'என்னப்பா, அசந்துபோய் நிக்கறீங்க? உங்க பொண்ணு கற்பகவல்லியேதான். நான் மட்டும்தான் வந்திருக்கேன். அமெரிக்காவும் வேண்டாம், அங்கே நான் பண்ணிக்கறதா இருந்த கல்யாணமும் வேண்டாம்ன்னு எந்த சேதாரமும் இல்லா மல் வந்துவிட்டேன்' என்று சொல்லி சிரித்தாள்.

உள்ளே வந்து மூவரும் ஆசுவாசப் படுத்திக் கொண்டபின் அவள் சொன்ன விவரம் இவர்களுக்கு ஆச்சரியத்தையும் பெருமையையும் தந்தன.

ஒன்றரை வருடமாகத் தெரியும் என்றா லும் கற்பகவல்லியும், ராபர்ட்டும் தங்கள் காதலை இரண்டு மாதத்திற்கு முன்புதான் தெரிவித்துக்கொண்டிருக்கின்றனர். உடனே இவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள். அதன்பிறகுதான் முதன்முதலில் நெருங்கிய சில நண்பர்களுடன் அவனையும் தன் வீட்டிற்கு அழைத்திருக்கிறாள். வீட்டிற்கு வந்தவன் இவளுடைய பூஜை அலமாரியைப் பார்த்திருக்கிறான். என்னவோபெரியதமாஷ்போல்வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்துத் தீர்த்தானாம். 'இதெல்லாமா உங்க கடவுள் ? வேடிக்கை' என்றும், இன்னும் பலவும் சொல்லிச்

---

# சிதறி சிரித்த கடல்

கரையேற்றி விடென
கால்களைப் பிடித்துக்
கெஞ்சிய அலைகளுக்குக்
கைக்கொடுத்து உதவிடாது
வீடு திரும்பிய பின்
தவிக்க விட்டு விட்டு
வந்த கவலையோடு
ஒப்பனையைக் களைகையில்
கால் கொலுசிலிருந்து
சிதறி சிரித்தது
ஈர மணலோடு
கடல்.

அப்பு ராஜகுமார்

சிரித்தானாம். இவள் மதிக்கும் விஷயத்தைப் பார்த்து அப்படிச் சிரித்தால் அவளுக்கு எப்படி இருக்கும்? என்று யோசிக்கும் நாகரிகம் கூட இல்லாதவனையா அவள் தேர்ந்தெடுத்தாள்.? என்பது அவளுக்கு முதல் அதிர்ச்சி.

அடுத்து இவளுடைய சின்ன வயதிலிருந்து அன்று வரை எடுத்துக் கொண்ட போட்டோக்களின் ஆல்பம் ஒன்று அவளிடம் உண்டு.. இவன் அதைப் பார்த்ததும் அதற்கொரு பெரிய கேலி அவனிடம். 'ஒரு போட்டோவில் கூட நீ நன்றாகவே டிரெஸ் போட்டுக்கல்லியே' என்று கேட்டிருக்கிறான்.. ' எனக்கு எங்க நாட்டு டிரெஸ்தான் இஷ்டம். தீராது என்று இங்கே குளிருக்காக ஜீன்ஸ், ஷர்ட், கோட் எல்லாம் போடறேன். 'என்று இவள் சொன்னது அவனுக்குப் பிடிக்கவில்லை 'கல்யாணத்தின் போதும், அதற்கு அப்புறமும் கூட நீ இந்த மாதிரி டிரெஸ் பண்ணி அந்த போட்டோவையெல்லாம் பூஜை என்று பூப் போட்டு கும்பிடுவியா ?!' என்று கேட்டானாம். .

எல்லாவற்றையும் விட பெரிய விஷயம் அவன் குடும்பத்துப் பிண்ணனியை அவன் சொன்னபோது இவள் அடைந்த அதிர்ச்சி . அவன் அவனுடைய அம்மாவின் மூன்றாவது கணவனின் பையனாம்.. அப்பாவிற்கு அவள் இரண்டாவது மனைவியாம். அம்மாவிற்கு முதல் இரண்டு கணவர்கள் மூலம் ஒவ்வொரு பிள்ளையும், அப்பாவிற்கு முதல் மனைவி மூலம் ஒரு பெண்ணும் உண்டாம். இவளுக்குக் கேட்டால் வாந்திக்கே வந்து விட்டதாம்.. 'சரி, அவங்க என்னோட அப்பா அம்மாதானே, ஆனா நாம என்ன அவங்களோடவா இருக்கப் போறோம் ? ' என்று சிரித்தானாம்.

'பின்னே, எங்க அப்பா, அம்மாவை நான் கொண்டுவந்து வெச்சுக்க முடியாதா?'

'நம்ம வாழ்க்கையை நாம் வாழும்போது அவங்கெல்லாம் எதற்கு?' என்றானாம்.

'அவன் எனக்கு வாங்கிவந்திருந்த டிரஸ்ஸைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சியாகிவிட்டது. ஆக இவனுக்குப் பெரியவர்கள் வேண்டாம். அவர்கள் மீது மரியாதை கிடையாது, உடம்பு மூடி துணி போடவேண்டாம். தன்னைவிட பெரிய பரம்பொருள் ஒன்று உண்டென்று நம்பி மனதைச் சுத்தப்படுத்த பிரார்த்தனையும் வேண்டாம். மற்ற தேசத்தினர் இலை, தழை, உடுத்திக் கொண்டிருந்த காலத்திலேயே இத்தனை நாகரிகங்களையும் கடைப்பிடித்த என் தாய் நாடும், மக்களும் எங்கே? இவன் எங்கே? நல்ல வேளை சுதாரித்துக் கொண்டேன், சரியாம்மா? ஒன்றையும் கேட்காமல் கல்யாணம் பண்ணிக்க இருந்த என் மடத்தனத்தை நொந்துகொண்டு 'நாம் பிரிந்துவிடுவோம்' என்று அவனிடம் சொன்னேன் அதையும் அவன் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனார் வாக்கிற்கு நானாக ஒரு அர்த்தம் கற்பித்து கல்யாணம் செய்து கொள்ள முடிவுசெய்தேன். 'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் பழந்தமிழ் வாக்கை நினைத்து நல்லபடியாகத் திரும்பிவிட்டேன். சரியாப்பா? நடுவில் என் புத்தி தடுமாறியதற்கு என்னை மன்னிச்சுடுங்க'

'என் கருவூலம் என் தாய்நாடுதான். தமிழ் மண்தான். புரிந்து கொண்டுவிட்டேன்' என்று தொடர்ச்சியாக, நீளமாக, உருக்கமாகச் சொல்லிமுடித்தாள்.

கபாலி கோபுரத்தைப் பார்த்து கை குவித்தனர் சுந்தரேசனும் மீனாட்சியும்.



# சிட்டுக்குருவி

நுளம்புசூழ் உலகின் வெற்றி வீரர்கள்
உளவியலின் மேன்மை மலர உதவிடுவர்
களத்தில் நிற்கும் அழகில் மயக்குபவர்
குளத்தின் புழுக்களை மகவுக்கு ஊட்டுபவர்

குட்டிக் கால்களால் குதிநடனமிடும் அழகு
பட்டி தொட்டியெங்கும் அன்பின் பழகு
ஒட்டி உறவாடும் தலைவிகளின் தோழிகள்
சுட்டிகளாய் சுற்றித் திரியும் தேவதைகள்

அடைக்கலக் குருவிகளாய் வீட்டுக் குருவிகளாய்
தடையின்றி நம்மோடு ஒட்டி உறவாடுவதாய்
ஊர்க்குருவிகளாய் பயமின்றி சுற்றித் திரிபவை
யார்க்கும் கொஞ்சலாம் எனத் தோன்றுபவை

பழுப்பும் சாம்பலும் மங்கலான வெள்ளையுமென
அழுக்கின்றி சுதந்திரமாய் சுற்றித் திரிவதென்ன
முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் சிட்டுகளே
குட்டிக் குட்டிக் குச்சிகளாலே கூடமைக்கிறாயே

அடுக்குமாடி வீடுகள் எங்கும் பரவியதாலே
துடுக்காய்ச் பறந்து திரிந்த சுதந்திரம் பறிபோனது
ஒடுக்கப்பட்டவர் போலே இனம் அழிகிறதே
தடுத்திடுவோம் இந்த நிலையை உறுதியாய்

சிட்டுக்குருவி தினத்திலே செயற்கைக் கூடுகள்
தட்டின்றி மரங்கள் தோறும் கட்டி வைக்கிறோம்
சுட்டியாய் மீண்டும் எங்களோடு அன்பாகவே
பட்டி தொட்டியெங்கும் பறந்து திரிய மீண்டு வா



– பல்லாங்குழலன்

சேஹூ மொஹம்மது பௌஸிறா,
முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி.

# பெண்மை

உருண்டோடும் உலகத்தின்
உயிர்ப்புகளுக்கு இடம்கொடுக்கும்
கருவறைக் காவியத்தில்
முடிவடையாத தொடர்களுக்குள்

தொங்கியபடி
பிணைப்பின் உறுதியைக்
கொண்டாடுதற்கு
அவள் வதனத்தின்
சித்திரப் பக்கங்களுக்குள்

சிதையாத புன்னகை
இயல்பாகிப் போனது
கண்களால் பேசிப்
பழகிய மென்மையோடு

பிஞ்சுப் பருவம்
மலரும் போதெல்லாம்
தந்தையின் விழிகளுக்கு
அழகியின் அவதாரமாய்

விஞ்சி வயது
கடந்து செல்கையில்
வீட்டின் கதாநாயகியின்
தோற்றத்திற்கு சாட்சியானாய்

மணப்பெண் மகுடத்தில்
காந்தனின் காந்தப் பார்வைக்குள்
சிறைகொண்டு  சிக்கியபடி
இணையான துணையானாய்

அஞ்சா நெஞ்சம் கொண்ட
ஆடவர் பின்னாலே
ஆகாயக் குடை கொண்டு
ஆறுதல் அளித்தவளே



வாட்டிய வறுமையிலும்
வாடாத மல்லிகையாய்
வானம் பார்த்தபடி
அடுப்போ பூத்திருக்கும்

பசியின் பிடிமானம்
மூத்தபிள்ளை கூந்தல்பிடிக்க
இளையவளோ இறுக்கியபடி
முந்தானை இழுக்க

சாந்தியுடன் சமாளித்து
சாத்தியமான உடன்பாடு
கண்ணீரை திசைதிருப்பி
சாதனை புரிந்தவளே

பத்துமாதம் தான்சுமந்து
இன்னலுடன் உருக்குலைந்து
விழிமூடா இரவுகளுக்குள்
உருண்டும் புரண்டும்

உதிர்வு தேடும்
கனவுப் பூக்களை
நனவோடும் கனவோடும்
களைப்பின்றிச் சுமந்தபடி

இதழ் விரிக்கும்
புன்னகையின் சொந்தக்காரி
விழியோரம் கசியும்
கண்ணீரைப் பொசுக்கியவளாய்

பொங்கும் முகங்களுக்குள்
பொறுமையை அணிந்து
மாறும் மனங்களோடு
ஓயாத போராட்டம்

விழிக்கும் விடியல்களுக்கெல்லாம்
விளக்கேற்றி அழகுபார்க்கும்
அவள் தியாகம்
வையகம் நிலைக்கும்வரை
தொடர்வதே நியதி

## புத்தக திறனாய்வு

‘லிமர்புன் சிறகுகள்’ வார்த்தையே வித்தியாசமாக இருக்கிறது அல்லவா??? லிமர்புன் சிறகுகள்- கவிதை தொகுப்பாகும் தமிழில் இவ்வகையில் வெளிவந்துள்ள முதல் தொகுப்பு நூல். லிமர்புன் என்றால் உரைநடையும் லிமரைக்கவும் சேர்ந்து வரும் கவிதை வடிவம். ஒரு தலைப்பு அந்த தலைப்பை பற்றி ஒரு கதை /கவிதை அல்லது உரைநடை / நிகழ்வு குறிப்பிட்டு அதன் பிறகு புதுக்கவிதை எழுத வேண்டும் (மூன்று வரிகளில் ஒரு கவிதை) அதுவும் ஓசை நயத்துடன் அந்தக் கவிதை இருப்பதே சிறப்பு.




இவ்வளவு இலக்கணமும் இருக்கின்ற ஒரு கவிதை வகையா என்ற பிரமிப்பே இப்புத்தகத்தை முழுமையாக வாசிக்கத் தூண்டியது.

இதில் 30 பேர் இணைந்து ஒவ்வொரு கவிதையையும் அவர்களுடைய அனுப வத்தின் வரிகளாய்த் கொடுத்திருக்கின்றனர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

முதலில் இரசித்த கவிதை கட்டுப்பாடு கள் சாத்தியமில்லை. இன்றைய காலத்தில் நாம் மிகப்பெரும் பிரச்சனையாக சந்தித்துக் கொண்டிருக்கும் ஒன்றுதான் திருமண வீடுகளில் பந்தியின் பின்னால் நின்று அடுத்து பந்திக்கு இடம் பிடிப்பது. இது உண்மையிலேயே வேடிக்கையானதாய்த் தோன்றினாலும் வேதனையான ஒன்று. இவ்வளவு நேரத்துக்குள்ளாக சாப்பிட ணும் என்று யாரும் யாரையும் கட்டுப் படுத்த முடியாது. அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்று.

இளம் வயதிலேயே திருமணம் நடந்த ஒரு பெண் தன இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு பத்தாவது படித்து, முதுகலைப் பட்டம் வரை முடித்து, இடைவிடாத முயற்சியால் ஐபிஎஸ் எப்படி தேர்வா னார்கள் என்பதை கூறும் அழகான ஒரு கவிதை ரொம்ப சிறப்பாக எழுதப் பெற்றுள்ளது.

வெற்றிலை கொடி கொம்பில் படரா மல் தரையிலேயே தொடர்ந்து படர்ந்து போனதும், அதன் பிடிவாதம் எப்படிப் பட்டது பாருங்களேன் என்று ஒரு கவிதை.

எறும்பு அணிவகுப்பின் நடுவில் நம்முடைய காலடி ஓசை அதற்கு ஒரு பூதகி தான் வராங்க ஆபத்து நமக்கு என்கிற எண்ணத்தை தந்து வேகமாய்ச் சிதறிப்போகின்றன. அவரவர் பார்வையில் அவரவர் சரியே அப்படிங்கற மாதிரியான

உணர்வைத் தரும் படைப்பு.

நம்ம எப்பவுமே புரிந்துணர்வுடன் (Empathy) இல்லை என்பதை இந்த கவிதை ஞாபகப்படுத்தியது.

தற்காலத்தில் எப்படி நம்முடைய சமுதாயத்தில் சூழல்கள் இருக்கின்றது திட்டங்கள் எப்படி மக்களுக்கு சென்று சேருகின்றது பற்றிய சிறப்பான படைப்பு கள். அடுத்து நெகிழியின் பயன்பாடு விலங்குகளை எங்ஙனம் துன்புற வைக்கிறது என்ற வரிகளில் நாம் குற்றவாளிகளே.

முதுமையை எவ்வளவு இனிமையாக மன உறுதியோடு அதுவும் ஒரு பரிணாம வளர்ச்சியாக பார்க்க வேண்டுமென்பதை நேர்மறையாய் தந்ததும் அழகு. அதற்கு முரணாய் மற்றொன்றில் இளமையில் தனிமை கிடைப்பதில்லை. ஆனால் முதுமையில் தனிமை மிகவும் கொடுமை.

தனிமை என்னவோ ஒரே உணர்ச்சி தான். ஆனா அதை நாம் எடுத்துக் கொள்ளும் விதம் முற்றிலும் வேறே. அந்த நபரையும் அவர்களின் சூழலும் சார்ந்தது.



இலாவண்யா மணிமுத்து

வெற்றிகள் உடனே கிடைப் பதில்லை, அதற்கான காலம் வரும் வரைதோல்விஎனும்படிக்கட்டில் ஏறித்தான் ஆகவேண்டும் என வழிகாட்டும் ஒன்று. மழை நீரை எப்படியும் சேகரிக்க வேண்டும், அது எல்லா உயிரினங்களுக்கும் உயிர் நீராய் இருக்கும் என்று வலியுறுத்தலாய் ஒன்று. அது போல எப்பவுமே வாய்ப்பு களை உருவாக்குவதற்காக உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும், அப்போது கண்டிப்பாக வெற்றியும் நம்மைத் தேடி வரும்.

மொழி எவ்வளவு முக்கியம், நாகரீகம் கற்றுத் தந்தது என்று மொழியின் சிறப்பை கூறும் விதமும் , நம்முடைய சமுதாயத்தில் மற்றவர்களுக்கு எப்பவும் உதவி செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கமும், சிக்கனம் எவ்வளவு உதவிகளைச் செய் கிறது நமக்கு என்ற பேருண்மை ஒன்றில்.

குழந்தை வளர்ப்பில் இரு வேறு வாழ்வியல் சூழலின் வேறுபாட்டைக் காட்டும் ஒன்று.

அதே போல் கோழிக்குழம்பின் ருசியை மருந்தாக தந்ததும், பசியின் கிறக்கறத் தினால் தூங்குவது போல மயங்கியவனின் வேதனையும், முயற்சிப்பது நம்முடைய வாழ்வில் பயிற்சி, அயர்ச்சியால் அதை விடாதே எனவும், நட்பின் முக்கியத்து வத்தையும், கட்டுரைகள் நமக்கோ அறிவு பெட்டகமாக திகழ்கிறது என்றும், இன்று நம்முடைய சமூகத்தில் நடக்கின்ற அவலங்களை சிறப்பாக கவிதை வரி களாக படைத்திருக்கிறார்கள் பலரும். புரிதல்களை இல்லாமல் இருந்த கணவன் மனைவி வயது ஒற்றுமையான புரிதலாய் மாறிய விதம் கூறியது நன்று.

வளர்ச்சி எப்படி இருக்க வேண்டும், ஏழையின் சிரிப்பு எத்தகையது எனவும் கூறியுள்ள அனைத்தும் அதி அற்புதம். இது ஒரு புது விதமான அனுபவம். ஒரு கவிதையாவோ கட்டுரையாகவும் இல்லா மல் நம்மைத் தூண்டி அதைப்பற்றி இன்னும் சிந்தனைகளை வளர்க்கிறது.

இடியாய் முழங்கிய நிலவும், தனக்கு மிஞ்சித் தான் தானமும், வீட்டுப் பண்டத்தை ருசிக்கவும், சிற்பியின் நிலையையும், ஒன்று எப்படி எல்லாமு

மாகும், தலைமுறை காப்போம், திரு மணத்தில் துயரம், காக்கை தவிர்த்திடும் சீக்கை, அன்புச் சுடரை அழிக்கும் தொடர், காலச் சுழற்சியும், விடியலும், கற்றலும், கட்டுப்பாடும், விலையுயர்வும், தடைக்கல்லும் படைக்கல்லே, ஓடமும் வண்டியும், தியானமும், நத்தையின் வித்தையுமாய் தொடர்கிறது இந்த பயணம்...

இந்தநூல்இன்னும்பலஇதயங்களுக்குச் சென்று நற்ச் சிந்தையினை தந்திடும் என்பது மிகையன்று. இதில் கவிதை வடித்த அனைத்து கவிஞர்களுக்கும் இதைச் சிறப்பாக தொகுத்து வடிவமைத்து கரங்களில் கொண்டு வந்து சேர்த்த திருமதி அன்புச்செல்வி அம்மா அவர்களுக்கும், நூலை வெளியிட்ட நூலேணி பதிப்ப கத்திற்கும் மனமார்ந்த வாழ்த்துகள். தொடர்ந்து தங்களுடைய திறமையை வெளிக்காட்டுவதற்கு பலருக்கும் இது ஒரு முதல் படியாக இருக்கும் என்பது நிச்சயம். இந்நூலின் அணிந்துரை, வாழ்த்துரை தந்த ஆன்றோர் அனைவருக்கும் மன மார்ந்த நன்றிகளும் வணக்கங்களும். இப்புத்தகத்தை இனிமேல் வாங்கி வாசிக் கும் அன்பு வாசகர்களுக்கும் வாழ்த்துகள், நன்றி!

இலாவண்யா மணிமுத்து

# தேன் சிந்தும் பூந்தளிரே ...

தேன் சிந்தும் பூந்தளிரே வருவாயா
தெவிட்டாத முத்தம் பலத் தருவாயா
கன்னல் சுவையென நீயும் தித்திகின்றாய்
சிவப்பழகு மேனிக்காரி வட்டபொட்டுக்காரி
முத்துப்பல்வரிசைக்காரி பௌர்ணமியானவளே
பூவிதழின் மென்மையென மனசுக் கொண்டாய்
அன்னநடை மெல்லநடை நீயும் நடக்கிறாய்
நித்தமும் முகம் பார்த்திட ஆசையும் வந்ததே
என் மனசெல்லாம் நீமட்டுமே குடிக் கொண்டாய்
காந்தவிழிப்பார்வையால் ஈர்த்திடவும்செய்தாய்
களங்கமில்லா வாழ்வினை உனக்கு தந்திடுவேன்
காதல் இருக்குமிங்கு இனிதேவாழ்ந்திடுவோம் .

கவிஞர்.இரா .சீ .பாலகுமார். M.A .,
சந்தோசபுரம் . சென்னை - 600073

# கற்பகத்தோட கல்யாணம்

பகுதி - 2

**அன்புச்செல்வி சுப்புராஜூ**

பட்டாபிராம், சென்னை -600072

கற்பகம் தலையாட்டிய நேரம்... "ஏத்தா கற்பகமுனு" சத்தமா கூப்பிட்டுக் கிட்டே பக்கத்து வீட்டு அத்தை வந்தாங்க... ஊருல அக்கம்பக்கம் எல்லோரையும் அண்ணன், அக்கா, அத்தை, மாமா, சித்தி, சித்தப்பானு ஒறவுமொற வச்சு கூப்பிடுறதுதான் வழமை... ''வாங்க அத்தைனு" வரவேற்கவும் உள்ளே வந்தாங்க..

"ஒன்னுமில்ல ..வர ஞாயிற்றுக்கெழமை நம்ம ஏரியாவுல இருக்கிறவுக எல்லோரும் சேர்ந்து வண்டி பிடிச்சு இராமேஸ்வரம் சுற்றுலாபோறோம்...உன்வீட்டுக்காரருக்கு ஒடம்பு முடியலைல.. நீயும் வந்து சாமி கும்பிட்டு வேண்டிக்கிட்டா சீக்கிரம் சரியாகிடும்னு எனக்குத் தோணுது. உனக்கு வரதுக்கு தோதுப்படுமானு" கற்பகத்தோட அம்மாகிட்டே கேட்டாங்க.

அம்மாவும் கொஞ்ச நேரம் யோசனை யோட இருந்தவுக 'சரி ... கடல்ல முங்கி எழுந்தா பாவந் தீருமுனு சொல்வாக, எப்ப என்ன பாவஞ் செஞ்சேனோ, எம்பொழப்பு இப்படி ஆஸ்பத்திரிக்கும், வீட்டுக்கும் அல்லாட்டமா இருக்கு. அந்த சாமி புண்ணியத்துல எல்லாஞ் சரியாகட்டும். வரேன் மதினி" னு சம்மதிச்சாங்க.

"வர்ற சனிக்கெழமை இராத்திரி கிளம்ப ணும்.. ஞாயிறு அக்காமடம், தங்கச்சிமடம், இராமேஸ்வரம் கோவில் பார்த்துட்டு திங்கள் காலைல வெள்ளனவே வீட்டுக்கு வந்துடலாம்.. ரெடியா இரு, எனக்கு வேல கெடக்கு, வர்றேனு" அத்தை வீட்டுக்குப் போயிட்டாங்க.

"எல்லோரும் போறோமா அம்மா" னு ஆசையா தங்கச்சி கேட்டாள்.

"இல்லத்தா, இப்ப இருக்கிற பண மொடைல எல்லாரும் எப்படி போக முடியும் சொல்லு... அம்மா மட்டும் போயிட்டு வர்றேன். நீங்க வீட்ல இருங்க, அக்கா உங்களைப் பார்த்துப்பா" னு அம்மா சொல்லவும், தங்கச்சி உருண்டு பொரண்டு அழத் தொடங்கியாச்சு. "ஏண்டி இப்படி அழறவ, வீட்டு நெலமை புரியாதானு..." னு கற்பகம் கேட்க "உன் வேலையப் பாரு... எப்பப் பார்த்தாலும் என்னைய எதாவது சொல்றதே உனக்கு பொழப்பு" னு தங்கச்சி கத்த, இருவரையும் அம்மா சமாதானப் படுத்தினாங்க. ஆனாலும் தங்கச்சி அடம் புடிச்சு அவளும் இராமேஸ்வரம் போக அம்மாட்ட சம்மதம் வாங்கிட்டா.

சனிக்கிழமை காலையிலேருந்தே "வீட்டையும், தம்பிகளையும் பத்திரமா பாத்துக்க, வேலைவெட்டிக்கு போனாலும் சீக்கிரமா வீட்டுக்கு வந்துடு, அப்பாவ போய்ப் பார்த்துட்டு, தம்பிய தொணைக்கு விட்டுட்டு வந்துடு... சரியா பாப்பா, கவனமாயிரு''னு திரும்பத் திரும்ப சொல்லிட்டே கற்பகத்தோட அம்மா இராமேஸ்வரம் போகத் துணிமணிகள் கட்டுச்சோறுனு தயார் செய்யத் தொடங்க.... மதியம் ரெண்டு மணி வாக்குல ஆஸ்பத்திரிலேயிருந்து தகவல் வருது...

தொடரும்...

# அழுகுரல்

பாலியல் சீண்டல்களால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது

சாதிய கொடுமைகளால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக் கொண்டே இருக்கிறது

ஆண்டான் அடிமைதனத்தால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக் கொண்டே இருக்கிறது

வேலைவாய்ப்பு இன்மையால்
ஏதேனும் ஒரு அழுகுரல் கே
கட்டுக் கொண்டே இருக்கிறது

பெண்களின் வேலை சுமையால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது

அழகில்லை என்று சொல்லி அடிப்பதால்
ஏங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது

குடிக்க பணம் கொடுக்கவில்லை என்பதால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக் கொண்டே இருக்கிறது

உன்ன உணவில்லை என்பதால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக் கொண்டிருக்கிறது

அரசியல் பலம் இல்லை என்பதால்
ஏதேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக் கொண்டே இருக்கிறது

உடல் பலம் இல்லை என்பதால்
எங்கேயும் ஒரு அழுகுரல்
கேட்டுக் கொண்டே இருக்கிறது

படைபலம் இல்லை என்பதால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக் கொண்டே இருக்கிறது

படுக்க இடம் இல்லை என்பதால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக் கொண்டே இருக்கிறது

இருக்க இடமில்லை என்பதால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக் கொண்டே இருக்கிறது

ஆதி குடிகளின் நிலங்கள்
அபகரிக்கப்படுவதால்
எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது

அழுக்கு மூட்டைகள் சேர்ந்து
மூச்சு விட முடியாமல் போவதால் பூமி
எங்கேனும் அழுது கொண்டே இருக்கிறது

காற்று மண்டலத்தில்
கரியமல வாயு அதிகரிப்பதால்
எங்கோ ஒரு மூலையில்
வானம் அழுது கொண்டிருக்கிறது

கடலில் கழிவுகள் சேர்வதால்
கடலும் அழுது கொண்டே இருக்கிறது
கடைமடைக்கு தண்ணீர் வந்து சேராததால்
விளை நிலத்தின் அழுகுரல் கேட்கிறது

தன் இருப்பிடங்களை எல்லாம்
அழித்துக் கொண்டிருப்பதால்
காடுகளின் அழுகுரல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது

விளையாடும் பருவத்தில்
புத்தக மூட்டைகளை முதுகில் ஏற்றுவதால்
குழந்தைகளின் அழுகுரல்
கேட்டுக் கொண்டே இருக்கிறது

பச்சை மரங்கள் அற்றுப் போய்க்
கொண்டிருப்பதால் பறவைகளின் அழுகுரல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது

பொருளாதார ஏற்றத்தாழ்வு
பெருகிக்கொண்டே இருப்பதால்
ஏழைகளின் அழுகுரல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது

விலைவாசி உயர்வால் அழுகுரல் கேட்கிறது
வியாதிகளால் அழுகுரல் கேட்கிறது

இனிப்பு நோயால் அழுகுரல் கேட்கிறது
புற்று நோயால் அழுகுரல் கேட்கிறது

புகலிடம் வேண்டி அழுகுரல் கேட்கிறது
புரிந்து கொள்ளாமல் அழுகுரல் கேட்கிறது
காதலால் அழுகுரல் கேட்கிறது
கைவிட்டதால் அழுகுரல் கேட்கிறது

கடவுளிடம் அழுகுரல் கேட்கிறது
கணவனிடம் அழுகுரல் கேட்கிறது
கட்சிகளிடம் அழுகுரல் கேட்கிறது

நீதிமன்றத்தில் அழுகுரல் கேட்கிறது
நிர்பந்தங்களால் அழுகுரல் கேட்கிறது
நீக்கி விடுவதால் அழுகுரல் கேட்கிறது

கவிஞர் புஷ்பா குமார்
திருப்போரூர்

## கெடுவல் யான் என்பதறிக

பெண்ணே விழிப்பாயிரு
பெண்மையை காத்திடு
தீண்டலை அனுமதிக்காதே
சீண்டினால் சீறிடு
பொல்லார்களை கண்டால்
பொங்கியே எழுந்திடு
தீயோர்களை அனலாய்
மாறியே பொசுக்கிடு
கற்புநெறி தவறாது
களங்கமில்லாது இருந்திடு
மாயையில் வீழ்ந்து
சிலந்திவலையில் சிக்கிடாதே
தன்மானமே பெரிதென்று
நினைத்திடு பெண்ணே
நல்ல துணைவனை தேர்ந்தெடுத்து
இல்லறம் நடத்திடு
கொண்டவன் துணையோடு
உறவை சிறப்பாக்கு
எக்கணமும் கற்புநெறி
தவறாது வாழ்ந்திடு
எண்ணம்போல் வாழ்ந்திடாது
கட்டுபாடுடன் இருந்திடு
பண்பாட்டை மறந்திடலாகாது
பழிச்சொல் ஏற்கலாகாது
ஒழுக்கமே உயர்வு
ஒருநாளும் மறவாதே
இல்லறத்தை நல்லறமாக்கு
கணவனை மதித்திடு
மனதில் கசடுகளை
நீக்கியே நலமாயிரு
அன்பான சதிபதியாய்
இவ்வுலகில் நிலைத்திடு
ஒருவனுக்கு ஒருத்தியென
உறுதி கொண்டிரு
மயங்காதே மனம்
கலங்கிடாதே நீயும்
கற்பை உயிராய்
எண்ணிடும் பெண்ணாயிரு
கெடுவல் யான் என்பதறிக எனும்
குறளை நெஞ்சமதில் இருத்திடுவாயே

கவிஞர் வெ.வெங்கட லட்சுமி காந்தன்
விருதுநகர்

ஆசிரியர் எழுத்தாளர்

# அ.ல.முகைமினா

## அவர்களுடன் நேர்காணல்

நேர்கண்டவர் தமிழ்நெஞ்சம் அமின்



■ வணக்கம் தங்களைப் பற்றித் சுருக்கமாகக்கூற முடியுமா?

● ஆம் நான் அ.ல.முகைமினா. எழுத்தாளர், ஆசிரியர், கவிஞர் சமாதான நீதவான் மற்றும் அரசியல் வாதியாக சமூகத்துக்காக சமூக செயற்பாட்டாளராக, ஊடக வியலாளராக என்னை அர்ப்பணம் செய்து வருகிறேன்.

■ உங்களது ஆரம்ப பள்ளிப் பருவம் குறித்துக் கூறுங்களேன்

● ஆமாம் நான் குறிஞ்சாக் கேணி முன் பள்ளியில் 1985 முதல் சென்று கற்க ஆரம்பித்தேன். அப்போது வாகிட் சபுறுன்னிஸா ஆசிரியர் நன்றாகச் சாரி அணிந்து வருவதும் பாடல்கள் பாடுவதும் எனக்கு மிக விருப்பமான விடயங்கள் . அப்போதே இவர்கள் போல ஆசிரியராக வரவேண்டும் என ஆசைப்பட்டேன்.

■ நல்லது மிகவும் சுவாரஸ்ய மாக உள்ளது நீங்கள் கூறுவது மேலும் உங்கள் பாடசாலைக் கல்வி பற்றிக்கூறுங்கள்

● நிச்சயமாக எனது குறிஞ்சாக் கேணி அறபா மகாவித்தியாலயம் தரம் 1-9 வரையில் கலவன் பாடசாலையாக இருந்து பின்பு 1996 முதல் கிண்ணியா மகளிர் மகாவித்தியாலயமாகத் தனிப்



இலங்கையின் 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர்களுக்கான வேற்று.மனுத்தாக்கல் வட்டார வேட்பாளர்களோடு





சுரத மீடியாவின் தமிழ்ப் பிரிவு செய்தித்தொகுப்பாளராக .செய்தி சேகரிப்பாளராக - (கிண்ணியா திருகோணமலை -2024 - 2025இற்கான) நியமனம் பெற்ற போது

பெண்கள் பாடசாலை உருவாக்கப் பட்டது.

தரம் 10 முதல் உயர்தரம் வரையில் குறிஞ்சாக்கேணி மகளிர் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றேன்.

தரம் - 04 படிக்கும் போதே பாடசாலையில் நூலகத்தில் தினகரன், நவமணி, தினமுரசு, வீரகேசரி முதலிய பத்திரிகைகளைப் படிக்க ஆரம்பித்தேன்

பத்திரிகைகளில்மரணஅறிவித்தல் பகுதியில் அதிகமாக கவிதை வடிவில் உள்ள விடயங்களை விரும்பிப் படிப்பேன். பின்பு இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்திலும் மரண அறிவித்தல்களையே அதிகம் கேட்பேன். இது எனது கலையார் வத்தை அதிகரித்தது. இப்படியே தேசிய சேவையில் ஒலிபரப்பாகும் முஸ்லிம் சேவையுடனும் எனது நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண் டேன்.

அறிவுக்களஞ்சியம் நிகழ்ச்சியில் தரம் நான்கு படிக்கும் போதே நேயர் வினாவுக்கு பரிசு கிடைத்தது.

அதைத் தொடர்ந்து பல நிகழ்ச்சி களில் என்னை ஈடுபடுத்திக் கொண் டேன்.

திி/குறிஞ்சாக் கேணி மகளிர் மகாவித்தியாலயத்தில் தரம் 12 வரை கலைத்துறையில் கற்று தென் கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பட்டதாரியாக 2006 இல் வெளியானேன்.

■ பள்ளி ஆசிரியையான தாங்கள் சந்தித்த சவால்கள்?

● பள்ளிகளில் மாணவர்கள் கற்றலில் பின்தங்கியிருப்பது எனக்கு ஒவ்வொரு பள்ளிகளிலும் சவாலாக இருந்தாலும் அவற்றை வெற்றி கொள்வதில் எனக்கு மிக ஆர்வமாக இருக்கும். எனக்குப் பொறுப்பளிக்கப்படும் மாணவச் செல்வங்களைத் தரம் பிரித்து குறித்த தவணைகளுக்குள் அவர்களை நூறுவீத அடைவைப்பெற்று விடுவேன். அது தவிர பொருளாதார நெருக்கடி அதிகமான மாணவர் களைக் கல்வியில் இருந்து பின் வாங்கிச் செய்வது பெற்றோரின் பராமரிப்பு மற்றும் கல்வியறிவின்மை ஆகியன மாணவர்களுக்குக் கற்பித்தலை முறையாக வழங்க முடியாத அளவுக்கு சவாலாக இருப்பதும் இங்கு சுட்டிக்காட்டப் படவேண்டியதாகும்.

■ பாடசாலைக் கல்வி பல்கலைக் கழகக் கல்வி முடித்த பின் என்ன செய்தீர்கள் கூற முடியுமா?

● ஆம் கூறுகிறேன்

அதனைத் தொடர்ந்து இரண்டு தனியார் நிறுவனங்களில் முகாமை யாளராக நிகழ்ச்சி ஒருங் கிணைப் பாளராகப் பணியாற்றினேன்.. தற்போது மாவட்ட சமாதான நீதவனாகவும் இருக்கிறேன். அத் தோடு திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா

**இலங்கையின் 77 வது சுதந்திர தினக்கொண்டாட்டம் தி/கிண்/இக்ரா வித்தியாலய முன்றலில்.பாடசாலை மாணவர்களோடு**





வையும்கற்று முடித்துதற்போதுவரை தி / கிண் / இக்ரா வித்தியாலயத்தில் தமிழ் மொழிப்பாட ஆசிரியராக கடமை புரிந்து வருகிறேன்.

■ சமாதான நீதவானின் பணிகள் எப்படியானது?

● இது எனக்கு சமூகத்தில் உள்ளவர்களோடு நீடித்த உறவைக் கட்டி எழுப்புவதில் மிகவும் பங்களிக்கும் ஒரு இலவசமான சேவையாகும். மாணவர்கள் அரச தனியார் தொழில்களில் இணைபவர்களுக்கான விண்ணப்ப உறுதியளித்தல் செய்யும்போது மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும். பாடசாலையில் மாணவர்களுக்குக் கற்பித்தலோடு மட்டும் எனது பணி முடிவுறாது தொடர்ந்து அவர்களுக்கான சமூக அங்கீகாரத்தையும் வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி எனக்கு. இப்பதவி பாடசாலைக்கு நீதியமைச்சினால் நேரடியாக தெரிவு செய்யப்பட்டு பயிற்சி யளிக்கபட்டு மத்தியஸ்த சபையில் பணியாற்றும் போது நீதியரசர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கடந்த பதினைந்து வருடங் களாக சமூகத்தில் நன்கு பயன டையும் சமாதான நீதவானாகத் தொழிற்படுகிறேன்.

■ உமது ஊடகத்துறைப் பிரவேசம் குறித்துக்கூறுங்களேன்.

● நிச்சயமாக மேலும் சுரத ஊடக வலையமைப்பில் தமிழ்ப் பிரிவு நிகழ்ச்சித் தொகுப்பா ளராக, நாடறிந்த சிறந்த எழுத்தா ளராக சமூக சேவையில் ஈடுபாடுடை யவராக. சமூகத்தில் பெண்கள், ஆண்கள், முதியோர், சிறுவர் என் அனைவரோடும் கலந்துரையாடி சிறப்பான தொடர்பாடலை



உடையவராக செயற்பட்டு வருகிறேன்.

■ நூலாசிரியராக தங்களைப் பற்றி தாங்களே கூறுவது சிறப்பாக இருக்கும் அது பற்றி எமக்கு அறியத்தாருங்களேன்.

● தமிழ் மொழிப் புலமை காரணமாக ஒரே வருடத்தில் மூன்று புத்தகங்களை வெளியீடு செய்து இருக்கிறேன். கவிதை, கட்டுரை, சிறுகதை, பாடல் எனப்பலதுறைகளிலும் சிறுவயது முதல் பல்வேறு வெற்றிகளை அடைந்து கலைப்பயணத்தை மேற் கொண்டு வருகிறேன்.




■ மேலும் தங்களைப் பற்றித் கூறுங்கள்.

● தற்போது கட்டையாறு வீதி, கிண்ணியா - 02 இல் தற்காலிகமாக வசித்து வரும் நான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாஞ்சோலைச் சேனை வட்டாரத்தில் பெண்கள் தேர்தலில் பங்களிக்க வேண்டும் என்ற அரச சுற்று நிருபத்துதுக்கு அமைய சிறீலங்கா பொதுஜன பெரமுன தேசியப் பிரதான கட்சி சார்பில் முதன்மை வேட்பாளராக களம் இறங்கி இருக்கிறேன். இதுவும் எனது பால்ய காலத்து ஆசையின் நிறைவேற்றமாக கருதுகிறேன்.






திரு/கிண்/இக்ரா வித்தியாலயத்தில் 2025ஆம் ஆண்டுக்கான தரம் 01மாணவர்களுக்கான வயவேற்பு நடனத்துக்கான மாணவியரை ஆயத்தம் செய்த நிகழ்வில்

■ அரசியலில் களமிறங்கும் தாங்கள் சாதிக்க நினைப்பதென்ன?

● எமது ஊரின் கல்வி பொருளாதார சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாகவும் மற்றும் ஊரின் எழில் மிகு தோற்றங்களை மெருகேற்றிக்காத்திடப் பணிபுரிவதோடு முக்கியமாக எமது ஊர்ப்பெண்களின் ஆளுமை விருத்திக்கும் ஆற்றல்களுக்கும் முன்னுதாரணமாக இருந்து மிகச் சிறந்த அரசியல் பணியாற்றுவதற்கான முதல் முயற்சி இது சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் சாதிமத இன பேதமின்றி ஊருக்கும் நாட்டுக்கும் எனது திறமைகளினால் என்னை அர்ப்பணிக்கத் தயாராகியுள்ளேன்.

■ முகநூலில் அதிகமாக நேரத்தை செலவிடும் தாங்கள் சாதித்ததென்ன?

● முகநூலில் அதிகமான நேரத்தை செலவிடுகிறேன் என்பதைவிட எனது ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் கற்பவனாக மாறக்கிடைத்து உலக விடயங்களிலும் மார்க்க விடயங்களிலும் அதிகமான தேடலுக்கான விடையாக முகநூல் பயனளித்துள்ளது. முகநூலுக்கும் நன்றிகள்.



நூறு கவிஞர்களின் நூறு நூல்கள் வெளியீட்டில் கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் மங்கல விளக்கேற்றிய போது

■ முகநூல் பற்றிய தங்களின் கருத்து...?

● முகநூல் எனக்கு ஒரு புத்த வாசிப்பாளராக என்னை நூலகத் தோடு உள்ள நெருக்கத்தை அதிகரித்து கடந்த வருடம் மூன்று மாதகாலத்துக்குள் மூன்று இலக்கிய கவிதை நூல்களை வெளியிட உதவியது. எல்லா இடங் களிலும் நன்மை தீமை என்பதாக உலகம் வடிவமைக்கப் பட்டுள்ளது. அதனைப்பயன் படுத்தும் வரின் இயல்புக்கு ஏற்ப அவரவர் பயனடையலாம் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்

■ மிக அழகான ஒரு பேட்டி யை வழங்கிய நீங்கள் இளம் தலைமுறையினருக்கு விசேடமாக பெண்களுக்கு என்ன கூற ஆசைப் படுகிறீர்கள்.

● ஆமாம் இளம் தலைமுறை யினரை அனைவரும் எதிர்மறையாக நோக்கும் காலமாக இன்றைய நவீன தொடர்பாடல் யுகம் காணப்படுகிறது.

ஆகவே இளம் தலைமுறை யினரே நீங்கள் சமூகத்துக்கு மிகப் பெரும் சக்தி என்பதைக் கல்வியையும் கலைகளையும் கற்றுச் சிறந்த தலமுறையினராக தங்களை நிலை நிறுத்த வேண்டும் என அன்பாக வாழ்த்துக்கள் கூறிக்

கேட்டுக்கொள்கிறேன்.

■ தமிழ்நெஞ்சம் பற்றிய தங்களின் கண்ணோட்டம்...

● தமிழ்நெஞ்சம் உண்மையில் மிகவும் காத்திரமான இலக்கியப் பணிகளை மேற்கொள்வதை செவி வழி அறிந்தேன். பின்பு முகநூல் வாயிலாக தங்களைப்பற்றிய தொடர்பு கிடைத்தது. உமது தளம் மற்றும் இலக்கியப்பணியில் என்னை ஒரு வாசகனாக இலக்கியம் படைக்கும் படைப்பாளியாக களம் தந்ததற்கு தங்களுக்கு மனம் நிறைந்த நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன். தகவல் தொடர்பாடலின் விருத்தி யைத் தாங்கள் சிறப்பாகப் பயன் படுத்துகிறீர்கள். உங்களின் எதிர்கால வளர்ச்சி மேம்பாடுகளுக்கு உங்களுடன் இணைந்து பணி யாற்றுவதற்கான வாய்ப்பைக் கேட்டுக்கொள்கிறேன்.

■ தங்களைப் பற்றிய அருமையான பெறுமதியான ஒரு நேர்காணலை வழங்கிய உங்களுக்கு எமது நன்றிகளும் நீங்கள் எதிர்காலத்தில் இன்னும் பல்வேறு சாதனைகளைப் படைக்க வேண்டும் என வாழ்துக் களையும் கூறிக் கொள்கிறேன். வாழ்த்துக்கள் உங்களுக்கு நன்றி

● உலகில் உள்ள அனைவரும் அன்பாக நேர்மையாக வாழ வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன். மகிழ்ச்சி நன்றி.

2024 ஆம் ஆண்டுக்கான ஸ்கைதமிழ் விருது விழாவில் குடும்பம் சகிதம் கலந்து கொண்ட போது நிகழ்விடம் இலங்கைத் தென்கிழக்குப்பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தில்



# எண்ணங்களினால் மிளிரும் ஒரு மாளிகை..!

இயல், இசை, நாடகமென தமிழ் இலக்கிய மொழி மூன்று பிரிவுகளை தன்னகத்தே கொண்டிருப்பினும் நாடகம் ஒன்று தான் இயலையும், இசையையும் கூட தன்னுடன் இணைத்துக் கொண்டிருப்பது ஆகும்.

நாடகவடிவம் என்பது இன்று நேற்றல்ல, சங்க காலந்தொட்டே மக்களிடையே புழக்கத்தில் இருந்த ஒரு வடிவமாகும். பண்டைய காலங்களில் வேந்தர்களுக்காக நடத்தப்பட்ட நாடகங்களை வேத்தியல் என்றும், மக்களுக்காக நடத்தப்பட்ட நாடகங்களை பொதுவியல் என்றும் அழைத்தனர். சங்க காலத்தில் குரவைக்கூத்து, பாவைக்கூத்து, துணங்குக் கூத்து என பலவகை நாட்டிய வகைகள் இருந்தமைக்கு சான்றுள்ளது.

இன்றைய திரைப்படங்களுக்கு முன்னோடி வடிவம் நாடக வடிவமே. நாடகமென்பது டிராமொனியன் (Dramonian) என்ற கிரேக்க சொல்லின் வேர்ச்சொல்லாகும். தமிழ் நாடக உலகின் பிதாமகர்கள் பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோரெல்லாம் நாடகக்கலையை வளர்த்தெடுத்த முதல்வர்கள் ஆவர். நாடக உலகில் அவ்வைசண்முகத்தை அறியாதோர் எவருமிலர். அவரது கூற்று, ஒரு நாடகமென்பது நாட்டில் நடந்த, நடக்கின்ற, நடக்கப் போகின்ற விசயங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்துவதாக இருக்கும், அதாவது நாடு+ அகம் என்பதே நாடகம் என்பதாகும். நாட்டின் அகத்தை விவரிப்பதே நாடகம் என்றார் அவர்.

தமிழ் இலக்கிய நூல்களான சிலப்பதிகாரம் நாடகம் பற்றி தெளிவு படுத்துகிறது. அது மட்டுமின்றி மனோன்மணியம் முதல் தமிழ் நாடக இலக்கிய நூலாகும்..

பல திரைப்படக் கலைஞர்களின் நடிப்புப்பசிக்கு சரியான தீனி தந்திருப்பது நாடகங்களே எனில் அது மிகையில்லை. ஏனெனில் ஒரு கலைஞனின் நடிப்பிற்கு உடனடியான சன்மானம் (கைதட்டல் மற்றும் பாராட்டு) நாடகக் கலையில் மட்டுமே கிடைக்க கூடிய ஒன்று. இதற்கு சான்றாக நடிகர்திலகம் சிவாஜிகணேசன், எம்.ஆர்.இராதா போன்றோரை கூறலாம்.



நாடகத்தின் கதைக்களமும், ஒப்பனையும், அரங்கவடிவமைப்பும் நாடகத்தினை பலரும் ரசிக்கவைத்து விடும். பிரம்மாண்ட அரங்க வடிவமைப்புடன் மந்திர தந்திர காட்சிகளையும் நாடகத்தில் புகுத்தியவர் ஆர்.எஸ். மனோகர் தனது இலங்கேஸ்வரன் நாடகத்தில்.

இந்த எண்ணங்களினால் ஒரு மாளிகை என்ற நாடக நூலில் மூன்று நாடகங்கள் இடம்பெற்று இருக்கின்றன.

உதயதாரகை எனும் நாடகம் விருந்தோம்பலின் சிறப்பினை விவரிப்பதோடு நட்புறவின் மேன்மையை விளக்குகிறது. குடியினால் சீரழிந்து வாழ்வை தொலைக்கும் குமாரையும் அவனது மனைவி தேன்மலரையும் உதாரணமாக காட்டி, குடிபோதையில் இருந்து மீள ரோட்ரிக்ஸையும், அவனால் துயரத்தில் சிக்கும் எமல்டாவையும் அவர்களுக்கு ஏழ்மையிலும் உதவும் நல்குணம் படைத்த சகாயநாதனையும், அவனது மனைவி எழிலரசியையும் காட்டி குடியின் பாதிப்பை விளக்கும் நாடகமாக இங்கு மிளிர்கிறது

இரண்டாவது நாடகம் எண்ணங்களினால் ஒரு மாளிகை நகைச்சுவையை பிரதானமாக கொண்டு, இந்தி கற்க தனது காதலியைத் தேடி வரும் வாலிபன், அக்காதலியின் தந்தையோடு வீம்பாய் மோதும் நிகழ்வுகள் காட்சியாக விரிகின்றன. பேராசிரியர் அசோகன், அவரது மகள் ஜீவிதா, அவளது காதலன் பிரதாப், தபால்காரர் ஒருவரென குறைந்தளவு பாத்திரப்படைப்புகளோடு ஒரு நகைச்சுவை விருந்தாக படைக்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, நீ உன்னை அறிந்தால் என்ற விழிப்புணர்வு நாடகம். இலஞ்சம் வாங்குவதனால் ஏற்படும் விளைவுகளைச் சொல்லி நகர்கிறது. இலஞ்சத்தில் திளைப்பவனது வாழ்க்கை ஆடம்பரமாகவே இருக்கும் நேர்மையாளனின் வாழ்வு துயரத்தில் தான் கிடக்கும். நேர்மையாளனாக ராஜனும் அவனது மனைவியாக மல்லிகா, ஆடம்பரமாய் வாழும் தனது. கணவனின் கீழ் பணிபுரியும் அலுவலக ஊழியனின் வாழ்வினைக் கண்டு பொறாமையுற்று வெதும்புவதும், கணவனோடு பிணக்கமாகி தாய் வீட்டுக்குச் செல்லத் துணிவதும், இலஞ்சத்தில் திளைத்து துயரடையும் மோகனும் அவனது மனைவியாக தேவிகாவும் மல்லிகாவிற்கு நல்புத்தி வர காரணகர்த்தாக்களாக மாறுகிறார்கள். இந்த நாடகத்தில்.

மூன்று நாடகங்கள் அத்தனையும் முத்தாக பரிமளிக்கிறது. நாடக நூலின் ஆசிரியர் அன்பு நண்பர் இரஜகை நிலவன் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்துக்காரர்.

நாற்பதுக்கும் மேலான நூல்களை எழுதியிருக்கிறார். அவரது இந்நூலும் அவருக்கு சிறப்பான ஓரிடத்தைப் பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை. நாடக நூல் உலகில் இந்த ‘எண்ணங்களினால் ஒரு மாளிகை ‘ நல்லதொரு வரவேற்பினைப் பெற்றுத் திகழ எனது இதயங்கனிந்த நல்வாழ்த்தினை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

அனேக ப்ரியங்களுடன்,

**அனுராஜ்**
கவிஞர் மற்றும் எழுத்தாளர்.
போடிநாயக்கனூர்.

# நினைத்தாலே இனிக்கும் நாட்கள்

## புகைப்படங்களும் பேசுகின்றன




புகைப்படங்களும் பேசுகின்றன. நம்புவீர்களா?

மனித வாழ்க்கையில் சில புகைப்படங்கள் பேச வைத்து விடுகின்றன. அந்தப் புகைப்படங்கள் சொல்லும் உண்மைகள் பலவாக எம்முன்னே! விரிகிறது.

சில இடங்களுக்குப் போவோம் எனத் தெரியாது ஆனால் சிலசமயம் போய் விடுவோம். அந்த ஞாபகத்தைக் கூட எது பேசுகிறது என்று பார்த்தீர்களா? அதுதான் புகைப்படம் .அதற்காகத்தான் நாம் படம் பிடிக்கிறோமா?

சில இடங்களின் சுவாரசியம் கலை உணர்வு கொட்டிக்கிடக்கும்.

மனதைப் பறி கொடுத்தால் உடனே லபக்கென்று புகைப்படம் எடுத்து விடுவோம்.

கால மாற்றத்தில் அது நினைவழியா படமாக நிலைத்து விடுவதுண்டு

சில காலங்களை நினைத்துப் பார்த்து மகிழ்வடைவது உங்கள் புகைப்படத்தால் என்றால் நம்புவீர்களா? அதிலும் ஓர் உண்மை ஒளிந்திருக்கும்.

காலம் செல்ல நீங்கள் செய்த செயல் நீங்கள் ஆற்றிய பணிகள் சென்ற இடங்கள் இவற்றை நினைவுக்குக் கொண்டு வருவது ஒரு புகைப்படம் மட்டுமே!

எத்தனை உண்மை இதற்குள் பொதிந்துள்ளது.

இளமையாக இருந்த காலத்தை அசைபோடுவது வண்ண புகைப்படங்கள் மட்டுமே!

கைத்தொலைபேசி வருகைக்கு பின்பே புகைப்படம் கூட பேச வைத்தது.

இளமையில் உங்கள் இன்ப நினைவுகளை அசைபோட வைப்பது கூட நல்ல புகைப்படங்கள் மட்டுமே!

கடலோரக்காட்சிகள் கண்ணிமைக்கும் நேரத்தில்மின்னும்காட்சிகள் இயற்கையின் விந்தைகள் இனிமைதரும் சுகநினைவுகள் அத்தனையையும் மீட்டித்தருவது வண்ண வண்ண புகைப்படங்கள் தான்!

எத்தனை இன்பம் வைத்தாய் இறைவா!

இயற்கையின் இன்பத்தை துய்க்காத மனிதர் இல்லையெனலாம்.

**தமிழ்மணி நகுலா சிவநாதன்**
யேர்மனி

# ஆரோக்கியசாமி



## மணிராம் கார்த்திக்

தனியார் மருத்துவமனை

மாலை நேரம்

மருத்துவர் அறையில் 40 வயதிற்கு மேல் இருந்த வாட்ட சாட்டமான நபர் ஒருவர் உள்ளே நுழைந்தார்.

“டாக்டர், வணக்கம். உங்கள பத்தி நெறைய கேள்விபட்டேன். அதான் வந்தேன்” என்று கூறியபடி உள்ளே நுழைந்தார், வாட்டசாட்டமான உடல் அமைப்புடன் இருந்த நபர்.

“வணக்கம், என்ன பத்தி கேள்வி பட்டீங்களா? கேள்வி பட்டது நல்லவிதமா தான?” என்று மருத்துவர் சுந்தரம் சிரித்த படி கேட்டார்.

“நல்ல விதமாவா! உங்கள எல்லாரும் கை ராசி டாக்டர் என்று தானே ஊரே சொல்லிட்டு இருக்கு” என்று அந்த நபர் கூறினார்.

“கை ராசி, எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். உங்க பிரச்னை என்னான்னு சொல்லுங்க.” என்று சுந்தரம் கூறினார்.

“அதுக்கு தான டாக்டர் வந்திருக்கேன். உங்க கை பட்டா நோய் எல்லாம் குணம் ஆகிரும்னு ஊர் காரங்க சொன்னாங்க. அதான் என் வியாதியை குணம் படுதிருவீங்க என்று நம்பிக்கையோடு வந்திருக்கேன்” என்று அந்த நபர் கூறினார்.

“அது சரி, உங்க உடம்புல என்ன பிரச்னை அத சொல்லுங்க.?” என்று மருத்துவர் சுந்தரம் கூறினார்.

“டாக்டர், ரொம்ப தூரம் நடக்க முடியல. மூட்டு வலி உயிரே போகிறும் போல வலிக்குது. அப்போ சரி கொஞ்ச நேரம் உட்கருவோம்னு நெனைச்சா குறுக்கு வலி வந்திருது. பத்து நிமிஷத்திற்கு மேல தொடர்ந்து உட்கார முடியல, நடக்க முடியல, நிக்க முடியல”

“இதனால வேலைக்கு போக முடியல. வீட்ல ஓய்வு எடுப்போம் என்று தூங்கினா மூச்சு விட முடியல. நைட் தூங்க முடியல””

“அப்புறம் பசிக்குதுன்னு சாப்பாடு சாப்பிட்டா, செரிமானம் ஆக மாட்டேங்குது. அப்போ சரி சாப்பாடு சரியா சாப்பிடாம விட்டா சுகர் கூடி போயிருது. நல்லா சாப்பிட முடியல , சாப்பிடாம இருக்கவும் முடியல.”

“இதுக்கெல்லாம் ஒரு மருந்து கொடுங்க , டாக்டர். வியாதி எல்லாம்

சரியாய் போய்ரனும்." என்று நீண்ட வியாதி பட்டியலை கூறினார் அந்த நபர்.

"இத்தன வியாதிக்கும் ஒரே மருந்து கண்டுபிடிக்கணும்." என்று டாக்டர் சுந்தரம், அந்த நபரிடம் கூறிய படி , அவரின் உடலை சோதனை செய்து விட்டு, மருந்து சீட்டை எடுத்து வைத்தார்.

"சரி, நான் மாத்திரை மருந்து எழுதி தாரேன். அத சாப்பிடுங்க. ஒரு வாரம் கழிச்சு வாங்க. அப்புறம் எப்டி இருக்குன்னு சொல்லுங்க. அப்புறமா அடுத்த ட்ரீட்மெண்ட் பார்ப்போம்" என்று கூறிய படி, மருந்து சீட்டில் மருந்துகளை எழுத ஆரம்பித்தார்.

மருந்து சீட்டில் தேதி எழுதி விட்டு, பெயர் எழுதும் இடத்தில் பேனாவை கொண்டு சென்ற டாக்டர் சுந்தரம்,

"ஆமாம்ப்பா, உங்க பேர சொல்லுங்க, மருந்து எழுதி தாரேன்" என்று கூறினார்.

அதற்க்கு அந்த நபர் "என் பெயர் ஆரோக்கிய சாமி. என் அம்மா அப்பா வச்ச பெயர். எல்லாரும் என்னை செல்லமா ஆரோக்கியம், ஆரோக்கியம் என்று தான் கூப்பிடுவாங்க டாக்டர்" என்று (அந்த நபர்) ஆரோக்கிய சாமி கூறினார்.

பெயரை கேட்டதும், மருத்துவர் சுந்தரத்திற்கு சிரிப்பு வந்தது.

"உங்க பெயரில் மட்டும் தான் இப்போ ஆரோக்கியம் இருக்கு. உடம்புல இல்ல. எல்லாம் சரி பண்ணிருவோம். பெயருக்கு ஏற்றவாறு!" என்று சிரித்தபடி மருத்துவர் சுந்தரம், அந்த மருந்து சீட்டை ஆரோக்கிய சாமியிடம் நீட்டினார்.



# விடியலைக் காண்போம்

விடியலைக் காண்போம் இரவில் நிலவாகவே
நிலவாகி குறித்த ஒளி தருவாளே
தருவாளே ஒளியைக் கடனாக அன்று
அன்றோடு ஓடி மறைவாளே வானுக்குள்
வானத்து நிலவே உன் அச்சம்
அச்சத்தை அஞ்சாது சொல்லி விடு

விடுகின்ற வேளையிலே இளம்பிறை ஆனாய்
ஆனதால் வளர்கின்ற குழந்தையும் ஆகிறாய்
ஆகியே வளர்ந்து குரியாகிச் சிரித்தாய்
சிரித்தாலும் அழகினால் ஒளிகளை ஒழுகினாய்
ஒழுகிய வேளையில் விழுந்தேன் வளையில்
வளையில் சிக்காது விடியல் காண்போம்

**அ.ல.முகைமினா**
கிண்ணியா, திருகோணமலை

# பள்ளி சீருடை

மணிவண்ணனும் பாரதியும் அன்று உற்சாகமாக இருந்தனர். இன்று அவர்களுடைய பேராசிரியர் நல்லசிவம் தனது மனைவி சிவகாமியுடனும் மற்றும் குடும்பத்தினருடன் அவர்கள் இல்லத்திற்கு பகல் உணவு அருந்த வருகிறார்கள். மணிவண்ண, நல்லசிவத்தின் மாணவர்கள் இன்னும் சிலரையும், குடும்பத்துடன் விருந்துக்கு அழைத்திருந்தான். எல்லோரும் நல்லசிவத்தின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

மணிவண்ணன் உடுப்பு மாற்றும் நேரம், பக்கத்தில் இருக்கும் தன் சிறுவயது நிழல் படத்தைப் பார்த்து ஒரு நிமிடம் ஒரு நினைவில் அமிழ்ந்து,' பாரதி! எனக்கு அந்த கருநீல பேண்ட்டையும் இள நீல நிறத்தில் கட்டம் போட்ட சட்டையையும் அயர்ன் பண்ணிக் கொடு' என்று கேட்டான். ஏன்? அது பள்ளி சீருடை போல் இருக்கும். இன்று ஏன் அதை உடுத்துகிறாய்' என்ற வினாவிற்கு, ஒரு புன்னகையுடன் கண் சிமிட்டி, 'சும்மாத்தான்! ஏதோ தோன்றுகிறது. பள்ளி சீருடையில் பேராசிரியரை சந்திப்பது, சிறப்பு தானே. நான் இன்னும் மாணவன்தான் என்று, நிறைவுடன் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும் போல் இருக்கிறது.

பேராசிரியர் தன் குடும்பத்துடன் வருகை,புரிய, விமரிசையான விருந்து பரிமாறப்பட்டது. எல்லோரும் தங்களது கல்லூரி வாழ்க்கை, படித்த பள்ளியின் ஆசிரியர்கள் இள வயது நினைவுகள், வீட்டின் நிகழ்வுகள், குடும்பப் பின்னணிகள், பற்றி உரையாடியபடி இருந்தனர். மணிவண்ணன் தவிர ஏனையோர் அனைவரும் பெரிய பாரம்பரியம் மிக்க பள்ளிகளில் படித்தவர்கள்; பெருமையுடன் சொல்லிக் கொண்டு இருந்தனர். மணிவண்ணன் அமைதியுடன் இருந்ததைக் கவனித்த நல்ல சிவம்,'மணி! நீ எந்தப் பள்ளியில் படித்தாய்,' என்று கேட்டார்.' சார்! நான் படித்தது, மதுரைக்கு அருகே, கருமாத்தூர் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் படித்தேன். என் பன்னிரெண்டு வருட பள்ளி படிப்பும் அங்கேயேதான். என் பள்ளி நாட்களில் எனது பள்ளி தலைமையாசிரியை, என்னை பல் வகையாலும் ஊக்குவித்த காரணத்தால்தான் நான் நன்கு படித்து இவ்வளவு தூரம் முன்னேற முடிந்தது. நான் கல்லூரியில் படிக்க முனைப்புடன் இருந்ததும் அவர்தான். எனக்கு மருத்துவம் படிக்க மிகவும் ஆவல். என்னால் நகரத்து பள்ளியில் படித்த மாணவர்களுடன் போட்டி போட்டு, தகுதித் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் வாங்க இயலவில்லை. மனம் துவண்டு போன என் மனதைத் தேற்றி, என்னை உயிரியல் இளங்கலை பயில ஆலோசனை அளித்ததும் தலைமை ஆசிரியை தான்.' என்று நெகிழ்ச்சியுடன் கூறினான். 'மணி! உனக்கு தனம்மாள் என்ற பெயருடன் ஒரு கணித ஆசிரியையைத் தெரியுமா?' என்று வினவினார். 'சார்! இந்நேரம் வரை

அவரைப் பற்றிதான் உங்களிடம் பேசிக் கொண்டிருந்தேன். நான் உடுத்த, தன் மகனுடைய உடுப்புகளை கொடுத்து உதவின பெருந்தகையாளர். உங்களுக்கு அவரை எப்படித் தெரியும்; என்று வினவ, ‘இரு சொல்கிறேன்’ என்றவர், தன் மருமகளிடம், அவள் அம்மாவை காணொளி அழைப்பில் கூப்பிடச் சொன்னதும், தொலைபேசியில் ஒளிர்ந்த உருவத்தை பார்த்த மணிவண்ணனின் முகம், உவகையால் மலர்ந்தது. ’சார் இவர்தான் என் தனம்மாள் டீச்சர், சார்’ என்று உற்சாகத்தில் உரக்கக் கத்தி விட்டான்.’ ஆம்! இவர் என் சம்பந்தி, தனம்மாள்; என் மருமகளின் தாயார்.’ கடவுள் எப்படி நம்மை இணைத்து வைத்து மகிழ்கிறார்; பார்’ என்று சொல்ல, தன் தாயாரைப் பற்றி மணிவண்ணன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த நல்லசிவத்தின் மருமகள் வீணா அடைந்த ஆனந்தத்திற்கு ஒரு அளவே இல்லை.

தனம்மாள் ’என்ன மணி! இன்னுமா பள்ளி சீருடையில் இருக்க ஆசை? என்று வினவினார். ’ஆமாம்! டீச்சர்! இந்த சீருடையை நான் எப்படி மறக்க முடியும்? உங்கள் நினைப்பில் தான் இன்றைக்கு இதை உடுத்தினேன். உங்கள் மகன் நலமா? அன்று அவனுடைய உடுப்புகளை கொடுத்து உதவினதை நான் என்றும் மறவேன்’ என்று உணர்ச்சி பொங்க கூறினான், மணிவண்ணன்.

**சசிகலா விஸ்வநாதன்**



## எல்லாம் ஒன்று தான்

கொசுவால்
மனிதனுக்குத் தொல்லை
மனிதனால்
கொசுவுக்குத் தொல்லை
எல்லாம்
ஒரே இரத்தம் தானே.

## தம்பதியர்

மண முறிவு பெற்ற
தம்பதியர்
தங்கள் திருமண நாளைத்
தனித்தனியாகக்
கொண்டாடினார்கள்.

## குளித்தல் அல்ல

நாமெல்லாம்
குளிக்கப் போகிற போது
கிழித்து விட்டுத் தான்
வருகிறோம்
அழுக்கை.

## பிரிக்கப் படுகிறது

மணமக்கள்
சேர்த்து வைக்கப்படுகிற
திருமண வீடுகளில்
செருப்பு ஜோடிகள்
திருட்டுப் போவதைத்
தவிர்க்க
பிரித்து வைக்கப்படுகிறது.

**கவிஞர் எம்.சோலை**
அம்பத்தூர் .

# சிறுவர்கள் சங்கமம்



## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

சென்னையில் வசித்து வரும் மகிழினிக்கு மரம், செடி, கொடி என்றால் மிகவும் விருப்பம். பள்ளிக்குச் செல்லும் முன்பும், பள்ளியில் இருந்து வீடு திரும்பிய பின்னும் அவளது வீட்டைச் சுற்றியுள்ள மரங்களிடமும், செடிகளிடமும், பூக்களிடமும் நீரூற்றிக் கொண்டே பேசுவாள். அவைகளைக் கட்டிப் பிடித்து முத்தமிடுவாள். அவைகளும் மகிழினியைக் கண்டதும் கிளைகளை அசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்.

மகிழினியின் ஆர்வத்தைக் கண்ட அவளது பெற்றோர்கள் அவர்களின் மரங்களையும், செடிகளையு வீட்டைச் சுற்றியுள்ள சிறு இடத்தில் ம் வளர்ப்பதற்கு அனுமதி அளித்தனர். விதவிதமான மரங்களையும், செடிகளையும் நட்டு வளர்த்து வந்ததுடன், தொட்டிகளில் மண் நிரப்பி ரோஜா, மல்லிகை, கற்பூரவல்லி, துளசி, பிரண்டை இன்னும் பல மூலிகைச் செடிகளையும் வளர்த்து வந்தாள். ஆனாலும் செடி வளர்க்கும் ஆசை அதிகரித்துக் கொண்டே போனதால் வீட்டின் மொட்டை மாடியில் விதவிதமான கீரை வகைகள், காய்கறி வகைகள் எனப் பயிரிட்டு வளர்த்து வந்தாள். அதனால் அவள் செடிகொடி, மரங்களுடன் கழிக்கும் நேரம் அதிகரித்துக் கொண்டே போனது. மொட்டை மாடி முழுவதும் செடிகளால் நிரம்பியதும், ‘‘இன்னும் நான் நிறையச் செடிகள் வளர்க்க வேண்டும், எனக்கு இடம் ஒதுக்கித் தாருங்கள்” என அவளது அம்மா, அப்பாவிடம் கேட்டாள்.

“வீட்டைச் சுற்றிலும், முன்பக்கத்திலும் தொட்டிகளில் வைத்தாகி விட்டது. மாடியிலும் மாடித்தோட்டம் வளர்த்தாச்சு. இனி வேறு எங்கும் இடம் இல்லையே...

வளர்த்து வரும் செடிகளை நல்லமுறையில் வளர்ப்போம்” என்று மகிழினியின் அம்மா சொல்லவும், ‘‘மகிழினி எனக்கு இது போதாது அம்மா, இன்னும் நிறைய இடம் வேண்டும்” என்று தொடர்ந்து கேட்டு வந்தாள்.

இதனால் கோபம் அடைந்த மகிழினியின் பெற்றோர்கள் ஒரு நாள் அவள் பள்ளிக்குச் சென்ற பிறகு மாடித்தோட்டத்தில் இருந்த அனைத்து செடிகளையும் உடைத்துப் போட்டு விட்டனர். மாலை பள்ளியில் இருந்து வந்த மகிழினி கீழே இருக்கும் செடிகளுக்கு எல்லாம் நீர் ஊற்றிய பிறகு மாடிக்குச் சென்றாள். மாடத் தோட்டத்தில் இருந்த செடிகள் ஒடிக்கப்பட்டு காய்ந்து போய்க் கிடந்ததைக் கண்டதும் மகிழினியால் வருத்தத்தைத் தாங்க முடியவில்லை. வேகமாக அம்மாவிடம் ஓடி வந்தவள் “அம்மா... அம்மா நம்ம மாடித்தோட்டம் எப்படியோ அழிந்து விட்டது. எனக்கு அழுகையாக வருது, வாங்க... வந்து பாருங்க” என்று அம்மாவின் கையைப் பிடித்து இழுத்தாள்.

“அது ஒன்றும் இல்லை, எப்பப் பாரு நீ செடிகொடி கூடவே நிறைய நேரம் இருக்கிறாய். படிப்புல கவனம் இல்லை, போதாதற்கு இருக்கிற செடிகள் போதாது, இன்னும் இடம் வேண்டும் என்று கேட்டு அடம் பிடிக்கிறாய். இதுக்கு மேல நாங்க என்ன செய்ய முடியும்? அதுதான் உனக்குப் புத்தி வரட்டும் என்பதற்காக மாடித்தோட்டத்தை அழித்து விட்டேன்” என்று மகிழினியோட அம்மா சொன்னார்கள்.

அதைக் கேட்டதும் மகிழினி திகைத்துப் போனாள். “நீங்களா மாடித் தோட்டத்தை அழிச்சீங்க...” என்று திரும்பத் திரும்பக் கேட்டபடியே அமைதியாக உட்கார்ந்து விட்டாள்.

சிறிது நேரம் கழித்து ‘‘மகிழினி, நேரமாகிடுச்சு பார், புத்தகம் எடுத்துப் படி” என்று அம்மா சொன்னதைக் கவனிக்காமல் அப்படியே உட்கார்ந்து இருந்தாள்.

சிறிது நேரம் கழித்து “மணி இரவு 8 ஆகிறது மகளே, சாப்பிட வா” மீண்டும் அம்மா அழைக்க அதையும் கவனிக்காமல் அப்படியே உட்கார்ந்து இருந்தாள் மகிழினி. அதைப் பார்த்த மகிழினியின் அப்பா, தாத்தா, பாட்டி என்று ஒவ்வொருவரும் வந்து “விடு செல்லம், செடிகள் தானே, மீண்டும் கூட வளர்த்துக் கொள்ளலாம்” என்று எவ்வளவோ முறை அழைத்தும் ‘‘எனக்குப் பசிக்கலமா...’’ சொல்லியபடியே தூங்கி விட்டாள் மகிழினி.

அடுத்த நாள் காலை மகிழினிக்கு காய்ச்சல் வந்துவிட்டது. அதனால் அவங்க அப்பா அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். மருத்துவமனைல இருந்து வீட்டுக்குத் திரும்பி வருவதற்குள் மகிழினியின் அம்மா மொட்டைமாடி மட்டுமல்லாது சன்னலுக்கு மேலுள்ள விதாரம் இன்னும் எங்கெங்கு இடமுள்ளதோ, அங்கெல்லாம் நிறையச் செடி வகைகளை வாங்கி நிரப்பி விட்டார்கள்.



மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய மகிழினி செடிகளைப் பார்த்ததும் மகிழ்ச்சி யாகி விட்டாள். காய்ச்சலும் சரியாகிவிட்டது.

‘‘எதனால் காய்ச்சல் வருமளவுக்கு கவலைப் பட்டாய் செல்லம்?’’ பாட்டி கேட்கவும் ‘‘ஏற்கனவே நாம் செய்யும் தவறுகளால் பூமி வேகமாக வெப்பமாகி வருகிறது. மரம், செடிகொடிகள் நிறைய இருந்தால் புவி வெப்பமடைதல் குறையும். ஆக்ஸிஜன் நிறையவே கிடைக்கும். இதுவே மரமில்லாபூமியாகிவிட்டால், புவி வெப்பமடைதலும், ஆக்ஸிஜன் குறைவால் சுவாசிக்க குடுவை மாட்டிக் கொள்வதும் என சிரமப்படப் போவது நாங்கள் தானே பாட்டி, அதான். மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்! சுற்றுச்சூழல் காப்போம்!’’ என்றாள் மகிழினி.

மகிழினியின் வீட்டைப் பார்த்து அந்தத் தெருவிலுள்ளோர் அவர்கள் வீடுகளிலும் மாடித்தோட்டம் அமைத்தார்கள். அவர் களைப் பார்த்து ஊர்க்காரர்கள் வளர்த்தார் கள். இப்படியே பலரும் வளர்க்கவும் மகிழினியின் ஊரில் சுத்தமான காற்று, நீர் எல்லாம் தாராளமாக இருந்தது. அதனைப் பார்த்து வியந்த பக்கத்து ஊர்க்காரர்களும் மரங்கள், செடிகள் நடவும், இது ஒரு பசுமை இயக்கமாக வளர்ந்தது. இதனைக் கண்ட மாநில. அமைச்சர் மகிழினியைப் பாராட்டி பரிசுகள் வழங்கிப் பாராட்டினார். நாமும் நாம் வாழும் இடத்தில் இயன்றளவு மரங்களை வளர்ப்போம்.

சு.பிரவந்திகா
பட்டாபிராம், சென்னை



# அழகு மயில்

மயிலே மயிலே
அழகு மயிலே
எனக்கு பிடித்த மயிலே

மழையில் ஆடும் மயிலே
வண்ணத் தோகை விரித்து
அழகாக ஆடும் மயிலே

மயிலே மயிலே
அழகு மயிலே
பள்ளி செல்லும் வழியில்
தினமும் பார்க்கிறேன்

மயிலே மயிலே
எனக்கு பிடித்த மயிலே
இந்தியாவின் தேசியப் பறவை
நீ தானே மயிலே



பா. சாய்ஸ்ரீநிதி
நான்காம் வகுப்பு
நாகப்பட்டினம்



# பட்டாம்பூச்சி

பட்டாம்பூச்சி பறக்குது
பட்டுப் பறக்கப் பறக்குது!
நீலமேகம் தொட்டுவிட்டு
நம் தோட்டத்திற்கு வந்திருக்குது

மஞ்சள், நீலம், சிவப்பாக,
மின்னும் நிறங்களுடன் பறக்குது!
பூக்கள் மேலே ஆடிடும்
புன்னகையுடன் நாளும் வாழுது!

காற்றோடு அது பேசுதாம்
கண்கள் உற்றுப் பார்க்குதாம்
பூச்சி சொல்லும் இரகசியத்திற்கு
பூவும் மெல்ல சிரிக்குதாம்!

பட்டாம்பூச்சி பறக்குது
நமக்காக வந்திருக்குது
வளர்ப்போம் நாம் இயற்கையையே
வாழ்வோம் மகிழ்வுடன்
எல்லோருமே!



அன்புச்செல்வி சுப்புராஜூ
பட்டாபிராம்,
சென்னை – 600072



# வெள்ளை மனம்

தன்னலம் இல்லாதது
தனிப் பெருங்கருணையானது
தன்னுள் எழுவதை
துளியும் மறைக்காதது
தன்னுடன் இருப்பவர்களுடன்
தன்னெழுச்சியாய் மகிழ்வது
தண்ணீர் போல
தடுப்பின்றி ஓடுவது

கள்ளம் என்பது
கடுகளவு இல்லாதது
உள்ளம் முழுவதும்
உவகையோடு இருப்பது
வெள்ளமாய் அன்பை
வாரிக் கொடுப்பது
துள்ளும் வயதோடு
துவளாது இருப்பது

கொள்ளை கொள்ளும்
கொஞ்சும் மனமது
வெள்ளை மனமோடு
விளங்கிடும் சிறுவரகமது
கிள்ளையும் விளையாடும்
கபடமில்லா மனமது
சள்ளை தந்தாலும்
சொந்தம் மீட்பது

மனதின் சுமைகளை
மறக்கடிக்கும் மருந்தாவது
கணப் பொழுதும்
கவலைகளை மறக்கடிப்பது
கனவு காணும்
காலத்தை நெருங்காதது
தினமும் மகிழ்வான
தகைமையான உள்ளமது

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

கிள்ளை - கிளி / சள்ளை- தொந்தரவு.

# மனையின் மாண்பு

*தன்முனைக் கவிதைச் சரம்*

## தன் முனை இயைபு கவிதைகளில் - அந்தாதியாக

உள்ளம் அறிந்து
உறவாடும் மனம்
தெள்ளத் தெளிவாய் உணர்ந்திடும்
அன்பின் மனம்

மனம் கொள்ளா
அன்பின் அருகாமை
இனம் கண்டு
விளம்பும் அருமை

அருமையின் பெருமை
உரைத்திடல் அரிது
அகவை முதிர
கரைகாணா அக்கறை

அக்கறையாய் ஒரு வார்த்தை
இயற்கையாய் ஒரு தீண்டல்
அறுவடை செய்யும்
முதுமையில்
ஒரு இன்பத்தின் சீண்டல்

சீண்டலும் தீண்டலும்
வேண்டியே வாழ்வு
ஆண்டாண்டு காலமாய் தொடரும்
பாலமாய் வாழ்வின் உள்ளல்.

**சசிகலா விஸ்வநாதன்**

பக்தி

# உண்மையான பக்தி



ஸ்ரீரங்கம் கோயிலில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி.

அரங்கனை தினம் காலை மாலை இருவேளையும் தரிசித்து வரும் பக்தர் குழுவில், வயதான பண்டிதரும் ஒருவர். ஆர்வம் மிக இருந்தும், வயது மூப்பு காரணமாய், அவரால் மற்றவர்கள் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத காரணத்தால் பல நேரங்களில் கருடன் சந்நிதியுடன் நின்று விடுவார்.

அரங்கன் திசை நோக்கி வணங்கிவிட்டு கருட மண்டபத்தில் சற்று இளைப்பாறி, மற்றவர்கள் திரும்பி வரும்போது தானும் திரும்பி விடுவார்.

பலவித விமர்சனங்கள், கேட்டும் கேளாதது போல், தினம் தினம் வருவதும் ஒரு சில நாட்கள் அரங்கன் கோயில் உள்ளே சென்று தரிசித்து வருவதுமாக இருந்த அவர், ஒரு நாள் கையில் பாகவதம் புத்தகத்துடன் வந்து, கருட மண்டபத்தின் கீழ் பகுதியில் ஓரமாய் அமர்ந்து, சிறிது நேரம் படித்து விட்டு, வீடு திரும்புவது என வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

ஆக அரங்கனை சென்று சேவிப்பது என்பது அபூர்வமாகி விட்டது. பலரும் அவர் புத்தகம் படிப்பதை பார்த்துவிட்டு செல்வார்கள். பண்டிதர்கள் சிலர் நின்று சற்று நேரம் கேட்டு விட்டு செல்வார்கள். அதில் ஒரு சிலர் இவர் சில வரிகளை விட்டு



விட்டு சில வரிகளை படித்து பக்கங்களை புரட்டுவதை பார்த்து, வயது மூப்பு காரணமாய் ஒரு ஒழுங்கை கடைபிடிக்க இயலாது ஆர்வம் ஒன்றே முதலாய் கொண்டு ஏதோ வயதான காலத்தில் படிக்கிறார் -

பாவம்! தவறை தெரிந்தா செய்கிறார்? போகட்டும் என நினைத்து அவரிடம் பேசுவதையே குறைத்துக் கொண்டனர்.

அங்கும் இங்கும், அவரவர் பேச, பண்டிதர் படிக்கிறாரே தவிர ஒரு ஒழுங்கும் இல்லை. பக்கத்தில் பாதி படிப்பது, மீதி விழுங்குவது என ஏதோ படிக்கிறார்.

அவ்வளவுதான்! மூப்பு காரணமாய் புத்தி சரியாக வேலை செய்யவில்லை, என பேசி கடைசியில் 'அதுவா! அது ஒரு அரைப்பைத்தியம்' என பட்டமே கட்டி விட்டார்கள்.

எது எப்படியோ! பண்டிதர், தான் தினமும் பாக வதம் படிப்பதை நிறுத்த வில்லை.

ஒரு நாள் அரங்கனை சேவிக்க, ஆச்சாரியார் நிலையில் உள்ள பெரிய பண்டிதர் ஒருவர் வரப்போவதாக சேதி வந்தது. உள்ளூர் பண்டிதர்கள் கூடி அவரை வரவேற்க ஏற்பாடுகள் செய்தனர்.

மேளதாளத்துடன், பூர்ண கும்ப மரியாதையோடு வரவேற்க வேண்டுமென முடிவு செய்யும் போது, கருட மண்ட பத்தில் தினம் பாகவதம் படிக்கும் பண்டிதரைப் பற்றியும் பேச்சு வந்தது.

அரைகுறையாக பாகவதம் படிக்கும் இவரை வெளியூர் பண்டிதர் பார்த்தால், இவர் படிப்பதைக் கேட்டால் உள்ளூர் பண்டிதர்கள் அனைவருக்கும் அவமானம்.

இதைத் தவிர்க்க என்ன செய்வது என்று கேள்வி பிறந்தது.

மூத்த பண்டிதர்கள் பலரும், அவர் ஒரு ஓரமாய் வயதான காலத்தில் ஏதோ ஆர்வத்துடன் படிக்கிறார்; அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என சொல்ல, சில இளவட்டங்கள் பிரச்சனையை வேறு விதமாக தீர்ப்பதாக சொன்னார்கள்.

பெரியவரே! அரங்கனை தரிசிக்க வெளியூர் பண்டிதர் ஒருவர் வரப்போகி றார். மேளதாளம் என கூட்டம் அதிகம் கூடும். தாங்கள் பாகவதம் பக்தி சிரத்தையுடன் படிப்பதற்கு இங்கு இடைஞ்சலாய் இருக்கும்.

ஆகையால் ஒரு நாள் மட்டும், கிழக்கு கோபுர வாசல் பக்கம் மணல் வெளியில் உள்ள மண்டபத்தில் அமர்ந்து, எவ்வித தொந்தரவும் இல்லாமல் படிக்க வேண்டும்', என பவ்யமாய் அவரிடம் கேட்டுக் கொண்டார்கள்.

அந்த அரைப் பைத்தியம் முரண்டு பிடித்தால் என்ன செய்வது என்ற பயமும் இருந்தது.

ஆனால், அவரோ 'ரொம்ப சந்தோஷம். 'முன் கூட்டியே சொன்னதற்கு மிக்க நன்றி. எல்லம் கண்ணன் கிருபை', எனக் கூறி மறு நாள் நேராக கிழக்கு கோபுரவாயில் வழியாய் வந்து, அங்கு மண்டபத்தில் தான் பாகவதம் படிப்பதாக உறுதி கூறி விடை பெற்றார்.

இளைஞர்களுக்கு சந்தேகம். ஞாபக மறதி காரணமாய் பெரியவர் கருட மண்டபம் வந்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்து அன்று காலை தெற்கு கோபுர வாயிலில் இரு வரும், கிழக்கு கோபுர வாயிலில் இருவரும் பெரியவரை

எதிபார்த்து நின்றனர்.

பெரியவரும் சொன்னபடி கிழக்கு கோபுர வாசல் வழிவந்தார்.

அவரை உபசரித்து, மணல்வெளி மண்டபத்தில் அமர்த்த வந்த இளைஞர்களிடம், 'நீங்கள் வெளியூர் பண்டிதரை வரவேற்க செல்லுங்கள்.

நான் இங்கு பார்த்துக் கொள்கிறேன்', எனக் கூறி மண்டபத்தின் தூண் ஓரமாய் புத்தகத்தை வைத்து விட்டு, முன்னால் உள்ள மணல் வெளியில் பத்து அடி சதுரத்திற்கு சமன் செய்ய ஆரம்பித்தார்.

மேலாக தென்பட்ட சிறுகற்கள் தூசு தும்புகளை அகற்றி கைகளால் நன்றாக தட்டி மணலை அவர் சீர் செய்வதைப் பார்த்த அந்த இளைஞர்களுக்கு சிரிப்பு வந்தது.

ஏதோ வரப்போகும் பண்டிதர் நேராக இங்கே வந்து, இவர் முன்னால் உட்கார்ந்து பாகவதம் கேட்கப் போவது போல, தன் முன்னால் மணலை சீர்செய்து விட்டு, அவர் புத்தகம் எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்ததும்,

இனி இவர் எழுந்து வர மாட்டார் என சொல்லி கொண்டு வேகமாய் தெற்கு வாசலுக்கு வெளியூர் பண்டிதரை வரவேற்கும் கூட்டத்தில் சேர விரைந்தனர்.

வெகு விமரிசையாக வரவேற்கப்பட்ட அந்த வெளியூர் பண்டிதர் கருட மண்டபம் வந்ததும், சற்று நேரம் உற்று கேட்டு விட்டு, எல்லோரையு ம் சற்று அமைதியாக இருக்கும்படி சொல்லி தொடர்ந்தார்.

பண்டிதர்களே! இங்கு எங்கோ மிக மன அமைதியுடன் ஆத்ம சுகத்துடன் பாகவதம் படிப்பது என் காதில் விழுகிறது.

அந்த யோகியை, பரம் பாகவதரை, முதலில் தரிசித்து வணங்கி, பிறகு அரங்கனை சேவிக்கலாம்.

அந்த மகானை தாங்கள் எனக்கு காட்ட வேண்டும்', என கை கூப்பி தொழுதார்.

பண்டிதர்கள் பலருக்கும் ஆச்சர்யம்! கிழக்கு கோபுர வாயிலை ஒட்டி மணல் வெளியில் இருந்து கொண்டு பாகவதம் படிக்கும் அவர் குரல் இங்கு இவருக்கு எப்படி கேட்கிறது?

ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க, கிழக்கு கோபுர வாயிலில் இருந்து வந்த அந்த இளை ஞர்களுக்கு மிக ஆச்சர்யம்.

ஆகா! அந்த பண்டிதர் பெரிய மகான் போலும்!இவர் அங்கு வந்து பாகவதம் கேட்பார் என நினைத்துதானோ என்னவோ,

தன் முன் மணலை சரி செய்து வைத்து விட்டு பாகவதம் படிக்கிறார் போலும் என



நினைத்து உள்ளூர் பெரிய பண்டிதர்கள் வார்த்தையை எதிர்பார்த்து நின்றனர்.

உள்ளூர் பண்டிதர்களில் ஒருவர் தொடர்ந்தார்.

‘ஸ்வாமி! இங்கு கருட மண்டபத்தில் உள்ளூர் பெரியவர், வேத சாஸ்திரங்களில் தேர்ந்தவர், தினம் இங்கு வந்து பாகவதம் படிப்பார்..‘

இன்று தாங்கள் வரும்போது கூட்டம் அதிகமாய் இருக்கும், அவருக்கு தொந்தரவு கூடாது என நினைத்து, இன்று மட்டும் அவரை கிழக்கு வாயிலில், அமைதியான சூழ்நிலையில் பாகவதம் படிக்கும்படி நாங்கள் தான் கேட்டுக் கொண்டோம்.

அவரும் சந்தோஷமாய் கண்ணன் கிருபை என சொல்லிப் போனார். அவர் தான் கிழக்கு வாயிலில் பாகவதம் படிக்கிறார் போலும்‘

இந்த வார்த்தைகளை கேட்டதும் வெளியூர் பண்டிதர், ‘ஆஹா! நாம் எல்லோரும் அபசாரம் செய்து விட்டோமே! இதற்கு நான் காரணமாகி விட்டேனே.

‘முதலில் அவரிடம் சென்று மரியாதை செலுத்தி விட்டு பிறகு தான் அரங்கனை சேவிக்க வேண்டும்...‘

பாகவத அபசாரம் கொடியது அல்லவா? சற்றே தள்ளியிரும் எனச் சொன்னது பாவம் அன்றோ?

வாருங்கள், அவர் இருப்பிடம் போகலாம்‘ என விரைய, பலரும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

உள் மணல் வெளியை தாண்டி, வெளி மணல் வெளியை அடந்த போது, எல்லோரையும் அங்கேயே சற்று நிற்கும் படி கையசைப்பின் மூலம் சொல்லி விட்டு, கூப்பிய கரங்களுடன் பாகவதம் படிக்கும் பண்டிதரின் வலது புறம் வந்து நின்றார்.

தனக்கு முன்னால் திரண்ட கூட்டத்தையோ, அல்லது வெளியூரிலிருந்து வந்திருந்த பண்டிதரையோ, பாகவதம் படித்து கொண்டிருந்தவர் கவனிக்கவில்லை.

அவர் தமது வழக்கப்படி சில வரிகள் படிப்பதும், மெய்மறந்து தன் முன்னால் உள்ள மணல் பரப்பை மகிழ்வுடன் பார்ப்பதும், மாறி மாறி படிப்பதும், மௌனமாய் இருப்பதுமாக ஒருவாறு பாகவத புத்தகத்தை மூடி வைத்தார்.

அதுவரை பக்கத்தில் நின்று கொண்டிருந்த வெளியூர் பண்டிதர் சற்று முன்பாக வந்து, பெரியவர் சமன் செய்து வைத்திருந்த மணல் திட்டை நோக்கி சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, மிகவும் பய பக்தியுடன் அந்த மணல் திட்டிலிருந்து, சர்வ ஜாக்கிரதையுடன் சிறிது சிறிதாக மணல் துளிகளை தன் மேல் உத்திரியத்தில் திரட்டி, பாகவத பண்டிதரிடம் இரு கைகளாலும், மிக பணிவுடன் கொடுத்தார்.

அவரும் எழுந்து நின்று ’தங்களுக்கு தெரிந்தது எனக்கு தெரியவில்லையே’ என மன நெகிழ்வுடன் கூறி ’தாங்கள் ஸ்வீகரித்தபின் அல்லவோ, நான் பெற வேண்டும்’, என்று கை கூப்பி நின்றார்.

வெளியூர் பண்டிதரோ, ’தங்களால் கிடைக்கப் பெற்றது. தங்களுக்கு முதலில் சமர்ப்பித்த பிறகு அல்லவோ மற்றவர்களுக்கு’ எனக் கூறி மறுபடியும் மணல் துகள்களை உத்தரியத்துடன் காட்ட, உடனே பாகவதம் படித்த பண்டிதர் அடக்கத்துடன் சிறிது மணல் துளிகளை எடுத்து நெற்றியில் திலகமாய் இட்டுக்

கொண்டு, சிரசிலும் தரித்துக் கொண்டு, சந்தனம் பூசிக்கொள்வது போல மார்பிலும் பூசிக் கொண்டார்.

இதைப் பார்த்த மக்களுக்கு புரிய வில்லை. அதே சமயம் அவர்கள் மனத்தில் ஒரு தெளிவு.

இது நாள் வரையில் அரைப் பைத்தியம் எனக் கருதப்பட்ட பெரியவர், சாதாரண பண்டிதர் இல்லை; கண்ணனின் கிருபை, அரங்கனின் அருள் பூரணமாய்ப் பெற்ற வர். நாம் தவறு செய்துவிட்டோம்' என்ற எண்ணத்துடன் அவர்கள் மௌன மானார்கள்.

கூட்டத்தினர் ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டு இருக்கும் போது வெளியூர் பண்டிதர் தொடர்ந்தார்.

ஸ்வாமி! தாங்கள் ஏன் பாகவத்தை தொடர்ச்சி விடாமல் படிப்பது இல்லை? சில பல இடங்களை விட்டுவிட்டு படிப்பதன் விபரம்தான் என்ன?'

பாகவதம் படித்த பண்டிதர் மிக அடக்கமாய் சிரித்துக் கொண்டே,

'ஸ்வாமி! தாங்கள் எல்லாம் தெரிந்தும் தெரியாது போல் ஏன் கேட்கிறீர்கள்?

பல நூறு மனிதர்கள் மன சந்தோஷத் துடன் உணவு உண்ணும் போது, அங்கே ஒரு பசித்தவன், அந்த விருந்தை பார்த்தாலும் அவன் பசி போகாதல்லவா?..'

பசித்தவன் புசித்தால் அல்லவோ பசி போகும், வயிறு நிறையும், மனம் குளிரும்? அதே போல் பகவானை அனுபவிக்கும் போது, சுற்றிலும் பலர் பார்த்துக் கொண்டிருந்தாலும், அவர்களுக்கு அந்த ருசி தெரியாதல்லவா? தாங்கள் ருசி தெரிந்து, கண்ணன் பாத துளியை சேகரித்து எனக்கு கொடுத்தீர்கள்...'

கண்ணனை கண்டேனே தவிர, அவன் பாத துளியை தரிசிக்க மறந்தேன்.

தங்களால் அந்த பாக்கியம் கிடைத்தது.

தங்களுக்கு தோன்றிய து எனக்கு தோன்றவில்லை...'

இன்று தங்கள் வருகையால் அல்லவோ எனக்கு அந்த பாக்கியம் கிடைத்தது.



நான் ஏதும் சொல்லுவதற்கு பதில், தாங்களே ஏதும் சொல்ல வேண்டும் என்றால் சொல்லலாம். நானும் அதை உவப்புடன் கேட்பேன்.‘

உடனே வெளியூர் பண்டிதர் கூட்டத்தினரைப் பார்த்து பேச ஆரம்பித்தார்.

திருவரங்கவாசிகளே! நீங்கள் எல்லோ ரும் அரங்கனை தினம் தினம் தரிசிக்கும் பாக்கிய ம் பெற்றவர்கள்.

பரம பக்தரான இந்த பண்டிதர் பாகவதம் படிக்கும் போது, என்ன நடந்தது என்று பலருக்கும் தெரியாது.

பேரருளாளன் கண்ணன் அறிவான். அவனை இவருக்கு தெரியும்...‘

இன்று காலை நான் வந்தவுடன் மேளதாள ஆரவாரத்திற்கும், வேத கோஷத்திற்கும் நடுவில் பாகவதம் படிப்பது என் காதருகில் மிக தெளிவாக கேட்டது.படிப்பது நின்றபோது சதங்கை ஒலி மட்டும் கேட்டது.. ஆக பரம பாகவதாரன பெரியவர் முன் கண்ணன் களி நடனம் ஆடுகிறான்.

அதை அவர் அனுபவிக்கும்போது படிப்பதை நிறுத்தி விடுகிறார்.

கண்ணன் லீலை தொடர்கிறது. கண்முன் நின்ற கண்ணன் மறைந்ததும், பாகவதம் அங்கு தொடர்கிறது..‘

மறுபடி கண்ணன் இவர் படிப்பதற்கு ஏற்ப நடனம் ஆட, கண்ணனை இவர் பார்ப்பதும், விட்டுவிட்டு பாகவதம் படிப்பதும் தொடர்கிறது.

ஆக பாகவதம் எந்த குறையும் இல்லாமல் தொடர்கிறது. கருட மண்ட பத்தில் இவர் தன் மேல் துண்டினால் தினமும் தன் முன்பாக சுத்தம் செய்துவிட்டு பிறகு பாகவதம் படிப்பது நம்மில் யாரும் அவர் முன்வந்து அமர்ந்து பாகவதம் கேட்போம் என்ற எண்ணத்தில் அல்ல..

பாகவதம் படிக்க ஆரம்பித்ததும், கண்ணன் அவர் முன் தோன்றி, படிப்ப தற்கு ஏற்ப நடனம் ஆடுகிறான்.

அவன் கால்படும் இடம் சுத்தமாக இருப்பதற்காகத்தான் தனது வஸ்திரத்தைக் கொண்டு சுத்தம் செய்கிறார்.

அதேபோல் மணல் வெளியில் இவர் கையால் செய்த மணல்மேட்டில் கண்ணன் பாத சுவடுகள் படிந்திருப்பதைப் பாருங்கள். கண்ணன் இவர் முன் நடனம் ஆடியதற்கு அதுவே சாட்சி...‘



‘அவர் தினமும் காணும் காட்சியைத் தான் நான் கண்டேன். இவர் தயவால் கண்ணன் களிநடனம் கண்டேன்.

அவன் பாதம்பட்ட இடத்திலிருந்து பாத துளி சேகரித்தேன். அதுதான் இந்த திருமண்.

திருவரங்கத்தில் பரம பாகவதர் இவர் வழிகாட்ட அரங்கனை சேவிக்க அனைவரும் செல்வோம்.‘

அரைகுறை பைத்தியம் என அதுவரை ஊரால் கருதி வந்த அந்த பரம பக்தர் முன் செல்ல, அரங்கனை தரிசிக்க பின் தொடர்ந்தார் வெளியூர் பண்டிதர்‘..

குட திசை முடியை வைத்து குண திசை பாதம் நீட்டி

வடதிசை பின்பு காட்டி தென் திசை இலங்கை நோக்கி கடல் நிறை கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு உடல் எனக் உருகுமாலே என்செய்கேன் உலகத்தீரே ஸ்ரீரங்கநாதர் திருவடிகள் சரணம்.

புதிய தமிழ் புத்தாண்டான ‘ சுவாவசு‘ ஆண்டு உலகெங்கும் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்மை தரும் ஆண்டாக அமைய 108 வைணவ தேசங்களில் முதன்மையாக விளங்கும் ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் அரெங்கநாதர் அருள் புரியட்டும்.

ரெ. முரளி
ஆசிரியர் - இலக்கியச் சாரல்

# எதுவும் வேண்டாம் என்னவனே!

எதுவும் வேண்டாம் என்னவனே
நீ என்னை பிரிந்த நொடியில் இருந்து நான்
நடைபிணம் தான்

என்னை விட்டு சென்ற உன்னை
ஒருபோதும் குறை சொல்ல மாட்டேன்

உன் அன்பின் சாயலில்
வேற எந்த ஆணையும் என் இதயத்தினுள்
வர விட மாட்டேன்

உனக்கென துடித்த என் இதயம்
மரணம் வரை உனக்காகவே துடிக்கட்டும்

தூரத்தில் ஜோடி புறாக்களை பார்த்து
என் கடந்த காலத்தை மீட்டிக் கொள்கிறேன்

ஒரு தேநீர் கோப்பை போதும்
என் தனிமையை தீர்த்துக் கொள்கிறேன்

என்றும் என் நினைவுகளுக்கு
நீ என் காதலன் தான்

என்னோடு சேர்ந்து நடந்த உன் பாதம்
முடிவுற்ற இடத்தில் என் கல்லறை அமையட்டும்

மறுஜென்மம் என்று ஒன்று இருந்தால்
உன்னை தீரா காதல் செய்ய நான்
காத்துக் கொண்டிருக்கிறேன்!

அகீலா ஜவுபர்
ஏத்தாளை, புத்தளம், இலங்கை




"தப்பிப் பிழைத்த எண்ணங்கள்"
கவிதைத் தொகுதி பற்றிய ஒரு பார்வை

நூல் கண்ணோட்டம்
வெலிகம ரிம்ஸா முஹம்மத்

கேகாலை மாவட்டத்தின் இறம்புக் கனையைச் சேர்ந்த ஹப்ஸா பஹுமீரின் "தப்பிப் பிழைத்த எண்ணங்கள்" என்ற கன்னிக் கவிதைத் தொகுதி அண்மையில் வெளிவந்துள்ளது. தனது பெற்றோர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள இந்த நூலானது, 107 பக்கங்களில் எளிமையான நூறு தலைப்புக்களில் அமைந்த சிறியதும் பெரியதுமான கவிதைகளை உள்ளடக்கி யுள்ளது.

பாடசாலையில் விஞ்ஞானப் பாடம் கற்பிக்கும் ஆசிரியரான இவர், இந்தக் கவிதை நூலில் தனது வாழ்வியல் மற்றும் உலகியல் அனுபவங்கள் போன்றவற்றை மையமாகக்கொண்ட கருப்பொருட்களை வைத்தே நூறு தலைப்புக்களில் அமைந்த தனது கவிதைகளை கவிஞர் யாத்துள்ளார்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கி யுள்ள உயிரியல் ஆசிரியர், அமீன் பவாஸ் அவர்கள் "சமகாலத்தில் தன் திறமைகளை நான்கு சுவர்களுக்குள் மறைக்காமல் துணிவு கொண்டு, பட்டறையில் பட்டை தீட்டப்பட்ட வைரமாய், பாசறையில் தன் பா வண்ணத்தால் பிரகாசிக்கும் பாமா தேவி ஹப்ஸா பஹுமீரின் இந்தக் கன்னி முயற்சியைக் கண்டு மெய் சிலிர்க்கின்றேன். வாழ்வியல் அனுபவங்களில் தப்பிப் பிழைத்த எண்ணங்கள் அவ்வப்போது மகிழ்ந்த தருணங்களில் இதழோரம் பூத்துக் குலுங்கிடும் சிறு புன்னகையில் மனதையே நிறைத்து வாழ்வின் அந்தத்தை உணர வைக்கும் நினைவுகள் பல இங்கே எழுத்துக்களாக்கப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார்.

கவிதை என்பது யாதெனில் உள்ளத்தின் பிரதிபலிப்பாகும். உள்ளத்தில் பிரதிபலிப்பதையெல்லாம் எல்லோராலும் திறம்பட வெளிப்படுத்திட இயலுமா என்றால் நிச்சயம் முடியாது. கவிஞன் எனும் ஆளுமைக்கு உட்பட்டவனே தன் உள்ளத்தில் இருப்பதை எல்லாம், தன் உள்ளத்தில் நினைப்பதை எல்லாம் சொற்களாக்கி, வரிகளாக்கி, கவிகளாக்கி உயர;ந்து நிற்கின்றான். தன் உள்ளத்து உணர்வுகளை மட்டுமின்றி உலகையும் உள்வாங்கி தன் சீரியச் சிந்தனைகளால் அதனைக் கவிகளாக்கிக் கவிஞன் என்று மார்தட்டிப் பேருவகைகொள்கின்றான். அப்பேறுபட்ட பேருக்கும் புகழுக்கும் உரிய கவிஞன் என்னும் அடைமொழிக்குள் உட்பட்ட கவிஞர் ஹப்ஸா பஹுமீருக்கு தனது வாழ்த்துக்களைப் பதிவு செய்துள் ளார் தமிழ்நாட்டுக் கவிஞர் என். ஜாகிர்

உஷேன் அவர்கள். நூலாசிரியர் பற்றிய சுருக்கமான பின்னட்டைக் குறிப்பை பிரான்ஸில் வசிக்கும் தமிழ்நெஞ்சம் சஞ்சிகையாசிரியர் அமின் எழுதியுள்ளார்.

விஞ்ஞானப் பாட ஆசிரியராக இவர் இருந்தாலும் தமிழ் மீது கொண்ட பற்றே இவரைக் கவிதை புனைய வைத்துள்ளது என்று உறுதியாகக் கூறலாம். கவிதையோடு மாத்திரம் இவர் நின்றுவிடாமல் சிறுகதை, கட்டுரை, பெண் ஆளுமை அறிமுகங்கள், சுயசரிதை, சிந்தனைக் கருத்துக்கள் போன்ற பல இலக்கிய வடிவங்களிலும் இவருடைய எழுத்துக்கள் பரவி நிற்கின்றன. பல தடைகளை உடைத்தும், பல தடைகளைத் தாண்டியும், பல்வேறு வகையான நிலைகளில் போராடியும் தன்னை ஒரு பெண் கவிஞராக முத்திரை குத்தி இலக்கிய வானில் உலா வருபவரை நாமும் பாராட்டியாக வேண்டும்.

இனி நூலாசிரியரின் பல்வேறு தலைப்புக்களில் அமைந்த கவிதைகளில் சில கவிதைகளை இங்கு இரசனைக்காக எடுத்து நோக்குவோம்.

''இயற்கை அன்னை'' (பக்கம் 23) என்ற கவிதையை வாசிக்கும் போது கோடையிலே திடீரென மழை வரும் போது எத்தனை மகிழ்ச்சியாக இருக்குமோ அதுபோலவே மிகவும் இனிமையாக இருக்கின்றது. மழையை இயற்கை அன்னையின் செல்லக் கோபமாக பார்க்கும் கவிஞரின் கற்பனை அலாதியானது. அந்தக் கோபத்தை தணிக்க இலேசாக நனைவதாக கவிஞர் கூறியிருக்கும் பாங்கு மிகவும் இரசிக்கத்தக்கது. கீழுள்ள கவிதை வரிகள் இதனை நிதர்சனமாக்குகின்றன.



**விண்ணில் வெள்ளை நிற ஒளி வீச**
**பஞ்சு மேகம் உலா வர**
**வானமே அமைதிப்**
**பூங்காவாக ஜொலித்தது..**
**விநாடிகள் விந்தையாகக் கடக்க**
**நொடிப் பொழுதில் அமைதிப் பூங்கா**
**ஆக்ரோஷமாய் ஆடியது**
**ஆகாயத்தில்!**

**காரிருள் சூழ பஞ்சு மேகம்**
**பஞ்சாய் பறக்க**
**விண்ணைப் பிளந்து எமனின் வருகை**
**மின்னலாய் மின்ன சிரிப்பொலியும்**
**இடியாய் காலடி சத்தமும்**
**கணீர் கணீர் என ஒலிக்க**
**மழையும் சோவெனப் பொழிந்தது!**

**நானோ வீட்டிற்குள் பூட்டப்பட்ட**
**ஒரு சிறகொடிந்த கிளியாய்**
**ரசிக்கிறேன்**
**இயற்கை அன்னையின்**
**கள்ளங்கபடமற்ற**
**செல்லக் கோபத்தை!**

கொரோனா என்ற வார்த்தை இப்போதும் அடிநெஞ்சில் ஒரு வகையான கலக்கத்தை ஏற்படுத்தி நிற்கின்றது. அது தந்துவிட்டுப் போன காயங்கள் ஏராளம். மனிதகுலம் சந்தித்த பெரும் நோய்களில் உலகமே மிகவும் பயந்து அச்சமுற்ற ஒரு நோயாக கொரோனாவும் திகழ்கின்றது. முகக் கவசங்களும், தனிமைப்படுத்தலும், சைரன் ஒலியும், பிரேக்கிங் நியூஸ்களும் ஒரு வகையான பீதியை மக்கள் மனதில் உருவாக்கியிருந்த காலமது. அந்தப் பீதிக் காலத்தை நினைவுபடுத்துவதாக ''கொரோனா எனும் கொடுங்கோலன்'' (பக்கம் 28) என்ற கவிதையின் பின்வரும் வரிகள் அமைந்துள்ளது.

***ஒற்றைக் குடைக்குள் ஆண்ட அரசன்***
***அகிலம் எங்கும்***
***தூற்றப்படக் கூடியவன்***
***அரசனின் பெயரைக் கேட்டாலே***
***ஆடிப்போகும் மாந்தர் கூட்டம்***

***வயது எல்லையின்றி தன்***
***வசப்படுத்திக் கொண்டவன்..***
***வயது வந்த வயோதிபரையும்***
***கொஞ்சலுக்குரிய சிசுவையும்***
***காவுகொண்டவன்..***
***இளைஞர்கள் மாத்திரம்***
***விதி விலக்கோ?***

‘‘தியாகம்‘‘ (பக்கம் 31) என்ற தலைப்பில் அமைந்த கவிதை தாய், தந்தை தன் பிள்ளைகளுக்காக செய்கின்ற தியாகங்களைப்பற்றி ஆழமாகச் சொல்லி நிற்கின்றது. தன்னையே உருக்கி தன் குழந்தைகளின் நலனுக்காக தாய் செய் கின்ற தியாகங்கள் காலம் காலமாக நாம் அறிந்ததே. அதேபோல குழந்தை பிறந்து, வளர்ந்து, ஆளாகும் வரை ஒரு தந்தை மேற்கொள்ளும் தியாகம் பற்றியும் கவிஞர் தன் கவிதையில் மறவாமல் நினைவுபடுத்திக் குறிப்பிட்டுள்ளமை மிகச் சிறப்பு. கீழுள்ள கவிதையின் வரிகள் அதனை சிறப்பாக எடுத்தியம்புகின்றன.

***தலையாய தியாகன் நம் வாழ்வில்***
***மண்ணில் உதிக்கும் வரை***
***தியாகியுடன் கருவறையும்***
***சேர்த்து சுமந்தவன்***
***பட்சிகள் இரை தேட கூட்டை***
***விட்டுப் போக முன்பே***
***தன் உயிர் நேசங்களுக்காக***
***தன் வீட்டை துறந்தவன்***
***இரா பகல் பாராது தன்னை***
***வருத்தி உழைத்தவன்!***

ஒரு விடயத்தின் மீது அதிகமாக ஈடுபாடு கொள்வதே போதை எனலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றின் மீது போதை கொள்கின்றார்கள். இன்று பெரும்பாலானவர்கள் கைத்தொலைபேசி மீது போதை கொண்டிருக்கிறார்கள். கைப்பேசி இல்லாமல் ஒரு நிமிடத்தை யேனும் கழிக்க முடியாத ஒரு சூ(சு)ழ லுக்குள் நாம் அனைவரும் அகப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். சமூக வலைத் தளங்கள் தொட்டு அன்றாட செயற் பாடுகளின் போதும் கைப்பேசியே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. பல வேளைகளில் ஒரு வழித்துணையாகவும் கைப்பேசி செயற்படுகின்றது. அளவுக்கு மீறிய வகையில் கைத்தொலைபேசி மீது மோகம் கொள்ளாமல் தமது குடும்பத்துக்காகவும் நேர காலத்தை செலவழிக்க வேண்டும் என்ற கருத்தையே “போதை” (பக்கம் 97) என்ற கவிதை அருமையாகக் கூறி நிற்கின்றது.

இக்கவிதாயினியின் கவிப் பயணம் தொடரவும் மேலும் பல காத்திரமான தொகுதிகளை வெளியிடவும் பிரார்த் திப்பதுடன், எனது மனமார்ந்த நல்வாழ்த் துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

***நூல் - தப்பிப் பிழைத்த எண்ணங்கள்***
***நூல் வகை - கவிதை***
***நூலாசிரியர் - ஹப்ஸா பஹுமீர்***
***வெளியீடு - மூதூர் ஜே.எம்.ஐ.***
***வெளியீட்டகம்***
***விலை - 500 ரூபாய்***

நூல் கண்ணோட்டம்

வெலிகம ரிம்ஸா முஹம்மத்

# உனைத்தொலைத்து நான்



என் கவிதைகள் எல்லாம் உனைத்தானே பேசும்
என் பொழுதுகள் எல்லாம் உனைத்தேடி ஏங்கும்
கண்கள் திறந்தால் நிஜத்தில் நீ இல்லை
கண்கள் மூடினால் கனவினில் உன் சிரிப்பு

காற்றினில் பறந்து கன்னியிவள் காணவந்தாய்
கண்கள் கண்டதும் கனாவாய் களைந்து போனாய்
உன்பெயர் இதழ்கள் மௌனமாய் மொழிய
உன்நினைவில் மனமோ குளிர்ந்திங்கு போகிறது

வார்தைகளால் நானும் நட்பெமன மொழிகிறேன்.
உள்ளத்தின் மொழியை மௌனத்தில் மொழிபெயர்க்கிறாய்!
என் மனம் அறியாமல் உயிர்வரை கலந்தாய்!
உனைத்தொலைத்து நான் நிற்க நீயோ
இதயவறையில் சிரிக்கிறாய்!

ஆயிஷா சகிலா

# நவீன தொழில் நுட்பத்தினால்

# குடும்பத்தில் ஏற்படும் விளைவுகள்

காலம் செல்லச் செல்ல காத்திரமான பல விடயங்கள் காணாமற்போய் புத்தம் புது விடயங்கள் செயற்கையான உந்துதல்களால் உருவெடுக்கின்றன. மனித உழைப்பும் வியர்வையும் மறைந்து நவீனங்கள் நாடெங்கும் நடமாடித் தரிகின்றன. அறியாமை நீங்கி அறிவுடைமை தலை தூக்கி இயலாமைகளை யெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வடிகட்டி இன்றைய தொழில் நுட்பங்கள் தன்னாட்சியை நிலை நிறுத்தி வருவதை உணரவும் முடிகின்றது அதே நேரம் கடந்து செல்லவும் சந்தர்ப்பங்கள் வாய்க்கின்றன. நவீனம் வளர்ந்து வரும் இன்றைய காலகட்டங்களில் தொழில்நுட்ப அறிவானது சிறுவர் முதல் பெரியோர் வரை கட்டாயம் அவசியமானதொன்றாக காணப்படுவதோடு மட்டுமல்லாமல் பல்வேறு தேவைகளையும் அதனோடு நிறைவேற்ற வேண்டிய நிலையும் இன்றைய காலகட்டத்தில் நிலவுகின்றது. தனிநபர் சிலரால் உருவாக்கப்படும் இந்த குடும்பமானது தற்காலத்தில் பொதுவாக அனைத்து தேவைகளையும் தொழில்நுட்பங்களையும் சார்ந்துள்ளதை எல்லோரும் அறிந்த உண்மை .செயற்கை நுண்ணறிவினால் இயங்கி வரும் தற்கால உலகமானது தொழில்நுட்ப சிந்தனைகளை தன்வயம் வைத்துக்கொண்டு இளம் தலைமுறையினர் முதல் தள்ளாடும் முதியோர் வரை தன்னையே சார்ந்திருக்கும் நிலைக்குத்தள்ளி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவேதான் நவீனம் சார்ந்த சாதக பாதக விளைவுகளை அதனை சார்ந்துள்ள ஒவ்வொருத்தரும் எதிர் கொண்டு வருகின்றனர்.

குடும்பத்தின் உறவினர்களில் எவரும் தொழில் நுட்பங்களின் சாதக பாதக விளைவுகளை அண்மித்தே தங்களின் நாட்களை நகர்த்துகின்றனர் என்பதை எல்லோரும் உறுதி கொள்ள முடிகின்றமை உண்மையான விடயம் அல்லவா.

அந்த வகையில் தொழில்நுட்பம் சார் சாதகமான பக்கங்களை புரட்டும்போது தென்பட்ட சில விடயங்களை ஆராய்வோம்.

**1. வளர்ந்து வரும் இளம் தலைமுறையினரின் திறப்புக் கோர்வைகள்.**

நவீனங்களால் குளிப்பாட்டப்படும் இளம் தலைமுறையினரின் திறப்புகளாகத் திகழும் தொழில் நுட்பங்களானவை இன்றைய சமுதாயத்தினரின் வாழ்க்கை நகர்வுக்கான வழிகாட்டலாய் அமைகின்றன.

இதுவரையிலும் அறிந்திடாத பல புதிய விடயங்களை பார்வையாளர்களைக் கவரும் வகையில் தன் பக்கம் ஈர்க்கும் வண்ணம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றார் போல் வழங்கி வருவதாலும் இளம்

சமுதாயம் தொழில்நுட்ப உலகில் வாழ்ந்து வருகின்றனர். தேடல்களால் ஆழப்படும் உலகில் தேடித்தான் பல விடயங்களை பெற்றிட முடியும். எனவேதான் தேடல் களின் தேன் துளிகளாய் தொழில்நுட்ப உலகின் ஒவ்வொன்றும் பரிணமிக்கின்றன.

நுட்பங்களால் கிடைக்கப் பெறுகின்ற பல சிந்தனைகளையும் கோட்பாடுகளை யும் வைத்து இன்றைய உலகு இயங்கி வருகின்றது. இவைதான் வளர்ந்து வரும் சமுதாயத்தினரின் திறவுகோலாக காட்சி யளிக்கின்றன.

**2. அறிவுச்சுரங்கம்**

நாளுக்கு நாள் அறிவுத்தீட்டல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. எண்ணற்றவைகள் எண்ணிலடங்காதவை கள் என எத்தனையோ பல ஆழ்கடல் போன்ற ஆழ்ந்த ஏராளமான புதிய திருப்பங்கள் புதைந்து கிடக்கின்றமை உலகெங்கும் ஜொலிக்கின்றன.

கண்கவர் காட்சிகளாகவோ படங்க ளாகவோ காணொளிகளாகவோ காட்சிப் படுத்தல்களின் மூலம் அனைவரையும் தன் வயம் கவர்கின்றமை தொழில் நுட்பங்களின் கைங்கரியமாகவே என்னால் உணரப்படுகின்றது. அயர்ந்து கொள்ளும் சமுதாயத்தினரின் அசட்டுத்தனத்தை கிள்ளியெறிந்திடும் தன்மை தாராளமாய்க் கொட்டி க்கிடக்கின்றன.

தூங்கிக் கொண்டிருந்த எத்தனையோ மூளைகள் விழித்துக் கொண்டதும் ஆர்வங் களின்றி விழித்திருந்த எத்தனையோ, விழிகளின் விருந்தாய் உற்சாக மூட்டி யுள்ளமையும் ஆச்சரியமளிக்கின்றமை எந்த தடைகளுமின்றி ஏற்றுக் கொள்ளக் கூடியதே .

**3. நாடி வருவோரை திருப்தியுடன் வழி அனுப்புதல்**

ஏராளமான நுட்பங்களால் இவ்வுலக மானது இயங்கிக் கொண்டு வருகின்ற மையும் அதன் வழியே இன்றைய மனித வாழ்க்கை நகர்ந்து செல்கின்றமையும் உறுதி பூர்வமான விடயமாகும்.

தனிநபர், தன் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்காக முதலில் நாடுகின்ற இடங் கள் தான் வலைத்தளங்கள். இவ்வலைத் தளங்களை முக்கிய கருத்தாவாக வைத்துக் கொண்டு தேடல் வேட்டைகள் ஆரம்பமாகி அவற்றின் மூலமாக பல்வேறு தகவல் திரட்டுக்களை சேகரித்துக் கொண்டுதான் இந் நவீன மனிதனின் காலம் இயங்கி வருகின்றது.

உலகின் எவ்வகையான செய்திகளா யினும் எக்கால செய்திகளாயினும் தேட லுக்கு ஏற்ப அவை ஒவ்வொன்றுக்கு மான விடைகள் அளிக்கப்படுகின்றன. குறித்த ஓர் விடயம் சார்ந்து தேடும் மனிதன் தனக்கு அது வரையிலும் தெரிந்திடாத எத்தனையோ பல புதுமைகளை தளங் களின் மூலம் பெற்றுக்கொள்ள கூடியதாக வுள்ளன.

**4. நேரத்தை சேமித்தல்**

தற்காலத்தைப் பொறுத்தவரையில் எந்த விடயமாக இருந்தாலும் அதற்காக அதிக நேரம் தேவைப்படுவது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

பொருட்கள் கொள்வனவை எடுத்தால் ஒன்லைன் ஷாப்பிங் மூலம் நேர வீண்விரயம் தடுக்கப்படுகின்றது. அதே போல் கல்வி சார்ந்த விடயங்களை தேடுவதாயின் முதலொரு காலம் இருந் தது நூலகம் சென்று நூற்கள் பலத்தை

# எனக்கு மட்டும் தானா

எனக்கு மட்டும் தானா
இத்தனை வலிகள்?
எனக்கு மட்டும் தானா
இத்தனை துன்பங்கள்?
எனக்கு மட்டும் தானா
இத்தனை பிரச்சினைகள்?
எனக்கு மட்டும் தானா
இத்தனை தோல்விகள்?
எனக்கு மட்டும் தானா
இத்தனை தடைகள்?
எனக்கு மட்டும் தானா
இத்தனை போராட்டங்கள்?
எனக்கு மட்டும் தானா
இத்தனை சூழ்ச்சிகள்?
எனக்கு மட்டும் தானா
இத்தனை துரோகங்கள்?

எனக்கு மட்டும் தானா
இத்தனை ...
எனக்கு மட்டும் தானா
இத்தனை ... என
அடுக்கும் உனக்கு மட்டுமல்ல
உன்னைச் சுற்றியிள்ளவர்களுக்கும் சரி
நீ அறியாதவர்களுக்கும் சரி
அத்தனையும் இருக்கத்தான் செய்கிறது...

எனக்கு மட்டும் தானா
இத்தனையென வருந்தாது
உன்னை பலப்படுத்தத்தான்
இத்தனையுமென எண்ணி
எதிர்கொண்டு கடந்திடப் பழகு...
அழுத்தங்களோ
தொலைதூரமாகிப் போகும்...

எண்ணங்களின் எழுத்தழகி
**அறூபா அஹ்லா**
கல்முனை, இலங்கை

யும் அலசி ஆராய்ந்து குறிப்பிட்ட அந்த விடயத்திற்கான பதிலை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை. ஆனால் இன்றைய நவீன காலத்தில் வலைத் தளங்களின் மூலமாக தேடுவதன் மூலம் அங்கேயே நேரடியாக எதையும் பெற்றுக்கொள்ள முடிகிறது. இவ்வாறான பல விடயங்களில் தொழில்நுட்ப வளர்ச்சியில் தங்கியுள்ளமையின் காரணத்தால் நேர வீண் விரயத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் காத்துக்கொள்ள வாய்ப்புக்கள் கிட்டுகின்றன. இவ்வாறான சாதக விடயங்களைக் கொண்டுள்ள தொழில் நுட்பமானது சில பாதகமான விடயங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

***1. உறவுகளுக்கிடையிலான விரிசல்***

தொழில்நுட்பங்களின் உதவியோடு பல விடயங்களை இயக்கிக் கொண்டு செல்லும் குடும்ப வாழ்வில் குடும்பத்தோடு இணைந்து செயற்பட முடியாத நிலை இன்று நிலவியுள்ளமையை உணர்ந்து கொள்ள முடிகின்றது. நவீன உலகோடு தன் வாழ்வை நகர்த்திச் செல்லும் மனிதனானவன் உறவினர்களுடன் நேரம் கழிக்காத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையினால் குடும்பங்களில் பிரச்சினைகள் வேறூன்றி வருகின்றன.

தொழில் நுட்பமின்றி வாழ முடியாத நிலையினால் குடும்பத்தையிழக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுகின்றது. இதனால் சண்டைகளும் பிரச்சினைகளும் புரிந்துணர்வில்லாத தன்மைகளும் மேலோங்கி வருகின்றமை தொழில் நுட்பங்களின் வளர்ச்சியினால் ஏற்படும் பாதிப்பாகவே கருதப்படுகின்றது.

***2. சமூகச் சீர்கேடுகளுக்கு வழி வகுத்தல்***

பண்டைய காலம் வேறு இன்றைய காலம் வேறு பண்டைய கால பண்பாடும் பழக்க வழக்கங்களும் இன்றைய கால பண்பாடும் பழக்க வழக்கங்களும் வேறு என்பது தெளிவான உண்மை. தொலை பேசிகளும் புதிய எப்ஸ்களும் வலைத்தளங்களும் இன்றைய கால சந்ததியினரை சீர்கேட்டில் கொண்டு செல்கின்றமை ஆச்சரியப்படக் கூடியதும் கவலைப்படக்கூடியதுமாகும். இதனால் இளம் சமுதாயத்தினரின் வாழ்க்கைக் கோலங்கள் வேறு வழிகளிலே சென்று கொண்டிருக்கின்றன. காலம் செல்ல செல்ல பல்வேறு புதிய நுட்பங்களின் வருகையின் காரணமாக இளம் தலை முறையினர் தம்மைத்தாமே அழித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஏமாற்றம், பண மோசடி, திருட்டு, போதை, துஷ்பிரயோகங்கள் போன்ற சீர்கெட்ட பழக்கங்களும் நோய்களாக படர்ந்து கொண்டு வருகின்றமையானது அனைவரையும் சோகத்தில் ஆழ்த்துகின்றது. இவ்வாறான விளைவுகளை எதிர்கொள்ளும் ஒவ்வொரு குடும்பங்களும் ஒவ்வொரு சூழ்நிலைகளைப்புரிந்துநடப்பதுமட்டுமல்லாதுஅவை ஒவ்வொன்றையும் கையாளும் திறனையும் தன்வயம் கொண்டிருப்பதனால் மாத்திரமே ஆரோக்கியமான குடும்பம் ஒன்றைக் கட்டியெழுப்ப முடியும். தொழில் நுட்பமானது வெறுமனே கருவி மாத்திரமே. அதைப் பயன்படுத்துவோரின் தன்மையையும் விதத்தையும் பொறுத்தே அதன் சாதக பாதக விளைவுகள் அமையும். எனவேதான் தொழில் நுட்பங்களை முறையாகப் பயன்படுத்தி குடும்ப உறவு களை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது குடும்ப உறுப்பினர்களின் தலையாய கடமையாகும்.

**பா.ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான் (இஸ்லாஹி)**
புல்மோட்டை

# ஹைக்கூ மலர்கள்

கா.ந.கல்யாணசுந்தரம்

- ஒரு மலர்தலின்
முனைப்பு
அரும்புகளிடம்
- பலவண்ண மலர்கள்
நார் ஒன்றில்
ஒருமைப்பாட்டுணர்வு
- இல்லையென சொல்லாமல்
ஒரு மலரினைக் கொடு
நெஞ்சம் நிறையும்
- நேய உணர்வுகளை
மதிக்கும் மானுடம்
பூக்களோடும் பேசலாம்
- பூக்கடை வியாபாரிக்கு
தெரியாது
இன்றைய பூக்களின் பயணம்
- மலர்களைவிட
முட்களிடமும் விசாரிப்பு
தென்றல்
- மழைத்துளியில் குளித்தெழுந்து
வண்டுகளை வரவேற்கின்றன
தேன் சுமக்கும் மலர்கள்
- சுத்தம் செய்யாமல் விடுங்கள்
வேர்களுடன் உறவாடுகிறோம்
உதிர்ந்த மலர்கள்
- பூங்காவில் ஒரு
நேர்காணல்
மலர்களோடு
- பெயரை மாற்றச்சொல்லி
போர்க்கொடி
ஜாதிமல்லி



# தன்முனைக்கவிதைகள்



●

தசைகள் புரண்ட ஓட்டத்தில்
வெற்றி கிடைத்தது
இரண்டு கோடுகளுக்கு
இடையில் ஏன் இந்த வாழ்வு

●

ஒரு நிமிட மௌனம்
பிரசவிக்கிறது கவிதை
ஆணின் பார்வையில் காதலும்
பெண்ணின் பார்வையில் அழகும்

●

மீசிதறிக்கிடக்கும் அன்பில்
ஒரு துளி போதுமானது
கண்களை கட்டிக் கொண்டு
பயணிக்கிறது நேச வாழ்வு

●

ஐந்து விரல்களை குவித்து
விதைக்கப்படுகிறது விதை
எறிந்த கற்களிலெல்லாம்
பசியின் சொற்கள்

●

நிலாவை பின்தொடர்ந்து
செல்கிறான் மகன்
வலது விரல் அம்மை கையில்
இடது விரல் அப்பன் கையில்

●

ஒரே ஒரு சாலை
சின்னதொரு வீடு
அனாதை இல்லங்களில்
இல்லை ஒற்றைக் குருவி

●

படர்ந்த குளத்தில்
வானத்தின் புன்னகை
கல் விழுந்ததும்
முகம் சுழிக்கிறது வானம்

●

போதிமரத்தின் நிழலில்
ஆசைகள் மறைந்துவிட்டன
புத்தனை விழுங்கிவிட்டது
ஆசையில் நிழல்

●

முதல் பக்கத்தில்
வாழ்வை விவரிக்கிறேன்
கடைசி பக்கத்தில் புள்ளியாய்
நிச்சயம் நானிருப்பேன்

●

அரைக்கம்பத்துக் கொடி
தலை நிமிர்ந்த வணக்கம்
நிரப்பப் படவில்லை
ஓய்வு ஊதிய வரிசை

●

நீளமானதாம் கூந்தல்
எறும்புகளின் கூட்டமாம்
விரல் தொட்டு சீனி வைக்க
இன்றே பிறந்தாள் தேன்செல்வி

●

இது வண்ணம்தான்
இல்லை எண்ணம் தான்
குழந்தையின் கையில்
உருள்கிறது வானவில் வாழ்வு

●

நேரம் கிடைத்து விட்டது
கனி கனிந்துவிட்டது
கல்லெறியும் ஆசையையும்
ஐந்து விரல்களையும் காணவில்லை

●

ஒரு வரம் இருக்கிறது
அருகில் அம்மா இருந்தாள்
வானத்திலும் வாசலிலும்
பூக்கள் மலரத் தொடங்கின

●

ஒரு மௌனம் பிறக்கிறது
ஒரு கனி இனிக்கிறது
யாரும் பேசாமல்
இருப்பதுதான் வெறுமை

●

உளி உடைவதற்குள்
உனை நீ செதுக்கிவிடு
பரந்து கிடப்பதெல்லாம்
பரவையென பெயரில்லை

●

நான் உண்மையை சொல்லி
பரிசில் பெற வரவில்லை
பொய்யில் புலவரின்
நிழல் கீழ் எறும்பே மேல்

●

காற்றை விழுங்கி
கானம் கூவியது குழல்
காதுகளில் பஞ்சடைத்தபிறகும்
கானம் பாடுகிறாள் கிழவி

●

உனை ஏமாற்றிட
சாதுர்யம் தேவையில்லை
நம்பிய விடயத்தை
கொடுக்காமல் செய்தால் போதும்

●

தூரம் செல்ல செல்ல
வானம் விலகுகிறது
வானவில்லின் வண்ணமொன்று
என்னுடன் நடைபயணத்தில்

●

நிலம் விழுந்து
நிமிரத்தடுமாறுகிறது விதை
நீர் பற்றாக்கிறையால்
தினம் நிலத்திற்கு ஒரு தீனி

## சே கார்கவி கார்த்திக்
நாகப்பட்டினம், தமிழ்நாடு



# வெண்பா போட்டி

## காலம் : மார்ச் 2025

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா...?
மும்மொழியும் வேண்டி முனைவீரா...? எம்மொழி
அன்னைத் தமிழ்தான் ஆகச் சிறந்ததொரு
மண்ணையாளும் மாண்பாகு மே...

தென்பசியார்

.

செம்மொழியை மாத்திரம் சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா - எம்மொழிதான்
செம்மாந்தே ஓர்மமாய்ச் சீர்மைச் செருக்குடன்
இம்மையில் வாழும் இனிது

உடுவிலூர்க்கலா

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா...?
மும்மொழியும் வேண்டி முனைவீரா...? - எம்மொழியுங்
கற்கலாம் அல்லது கற்பிக்க லாமெனினும்
நிற்கவேண்டும் செம்மொழி நேர்.

பா. சக்கரவர்த்தி

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா...?
மும்மொழி வேண்டி முனைவீரா..? - அம்மம்மா
எப்போது வேற்றுமொழி எங்களுக்கும் தேவையோ
அப்போது கற்கலாம் ஆய்ந்து...!

ஜ.க.நாகப்பன்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா - இம்மையிலே
சும்மாதான் பேசுவார் சுற்றத்தார் தானிருக்க
அம்மாசோல் தேனாம் அது

பா.இந்திரன்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா??
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்மொழி
கற்றிடினும் தாய்மொழி கற்றிங்கு வாழ்ந்திட
வற்றாத பண்பது வாக்கு

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?!
மும்மொழியும் வேண்டி முனைவீரா?!- நம்நாட்டில்
வேண்டாம் எனச்சொன்னால் நீக்கிடுங்கள் யாவர்க்கும் ×
வேண்டுமெனில் ஏழைக்கேன் வேறு?!

×தனியார் பள்ளி உட்பட

செ. இராசா

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா - நம்மொழிதான்
இன்னமுதாய்ச் செந்தேனா யிவ்வுலகில் தித்திக்கும்.
பன்மொழியும் தேவைதான் பார்.

கிண்ணியா சபீனா



.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி  முனைவீரா? - மும்மொழியும்
முக்கனியாய்த் தித்திப்பில் மூழ்கடிக்கும்  காலமிதில்
அக்கறையாய் ஏற்போம் அறிந்து!

பாவலர்  கோவதன்,  மலேசியா

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டிமுனைவீரா - எம்மொழியும்
நம்தமிழின் முன்னால் நயத்தில் குறைவுடைத்தே
சிம்மமென நிற்போம் சிலிர்த்து.

பொ.முத்துராக்கு

.

செம்மொழியை மாத்திரம் சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா - நம்மொழி
கற்றே நனிமகிழப் பேசிடவே காலமெல்லாம்
சற்றேனும் சிந்திக்கச் சார்பு.

இந்திராணி தங்கவேல். திண்டுக்கல்.

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்மொழியில்
என்னகுறை உள்ளதென ஏதலத்தில் தூற்றியோர்க்கு
உன்றமிழால் நீயும் உரை.

வீரா-மோகன்,  யாழ்ப்பாணம், இலங்கை.

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா - எம்மக்காள்
செந்தமிழ் ஒன்றே செதுக்கும்  நமையெலாம்
இந்நிலத்தில் நல்லோராய் இன்று!

கெங்கை பாலதா

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?!
மும்மொழியும் வேண்டி முனைவீரா?! - எம்மொழி
சிந்தையில் ஏற்றிட சீர்பெறும் பண்புகள்!
நிந்தித்தார் வாழ்வதில்லை நீடு.

பாவலர் நிறைமதி நீலமேகம், பெண்ணாடம்.

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா - நம்மொழியாம்
செந்தமிழும் ஆங்கிலமும் சீரோடு ஆளுகையில்
சொந்தமுடன் வேற்றுமொழி ஏன்?

பாவலர் தாழை நா இளவழகன்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா...?
மும்மொழி வேண்டி முனைவீரா? - கம்முனு
போறவனைத் தொட்டுப் பொசுக்குனு கேட்கிறீர்
ஆற அமரவைக்க ஆப்பு..!

விசு. இம்மானுவேல், பெங்களூரு

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா ?
மும்மொழி வேண்டி முனைவீரா? - சம்மந்தி
எம்மொழிக்கு இந்தித்தாய் முன்மொழிந்தீர் கள்ளவழி
சிம்மா சனமில்லை செல்

மன்னை மணிமாறன்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்மொழியும்
கற்றால் கசடறக் கவ்வையேன்? இன்பந்தான்
பற்றுடன் வாழ்தலே பண்பு

*( கவ்வை - துன்பம், கவலை)*

குலா கிருஷ்ணா, ரொறொன்ரோ, கனடா

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழி வேண்டி முனைவீரா? - இம்மண்ணில்
நம்தமிழை நம்மினத்தை நாளெல்லாம் காத்திடவே
அம்பாய் விரைவோம் அறிந்து.

பாவலர் க.சண்முக சிதம்பரம்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியை வேண்டி முனைவீரா - செம்மொழியாம்
நம்மொழியைச் சிந்தித்தே நாமுயர்வோம் என்றைக்கும்
வம்பின்றி வாழ்ந்திடலாம் வா.

சிவ. மணிவேலன் புதுச்சேரி

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழி வேண்டி முனைவீரா? - நம்தமிழாள்
கொற்றத்தில் வீற்றிருக்க கற்றுணர்ந்த பன்மொழியும்
பெற்றவர்தம் ஞாலம் பெரிது.

வானதி சந்திரசேகரன்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்மொழி
கற்கினும் தாய்மொழிக்(கு) ஈடேது பார்தனில்
நற்றமிழ் தானேநம் நாடு

ம.பழனிச்சாமி, திருப்பூர்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்மொழியோ
போகும் இடத்தில் புரிந்துகொள்ள அம்மொழி
ஆகுமதைக் கற்ப தறிவு

இரா அழகர்சாமி

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா - எம்மொழியும்
கற்றல் தவறில்லை காசினியில். நம்தமிழ்
உற்றதே மேன்மை உணர்வு

சங்கர பாண்டியன்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - சும்மாவே
பேச்சிலே வீரனென்று பேசிக் களிப்பீரோ
வீச்சுடன் ஏற்றால் விருந்து

எழுத்தாளர் நாகா

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரோ
மும்மொழியும் வேண்டி முனைவீரா - நம்மொழி
எங்கும் உலகில் எளிதில் பரவிடும்
பொங்கிப் பெருகும் தமிழ்.

சோ. சுந்தரேசுவரி

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?!
மும்மொழியும் வேண்டி முனைவீரா?! - எம்மொழியும்
நம்மொழியே நாவினிக்க நன்குரைப்பீர் நாடியவை
அம்மம்மா ஆழும் அழகு

மாலா மாதவன்

.

செம்மொழி மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா -எம்மக்கள்
ஒன்றுபட்டு சொல்வோம் உளம்கொள்க; எந்தமிழ்
ஒன்றுமட்டும் போதுமே இங்கு

மலர்மைந்தன், கல்பாக்கம்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியை வேண்டி முனைவீரா? - நம்மொழியாம்
அந்தமிழுக் கீடாய் அறிவுமொழி வேறுண்டோ?
சிந்தனை செய்தல் சிறப்பு!

கோவை லிங்கா

.

செம்மொழி மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா - எம்மொழியாம்
செந்தமிழால் சிந்தைச் செழித்தோங்க என்றென்றும்
பைந்தமிழ்ப் போதுமே பார்.

பாவலர்மணி வா.சண்முகம்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரோ
மும்மொழியும் வேண்டி முனைவீரா - நம்மொழி
எம்மொழிக்கும் ஈடாகா என்றே இருந்தாலும்
மும்மொழியை ஏற்க முயல்.    *முயல் - முயற்சி செய்*

கு. கமலசரஸ்வதி

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்பாவாய்
எம்மொழி கற்றாலும் எம்சீர் தமிழுயர்வை
அம்பின் கதியாய் அறை.

தமிழ்க்கீரன், ஈழநாடு.

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா ?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்மினமே
எம்மொழியும் கற்றறிந்து எவ்விடமும் முன்னிற்க
மும்மொழியைக் கற்க முனை

மருத்துவர் தேவி

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - அம்மொழி
கற்றோர் வறுமையைக் காண்கிறோம் நாடெங்கும்
தற்குறிக் கொள்கை தடு.

இரா.கவிதா, திண்டுக்கல்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரோ
மும்மொழியும் வேண்டி முனைவீரோ - இம்மண்ணில்
சொல்லென்றால் ஐந்தமிழே சொல்லும் பதிலிங்கே
எல்லாம் உளதென் றெடுத்து!

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்.

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா - அம்மாவாய்
செம்மையென வாழ்வில் சிறப்பாய்ச் செதுக்கியிங்கு
தம்மனைத் தந்தோம் தரு

கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா - எம்மொழியும்
எம்தாய்மொ ழிக்கீடா எத்தரே சொல்லுங்கள்
வம்புகள் வேண்டாம் வலிந்து .

சரஸ்வதி பாஸ்கரன் , திருச்சி .

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா - எம்மொழியே
சம்மத மென்று சமத்துவமாய் வாழ்ந்திடல்
இம்மண்ணின் தூய்மை இயம்பு...

ஜெ வசந்தி, பளை...

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரோ
மும்மொழி வேண்டி முனைவீரோ - எம்மொழிக்கு
வேண்டாத் துணையென வேற்று மொழியேதும்
சீண்டாமல் செல்வீர் சிறப்பு!

இவள் இயற்கை விரும்பி அ.வள்ளிபாபு, நெய்வேலி.

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா??
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம் மொழியும்
கற்றுச் சிறந்திட காதலே கொண்டாலும்
பற்றுக தாய்மொழிபா தம்..!!

மணிமொழி லிங்கம் .

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா ?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்மொழி
மண்ணின் முதுமொழியாய் மாண்பினைப் பெற்றதால்
திண்ணம் தனித்தமிழே தீர்வு.

க.தங்கவேலு, கிருட்டிணகிரி

.

செம்மொழியை மாத்திரம் சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியும் வேண்டி முனைவீரா - அம்பிநீ
அம்பைவிட்டா யாய்ந்திடவே ஆங்கே வருகின்றது
தெம்புடன் தீந்தமிழே தீர்ப்பு.

குயில். மு.இரசியா பேகம்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்மொழியும்
வேண்டுமெனில் கற்போம்யாம் வேட்கையுடன், நீதிநெறி
தாண்டித் திணித்தல் தவறு

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - வம்பின்றி
எம்மொழியும் கற்றிடின் ஏற்றமே அம்மொழி
நம்விருப்பம் என்றால் நலம்.

’ ஒசூர் மணிமேகலை

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியை வேண்டி முனைவீரா - எம்மொழியைக்
கற்றிடினும் தப்பில்லை கல்வியில் சீர்பெற
வற்றிடா ஊற்றாய் வரும்!

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா
மும்மொழியை வேண்டி முனைவீரா - எம்மொழியைக்
கற்றிடினும் தப்பில்லை கல்வியில் சீர்பெற
வற்றிடா ஊற்றாய் வரும்!




எம்.ஆர்.தனசேகரன், லெங்கெங், நெ.செ. மலேசியா

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - சம்மதமே
எம்மொழி கற்கினும் எந்தமிழை ஆக்கிடுவேன்
அம்மொழிக்குப் பாலூட்டும் ஆய்

.

செம்மொழியை மாத்திரமே சிந்தித்து வாழ்வீரா?
மும்மொழியும் வேண்டி முனைவீரா? - எம்மொழி
என்றாலும் நந்தமிழை ஏற்றியே நாடாளும்
மன்றத்தில் வைப்பேன் மகிழ்ந்து

தனராஜ் பாப்பணன், கோவை

# வெண்பாப் போட்டி (பயணம்) 40

**போட்டியின் கால அளவு:**

ஏப்ரல் 01 முதல் 12 வரை 2025

இம்மாதப் போட்டி....

.

இன்றும் நமது கிராமங்களில் பாட்டி வைத்தியம் என்பது சிறுசிறு உபாதைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது

உதாரணம்

காய்ச்சலுக்கு கசாயம் சளிக்கு நண்டு ரசம் போன்றவை. இன்னும் நிறைய இருக்கிறது. உங்களுக்கு தெரிந்த உணவு வைத்தியத்தை ஒரு வெண்பாவில் பாடுவதே இம்மாதப் போட்டியாகும்.

**அசத்துங்கள் கவிஞர்களே....**

எ கா - பாடல்

.

என்னடா தம்பீ இருமல் சளியெல்லாம்
உன்னவிட்டு முற்றும் ஒதுங்கலையா? - உன்னோட
அம்மாட்டச் சொல்லி அரச்சிவச்ச நண்டுரசம்
சும்மா குடிச்சிட்டு சொல்(லு).

**ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.**

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் ப ட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்ப னைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகி ருங்கள் போதும்.
காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்.

தளர்வுகள் :-

தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டா யம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

**தமிழ்நெஞ்சம் ஆசிரியர்**

மற்றும்

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

# நேர்மையே வேர்!

பாவகை - சிந்தியல் வெண்பா

மண்ணில் சிறந்திடும் மாண்பெனும் நேர்மையே
விண்ணுமே போற்றும் விடியலும் - கண்ணிலே
கண்மணி யாகுமே கல்வி!

தன்னலம் நீக்கத் தருக்குமே நீங்குமே
தன்னிலை நோக்கத் தழைத்திடும் - உன்னிலை
வென்றிடும் நேர்மையே வேர்!

வாழ்வைச் சிலருமே வாழ்ந்திட லில்லையே
வாழ்வினில் எங்குமே வன்மமே - சூழ்ந்திடும்
வீழ்ந்தவர் வாழ்ந்திட வீறு!

மண்ணிலே நாளுமே மாந்தரை ஏற்றிடு
எண்ணமே வாழ்க்கையின் ஏற்றமே - உண்மையே
கண்ணிலே ஒற்றுமைக் காண்!

வாழ்வியல் கவி **சா.நாகூர் பிச்சை**
துபாய்



தன்முனைக் கவிதை

●

தொன்மை மொழி என்று
பெருமை கொள்வோம்
தாய்மொழி தமிழை
போற்றி வணங்குவோம்

●

நினைவுகள் எஞ்சியிருக்க
எங்கே சென்றாய்
கல்லறைக் காதலுக்கு
பூக்கள் பறிக்கிறேன்

●

நல்ல எண்ணங்களால்
வியப்பைத் தந்தாய்
முரணாக வாழ
எப்படி முடிகிறது

●

எழுந்து வரும் அலைகள்
கரையைக் கடக்கும்
முயற்சிகள் இல்லை என்றால்
வெற்றிகள் சாத்தியமில்லை

●

துப்பாக்கிக் குண்டாக
நெஞ்சைத் துளைத்தது
சொற்களால் சுடுதல்
வாழும் கால நினைவாக

●

அன்புக்கான காத்திருப்பு
அறுபதிலும் தொடர்கிறது
வாழ்ந்து முடிக்கும் வரை
காதல் அழிவதில்லை

**- அப்புத்துரை ஜெகன்**
சுவிஸ்

# தூய்மை இந்தியா

மணிராம் கார்த்திக்



இரவு நேர பணி முடித்து, காலை எட்டு மணிக்கு வீட்டுக்குள் நுழைந்தான் ராகவன். உள்ளே நுழைந்ததும், மனைவி கலா 'என்னங்க, வந்ததும் உட்காராம, அப்டியே விகாசை பள்ளிகூடத்திற்கு சென்று விட்டு வந்திருங்க, அவனுக்கு இன்னைக்கு பேச்சு போட்டி இருக்காம். அதான் அதுக்கு பயிற்சி எடுக்க பள்ளிக் கூடத்திற்கு சீக்கிரமா போகணும்னு சொன்னான்" என்று கூறினாள்.

ராகவன் - கலா தம்பதியினருக்கு ஒரே ஒரு பையன், விகாஷ் ஆறாம் வகுப்பு தனியார் பள்ளியில் படிக்கிறான். ராகவன் தனியார் கம்பெனில இரவு நேர மெசின் ஆப்ரேட்டோரா வேலை பார்கிறார். கலா வீட்டில் இருந்து குடும்பத்தை கவனிக்கிறாள்.

"என்னடி, வேலைய முடிச்சு வந்து ஒரு அஞ்சு நிமிஷம் உட்காந்துட்டு போறேனே" என்று ராகவன் கூற ,

"வந்து உட்காரலாம் , தூங்கலாம், சரியா இப்போ முத கிளம்பி பள்ளிகூடத்தில் விட்டு வாங்க" என்று சற்று அழுத்தமாக கலா கூற,

கோவமாக எழுந்தான் ராகவன்.

மகன் விகாசை ''டேய் வாடா, பள்ளிகூடத்தில் உன்னை விட்டு வந்தா தான், உன் அம்மா என்னை வீட்ல நிம்மதியா இருக்க விடுவா'' என்று கோவமாக அழைத்து சென்றான்.

"என்னங்க போறது போறீங்க, இந்த குப்பைய போட்டு போங்க" என்று வாசலில் குப்பை கவரை தூக்கி வைத்தாள் கலா.

ரொம்பவே கோவம் வந்தது ராகவனுக்கு.

இரு சக்கர வாகனத்தை தயார் நிலைக்கு கொண்டு வந்து , மகன் விகாசை தூக்கி எரிச்சலுடன் அமர வைத்தான்.

குப்பைய கொட்ட ஒரு ஆளு, இவ பார்க்கிற வேலைக்கு என்று வாயில் முனங்கிய படி கிளம்பினான் ராகவன்.

தெரு முற்றத்தில் ஒரு குப்பை தொட்டி.

வாகனத்தில் சென்றவன் அந்த குப்பை தொட்டியை பார்த்ததும் , தன் வண்டியில் வைத்திருந்தா குப்பை கவரை தூக்கி எரிந்தான். அந்த குப்பை கவர் தொட்டியில் விழாமல் கீழே விழுந்தது.

''அடச்சே!'', என்று நினைத்த படி செல்ல முயன்ற ராகவனை, வாகனத்தின் முன் வந்து தடுத்தான் மாநகராட்சி குப்பை அள்ளும் சுந்தரம்.

"சாரு , என்ன இப்படி? இப்ப தான் குப்பைய அள்ளி முடிச்சோம். அதுக்குள்ள

குப்பைய வெளியில போட்டு போறீங்க?" என்று மாநகராட்சியை சுத்தம் செய்யும் ஊழியர் சுந்தரம் ராகவனை நோக்கி கேள்வி எழுப்பினான்.

சுந்தரத்தின் கேள்வி, மேலும் ராகவனை கோவமாக்கியது.

''குப்பை அள்ளுற வேலை தான பார்க்கிற, பின்ன என்ன? குப்பை இருந்தா அள்ளுயா, அத விட்டு என்னமோ பில் கலெக்டர் மாதிரி பேசுற" என்று கோவமாக சுந்தரத்தை எதிர்கொண்டான் ராகவன்.

"சார், குப்பை அள்ளுற வேலை தான், நான் பார்க்கிறேன். இப்போதான் குப்பைய சுத்தம் பண்ணிட்டு வண்டி கொண்டு போயிருக்கு. புது குப்பை தொட்டிய வச்சிட்டு போயிருக்கு. குப்பைய சரியா அந்த தொட்டியில போட சொன்னா? அத விட்டு என்னமோ பேசுறிங்க" என்று சுந்தரம் கூறினான்.

''போயா! இருக்கிற கோவத்தில நீ வேற!'' என்று ராகவன் கூறி, கிளம்ப முயன்றான்.

ராகவனை தடுத்து நிறுத்தினான் சுந்தரம்.

"ஒழுங்கா குப்பைய தொட்டியில் போடுங்க சார். நீங்க பண்றத பார்த்து அடுத்து உங்க பையனும் செய்வான். உங்க ஒழுக்கம் தான் அவனுக்கு வரும். நீங்க ஒழுங்கா நடந்துக்க முயற்சி பண்ணுங்க." என்று சுந்தரம் கூற,

சுந்தரத்தை முறைத்தான் ராகவன். அடி தடி ஆகிருமோ என்ற பயத்தில் விகாஸ்.

அப்போது வண்டியிலிருந்து விகாஸ் இறங்கி அந்த குப்பைய தொட்டியில் போட்டான்.

"அண்ணா குப்பைய போட்டேன். நன்றி உங்க கருத்துக்கு. நான் பள்ளிக்கூடம் போகணும் நேரம் ஆகுது" என்று விகாஸ் சுந்தரத்திடம் தயவு கூர்ந்து கேட்டான்.

"நல்லது, தம்பி. இது தான் ஒழுக்கம். ஆனா சொல்லி வரக்கூடாது , சொல்லாம வரணும்" என்று சுந்தரம் கூறி கொண்டிருந்த போது, ராகவன் வண்டியை எடுத்து, அங்கிருந்து கிளம்பினான்.

ராகவனை பார்த்து சிரித்தபடி சுந்தரம் தன் வேலையை பார்க்க ஆரம்பித்தான்.

பள்ளியை நோக்கி விரைந்தான் ராகவன்.

பள்ளிகூட வாசலில், விகாசை இறக்கி விட்டு கிளம்ப முயன்றான்.

அப்பா மறுபடியும் அவர்ட்ட போய் சண்ட போடாதிங்க. இதோட விட்ருங்க. இன்னைக்கு பேச்சு போட்டி இருக்கு என்று அம்மா சொன்னங்க, அத பத்தி நீங்க கேக்கல." என்று பயத்துடன் ராகவனை நோக்கி கேட்டான் விகாஸ்.

"ஆமா விகாஸ், அந்த ஆல நான் பார்த்துகிறேன். நீ பயபடாத. பேச்சு போட்டி என்ன தலைப்பு? கேக்க மறந்துட்டேன்!" என்று ராகவன், விகாஸிடம் கேட்டான்.

"பேச்சு போட்டி தலைப்பு 'தூய்மை இந்தியா', அத தான் இப்போ கண் கூட பார்த்துட்டு வந்தேன். நாம திருந்தாம அதுக்கு வாய்ப்பு இல்ல என்பதை புரிஞ்சு கிட்டேன். குப்பை அள்ளுரவங்கள கேவலமா பார்க்கிறோம். அவங்களும் மனுசங்க தான. நீ பேசுனது தப்பு தான அப்பா. அவரு உன்னை மரியாதையா தான் பேசுனாரு. நீ தான் அவர மதிக்காம கேவலமா பேசுன. தூய்மை இந்தியா

திட்டம் அல்ல, ஒவ்வொருவரின் கடமை. சுத்தம் சோறு போடும் என்று முன்னோர் கள் சொன்னது சும்மாவா!” என்று அப்பா ராகவனை வெளுத்து வாங்கினான் விகாஸ்.

“சரி அப்பா , பேச்சு போட்டிக்கு நல்ல விசயம் உன்னால கிடைச்சது. நன்றி.இத பற்றி பேசி பரிசு வாங்கிருவேன். பரிசோட உங்கள பார்க்கிறேன் ” என்று விகாஸ் கூறி, பள்ளிக்கு கிளம்பினான்.

விகாஸ் நடத்திய பாடத்தை வேறு வழி இல்லாமல் ஏற்று கொள்ள விரும்பினான் ராகவன். மகனின் பேச்சு அவனுக்கு தந்தது.

மாலை நேரம்,

மகன் விகாஸ் வெற்றியுடன் வர வேண்டும் என்ற நினைப்பில் வீட்டை நோக்கி நகர்ந்தான் ராகவன்.

தூய்மை இந்தியா திட்டம் அல்ல. ஒவ்வொருவரின் கடமை. நம்மை சுற்றி இருக்கும் சூழலை சுத்தமாக வைத்தால் தான் ஆரோக்கியம் கிடைக்கும்.

---

# புரிவாயா... அவளை...



அழுக்காடை அவளது
அலுக்காதது உனக்கு..

சமையலில் கெட்டிக்காரி
சடை நீள பின்னல்காரி..

இயந்திர உழைப்பினாள்
இரங்கும் இயல்பினாள்..

ஒதுங்கும் நிழல்
ஒத்தட கரங்கள்..

வரண்ட மேனிக்கு
வாய்க்காத வரங்கள்..

ஓய்வில்லை என்பதற்காய்
உணர்வில்லை என்றாகுமா..

அடிமைத்தளை போதும்
அவளும் பெண்தானே..

வேண்டாம் அவளுக்கு
வேங்கைகளின் சுற்றம்..

வேரற்று நிற்கும்
வேடமணியாப் பேதையவள்..

கரும்பாக இனிக்கும்
கள்ளமில்லா காரிகையவள்..

உடைந்த உள்ளத்தால்
உருமாறிப் போயிருப்பவள்..

உணர்வாய் நன்றே
உனக்கானவளே அவள்..

புரிவாய் இன்றே
புனிதமான உறவவள்..

மனையாள் எனும்
மணமிக்க மலரவள்..

அன்பால் இணைந்து
அரவணைத்து மகிழ்..

கூடுமவள் அழகில்
குழைந்துதான் போவாய்...

நுஸ்ரா லியாகத் அலி
(என்.நூர்)
தர்கா நகர்.

# நல்லது நிறையட்டும் அல்லது தொலையட்டும்

நல்ல செயல்கள் எமக்கு எப்போதும் நிறைய வேண்டும். அது அல்லாமல் தீய செயல்கள் என்றும் எமை விட்டு தொலைய வேண்டும்.

தீய நட்பும் தீமையான எண்ணங்களும் எங்கள் வாழ்வில் தொடராமல் இருப்பதை உறுதியாக்கி வாழுங்கள். நன்மை தரக் கூடிய விடயங்களை ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள். நல்ல செயல்கள் நல்ல எண்ணங்கள் எங்கள் மனதில் எப்போதும் வேருன்ற வேண்டும்.

பொதுவாக ஒரு மனிதவாழ்வில் ஏன் நல்லனதான் செய்ய வேண்டும்?; என கேட்கலாம். நல்லது செய்கையில் மனமானது அதை நோக்கி நகரும். அதற்கான வேலைகளில் தொடர நினைக்கும்.

தீயவைக்கு ஏன் கூடுதல் நேரத்தை செலவழிக்க வேண்டும். அதுவும் சிறப்பன்று.

அதனால் என்ன இலாபம்? மாறாகத் தீமையே பெருகி விடும்.

நல்ல மனம் வாழும்

நல்ல செயல்: ஓங்கும்

நல்ல பாடம் இதமாகும்

இப்படி பார்த்தால் நல்லது சிறப்பு. அல்லது சிறப்பன்று.

"தோன்றின்; புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

அதாவது மக்களாய்ப் பிறக்கின்ற புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க வேண்டும் என்றார் வளளுவர்.

அப்படி இல்லாவிட்டால் தோன்றா மலே இருப்பது நன்று என்றார்.

அதாவது நல்ல செயல் புரிபவர்களுக்கு நல்ல பிறப்பு. நல்ல புகழ் தேடி வரும்.

வாழ்க்கையின் அனுபவம் நல்ல கெட்டதை பிரித்துப் பார்த்து உணர்ந்து கொள்ள வைக்கிறது. நன்மைகள் புரிபவர்களுக்கு நல்ல செல்வம் நிறைவான வாழ்க்கை கிடைக்கும்.

மற்றவர்களுக்கு ஏதோ ஒன்று குறைவாகவும் கிடைத்து விடும்.

நல்லது நிறையட்டும். மனிதன் பகுத்தறிவு உள்ளவன். எதுவெல்லாம் நன்மை தருகிறதோ! அதை உயர்வாகப் பிரித்துப் பார்த்து உணர்ந்து கொள்ளலாம்.

அல்லாதவற்றை விட்டு விடலாம்.

எனவே நல்லவற்றை சேருங்கள். நல்ல நண்பர்கள் நல்ல புத்தகங்கள் நல்ல அறிவுரைகள் நல்ல சிந்தனைகள் நல்ல கருத்துகள். இவற்றை சேமிப்பாக்குங்கள்.

நல்லவை நிறையும். நன்மைகள் தொடரட்டும். வாழ்க்கை இனிப்பாகட்டும்.

**தமிழ்மணி நகுலா சிவநாதன்**
*யேர்மனி*

# ஹைக்கூ கவிதைகள்

கிளைவிட்டுக் கிளைவிட்டு
வளர்ந்து செல்கிறது
சுவற்றில் விரிசல்

சிற்றிடைவெளி
முத்தமிட்டுக் கொள்ளும்
இரு பாறைகள்

உறவுகளை இழந்ததும்
பல்லின வாழ்வு பெறுகிறது
காடாகும் பாழ் வீடு

என்னே ஒற்றுமை
காக்காய் கடி மாம்பழம்
கோதி உண்ணும் கிளி

காலத்தை அசைத்து
கடத்தி விடுகிறது
வினாடிமுள்

அணைத்தபடி உறங்கி
உயிர் துறக்கின்றன
பூவில் வயதான தேனீக்கள்

நள்ளிரவில் மழை
நனைந்து இருக்குமோ?
வான் நிலவு

புள்ளி மான்
காடெல்லாம் பயணிக்கிறது
கொம்புகளிடையே சிலந்திவலை

கொக்கு மட்டுமல்ல
ஒற்றைக்கால் தவத்தில்
காதலனின் ரோஜா

கறுப்பு வெள்ளை புகைப்படம்
சுமந்து வருகிறது
வண்ண நினைவுகள்

காடழிப்பு
கொடுமையாக இருக்கிறது
கோடைகாலம்

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை





வடிவமைப்பு சேவைகள்
கல்வி
பாடத்திட்டம்
கையேடுகள்
மீள் பதிப்பு
மொழிபெயர்ப்பு
சஞ்சிகைகள்
மலர்கள்
நூல்
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு..
+94 70 377 0731
designglitz123@gmail.com

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

ஏப்ரல் 2025

